www.tamilarangam.net

# சமர்

இதழ் 5,6



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உள்ளே...


* உங்களுடன் சமர்...
* வாசகர்களும் நாங்களும்
* வாசகர்களுக்கு ஓர் வேண்டுகோள்
* சமரின் விளக்கம்
* எனது தோழிக்கு
* ஸ்டாலின் பற்றிய பிரச்சனை மீது (தொடர்ச்சி...)
* ஊர்வலம்
* தேசிய விடுதலைப்போராட்டமும் தேசிய சக்திகளும்
* புதிய சுவடுகள்
* என்.எல்.எப்.டியின் வரலாறு (தொடர்ச்சி...)
* யார் விமலேஸ்வரன் ?

www.tamilarangam.net

# உங்களுடன் சமர்...

வழமை போல கடந்த இதழுக்கும், இவ்விதழுக்குமிடையில் நீண்ட இடைவெளி. இதற்கிடையில் எத்தனையோ நிகழ்வுகள். இந்நிகழ்வுகளுக்கு வெளியில் சமர் இயங்குவதாக ஒரு சாராரின் விமர்சனம். இது ஓரளவு உண்மையாகவிருந்தாலும் முழுமையானதல்ல. சமர் மூன்றாம் பாதையை அமைத்திடும் போக்கில் செயற்பட முனைகின்றது. அந்த வகையில் கடந்த கால, நிகழ்கால அரசியல் போக்குக்களையொட்டி விமர்சனத்தை முன்வைக்கின்றது. கடந்த கால, நிகழ்காலத்தின் மீதான அரசியல் விமர்சனம் எதிர்காலத்தில் எழும் போராட்டத்தை வழிநடத்தும்.

நாம் கடந்த காலத்தின் மீது விமர்சனம் செய்யும் அதே நேரத்தில், மேலும் ஆயிரக்கணக்கில் மக்கள் கொல்லப்பட்டு விடுகின்றார்கள். நாம் இக்கொலைகளுக்கு வெறும் எதிர்ப்பைக்காட்டுவதாலோ அல்லது கண்டிப்பதாலோ மட்டும் இக்கொலைகள் தடுக்கப்பட்டு விடாது. இக்கொலைகளை நிறுத்தும் வகையில் மூன்றாவது பாதைக்கான அமைப்பை உருவாக்க வேண்டும். எப்பொழுது மூன்றாவது பாதை உருவாகின்றதோ அப்போதிருந்தே தமிழ்மக்களின் எதிர்காலம் நம்பிக்கைக்கு உரியதாக மாற்றப்பட்டு விடும்.

இந்த வகையில் மூன்றாவது பாதை அமைத்திடும் நோக்கில் நாம் கொண்டிருந்த நிலைப்பாடு, சில சஞ்சிகைகளில் கதை, கவிதை மட்டும் கவனத்தில் எடுத்து செயற்படுவதை கண்டித்தோம். ஆனால் அதற்காக அவை சமூகத்திற்கு அவசியமற்றது என்று அர்த்தமல்ல. இவை இச்சமூகத்தின் மீது பாதிப்பை ஏற்படுத்த மூன்றாவது பாதை உருவாகியிருக்க வேண்டும். மூன்றாவது பாதை உருவாகாமல் தடுப்பதில் இரு பிரதான விடயங்கள் பங்குபற்றுகின்றன. இவை இரண்டிற்கும் எதிராக சமர் முழுமையாக போராட முற்படுகின்றது. இலங்கையரசு, புலிகள் என்ற தரகுமுதலாளித்துவம் முதல் தடையாகும். திரிபு வாதமும், பிழைப்பு வாதமும் இரண்டாவது தடையாகும். இரண்டாவது தடை முற்போக்கு அலைகளுடன் வெளிவருகின்றது. முதல் தடை எப்பொழுதும் நேருக்கு நேராகவும், இரண்டாவது தடை முதுகுக்கு பின்னாலும் செயற்படுகின்றது. இவ்விரண்டையும் உடைப்பது மூன்றாவது பாதையின் மிக அடிப்படை விடயமாகும்.


இவ்விரண்டு விடயமும் மூன்றாவது பாதையை உருவாக விடாமல் தடுக்கும் இன்றைய நிலையில், தொடர்ந்து ஆயிரக்கணக்கில் மக்கள் கொல்லப்பட்டுக்கொண்டிருக்கின்றார்கள். பல தடவைகள் பேச்சுவார்த்தைகளை நடத்த நபர்களும், குழுக்களும் செயற்படுகின்றனர். இவர்கள் பேச்சுவார்த்தையை நடாத்தவென புறப்பட்ட நேரங்களில் புதிய புதிய இராணுவ நடவடிக்கைகளை முழுத்தமிழ் மக்கள் மீதும் நடத்தி முடித்து விடுகின்றனர். இந்தியா விடுதலைப்புலிகள் மீது தடை என்ற பெயரில் தமிழீழப்போராட்டத்தையே தடைசெய்து, தமிழ்மக்களை கொன்று குவிக்க பச்சைக்கொடியும் காட்டியுள்ளது. இன்று தமிழ்மக்கள் மீது தொடர்ச்சியாக பாரிய தாக்குதல்களை சிறீலங்கா இனவெறி இராணுவம் காட்டுமிராண்டித்தனமாக கட்டவிழ்த்து விட்டுள்ளது.

www.tamilarangam.net

தெரிவுக்குழு நீண்டகாலத்தை கடத்தி எந்த உருப்படியான தீர்வையும் முன்வைக்காமல், மீண்டும் மீண்டும் தெரிவுக்குழு தீர்வு எனச்சொல்லி இராணுவ நடவடிக்கைக்கு சாதகமான நிலையை ஏற்படுத்துகின்றனர். இலங்கையரசுடன் கைகோர்த்த தமிழ் துரோகக்குழுக்கள் தெரிவுக்குழுவை கூறியே காலத்தை கடத்துகின்றனர். அதே நேரம் புலிகள் மீதான இந்தியாவின் தடையை தமிழீழப்போராட்டத்தில் புரட்சிகரமான நடவடிக்கையென, துரோகவாய்களால் ஒரு பாராட்டைக்கொடுத்து அண்டிப்பிழைக்க முயலுகின்றனர். புலிகளோ மேலும் பாசிசத்தை மக்கள் மீது கட்டவிழ்த்து விட்டு, ஈழப்போராட்டத்தை முன்னேறுவதாக உண்மைக்கு மாறாக மிரட்டலுடன் கூறுகின்றனர். மறுத்து கூறுவோர் மீது கொலைப்பயமுறுத்தல், கடத்தல் மூலம் வாய்களை மூடிவைக்க முயலுகின்றனர்.

மக்களை நேசிக்கும் அனைவரும் எதிர்காலத்தின் வெற்றிக்கு துரோகத்திற்கும், பொய்களுக்கும், உருட்டல், மிரட்டல்களுக்கும் எதிராக ஒன்றிணைந்த திரிபுகளையும், பிழைப்பு வாதத்தையும் எதிர்கொள்ள கைகோர்க்க ''சமர்'' அழைக்கின்றது.

*****************************



நன்றி காந்தி—காங்கிரசு துரோக வரலாறு

www.tamilarangam.net

## வாசகர்களும் நாங்களும்

சமரின் கருத்து தொடர்பாக தூண்டிலில் கருத்துக்கள் சொல்லப்படுகின்றது. அது பற்றி அறிவது அவசியமாகின்றது. மனிதம், சமர் இரண்டையும் ஒரு தட்டில் போட்டு பார்க்க முடியவில்லை. எனது நிலைப்பாடு சீனத்தலைமையும், மூன்று உலகக்கோட்பாடும் பிழை என்பதும், தமிழீழத்திலிருந்து முழு இலங்கைக்கான போராட்டம் பற்றிய விடயத்தில் சற்று தத்துவார்த்த ரீதியில் சிந்திக்க வேண்டும், அவசரம் கூடாது என எண்ணுகின்றேன். எதற்கும் ஒரு இதழுடன் மட்டும் முடிவுக்கு வருவது முட்டாள்தனம்.

தூண்டிலில் சமரும் அழிவுக்காரர் என்று சொல்லும் பாணியானது, தீண்டாமை மட்டும் தேசியப்பிரச்சனை என்று கூறிய, மரபு வாதிகளில் நின்று சற்றுமுன்னேறி, ஒரு அடைப்பு வாதத்திற்குள் வீழ்ந்த சீனசார்பு இடதுகள் தமிழ் தேசிய இனத்தின் பிரச்சனையை தீண்டத்தகாத பிரச்சனை போல் கருதினார்கள். கூட்டணியும் சாதியப்பிரச்சனையை தீண்டத்தகாத பிரச்சனை போல் கருதினார்கள். தமிழ் தேசியப் போக்குக்குள் இருந்து தமது கருத்துக்களை வலியுறுத்த முடியாது வெளியேறிய சமூக விஞ்ஞானக்கண்ணோட்டம் கொண்டிருப்பவர்கள் கூட ''அழிவு யுத்தம்'' என்று கூறுவது ஒரு கேலித்தனம் சேர்ந்தே தொனிக்கின்றது என்றே எனக்குப்படுகின்றது.

கருத்துக்கள் கருத்துக்களாக மதிக்கப்பட்டு ஆராயப்படுதல் தான் இயங்கியல் போக்குக்கான அழகும், கருத்துக்கு மதிப்பழித்தலுமாகும் என்று நான் கருதுகின்றேன். கருத்துக்கள் எள்ளிநகையாடப்படுதல் ஒரு பத்திரிகைக்கான ஜனநாயகத்தன்மையை மறந்து வாசகர்களை சரியாக சிந்திக்க விடாது மயக்க நிலையில் சில பிழையான அர்த்தத்தை உண்டு பண்ணி, அந்த நிலையில் கருத்து சொல்பவர் பத்திரிகையினை பிழையாக விளங்கிக்கொள்ள தூண்டுதலாக அமைந்து விடுகின்றது. (இது கடந்த கால சீன தலைமைகள் பற்றி எல்லாப்பத்திரிகைகளும் எழுதும் போது நான் இது பற்றி சீன சார்பு க.கட்சி தலைவர்களுடன் பேசும் பொழுது முதலாளித்துவப் பத்திரிகைகள் அப்படித்தான் கூறும் என்று கூறியே தப்பிக்கொண்டனர். இது தவிர கட்சிக்கட்டுப்பாடு என்று கட்டியே போட்டு விடுவார்கள். இந்த மாதிரியான துரோகத்தனமான நடவடிக்கையினால் கிடைத்த அனுபவங்கள் எம்மை மேலும் சிந்திக்கத் தூண்டியது. அடைப்புவாதப்போக்கு தமிழ் இயக்க ஆயுதக்கவர்ச்சி என்பன; அக்கட்சி அழிவதற்கு காரணமானதாலும் ''புதிய ஜனநாயக கட்சி'' செந்தில் - மணியம் போன்றவர்கள் கட்சி சீர்குலைவுக்கு காரணமாகியது.)

தமிழ் பகுதியில் (யாழ்ப்பாணம்) 70பதுகளில் பலமான கட்சி ஒன்று இருந்ததும், அதிலிருந்து பிரிந்த செந்தில், மணியம் (இவர் இறந்து விட்டார்). தற்போது ''புதிய ஜனநாயக கட்சி'' அமைத்துள்ளனர். இவர்களுடன் உங்களுக்கு உடன்பாடு இல்லை என சமர்(3) மூலம் அறிந்து கொண்டமையால் சில விடயங்களை சம்பந்தம் சம்பந்தமில்லாமல் எழுதியுள்ளேன். இனங்கண்டு கொள்ள முடியுமாயின் மகிழ்ச்சியடைவேன்.

-- *சிவநாதன் (டென்மார்க்)* --



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நீங்கள் எழுதியுள்ளீர்கள் சீனத்தலைமையும் மூன்று உலகக்கோட்பாடும் பிழையென்று; இக்கருத்து தொடர்பாக சீனவிலிருந்த மாவோ தலைமையிலான சீனக்கம்யூனிஸ்ட் கட்சியையும், மூன்று உலக கோட்பாட்டையும் பிழை என்கின்றீர்களா? அல்லது இன்றைய சீனத்தலைமையையும் இலங்கையிலுள்ள சீன கம்யூனிஸ் கட்சியையும் பிழை என்று கூறுகின்றீர்களா என்பதை கடிதம் தெளிவாக சுட்டிக்காட்டவில்லை. இருந்தும் இது பற்றி விவாதிக்க முற்படுகின்றோம். மாவோ தலைமையிலிருந்த சீன கம்யூனிஸ் கட்சியை நாம் ஏற்றுக்கொள்ளுகின்றோம். அக்காலத்தில் தவறுகள் இருந்திருக்கலாம் அவை விமர்சனத்திற்கு உட்பட்டவை. ஆனால் இன்று இருக்கும் சீனத்தலைமையை நாம் ஏற்றுக்கொள்ளவில்லை. இன்று சீனாவில் ஆட்சி அதிகாரத்தில் உள்ளவர்கள் சீரழிந்த முதலாளித்துவ மீட்பாளர்களே. இவர்கள் இப்படியெனில் இலங்கையிலுள்ள சீனசார்பு கம்யூனிஸ்டுகள் (புதிய ஜனநாயக கட்சிக்காரர்கள்) பிழைப்பு வாதிகளாகவே உள்ளனர். மற்றும் மூன்று உலக கோட்பாடு தொடர்பாக எம்மிடம் புத்தகமின்மையும், அது பற்றி நாம் ஒரு கருத்தையும் வந்தடையவில்லை. இது தொடர்பாக பொதுவாக மூன்று உலக கோட்பாட்டை மாவோ வரையறை செய்த போது, அக்காலத்தில் உலக நிலமையோடு பொருந்துவதாக உருவாக்கப்பட்டது. ஆனால் அதுவே பொதுவானது என இன்று பாவிக்க முற்படுவது, பிழைப்பு வாதத்தின் அடிப்படை குணாம்சமே.

''தமிழீழத்திலிருந்து முழு இலங்கைக்கான போராட்டம் பற்றிய விடையத்தில் சற்று தத்துவார்த்த ரீதியில் சிந்திக்க வேண்டும்'' என்ற உங்கள் கருத்து தொடர்பாக சமூகத்தில் எழும் முரண்பாடுகளிலிருந்தே போராட்டம் வளர்த்து எடுக்கப்படுகின்றது. அந்தவகையில் இனமுரண்பாடு 1983க்குப்பின் கூர்மையடைந்தது. இம்முரண்பாட்டை எந்த மார்க்கெடியவாதியும் கவனத்தில் எடுக்கத்தவறின்; ஒரு புரட்சிக்கு தலைமை தாங்க முடியாது. குறிப்பிட்ட இம்முரண்பாடு இலங்கையில் தீவிரமடைந்து உள்ளது. இம்முரண்பாட்டை முன்னெடுத்தலுக்கூடாகவே தமிழீழம் அல்லது இலங்கைக்கான போராட்டத்தை முன்னேடுக்க முடியும் என்பதை நீங்கள் மறுக்க மாட்டீர்கள். அந்த வகையில் எம்மக்கள் மத்தியில் உள்ள இம்முரண்பாட்டை முன்னெடுக்கும் போது தமிழீழம் தீர்வாக முன் வைக்கப்படுகின்றது. இப்போராட்டத்தில் ஒரு கட்டத்தில் தமிழீழம் நோக்கி முன்னேறும் பொழுது, சிங்கள மக்கள் மத்தியில் எழும் ஒரு புரட்சிகர கட்சி நேசக்கரம் நீட்டுவதைப்பொறுத்தே ஐக்கிய இலங்கைக்கான மொத்தப்புரட்சியா என்பதை வழிக்காட்டும். அப்படி சிங்கள புரட்சிகர கட்சி நேசக்கரம் நீட்டாமல் இருக்கும் வரை தமிழீழத்துக்கான போராட்டம் தடைப்பட்டு விடாது. தொடரும் அதன் வெற்றி தமிழீழத்தை உருவாக்கும்.

''தூண்டில், சமரும் அழிவு யுத்தத்திற்காக என்ற பாணியானது'' என்று நீங்கள் குறிப்பிட்ட விடயத்தில் புலியின் யுத்தம் அழிவு யுத்தத்துக்கானது என சமர் சொல்லவில்லை. இது பற்றி இன்னும் சமர் கருத்து சொல்லவில்லை. குறிப்பிட்ட விடயத்தில் தூண்டிலின் பார்வையை ''தீண்டாமை மட்டுமே தேசியப்பிரச்சனை என்று கூறிய, மரபுவாதிகளில் நின்று சற்று முன்னேறிய ஒரு அடைப்பு வாதத்திற்குள் விழுந்த சீன சார்பு இடதுகள் தமிழ் தேசிய இனத்தின் பிரச்சனையை தீண்டாத்தகாத பிரச்சனை போல் கருதினர். தமிழ் தேசிய போக்குக்குள் இருந்து தமது

www.tamilarangam.net

கருத்துக்களை வலியுறுத்த முடியாது வெளியேறிய சமூக விஞ்ஞான கண்ணோட்டம் கொண்டவர்களிடம் கூட ''அழிவு யுத்தம்'' என்று கூறுவது ஒரு நய்யாண்டித்தனம் சேர்ந்தே தொனிக்கின்றது என எனக்குப்படுகின்றது'' என்று குறிப்பிட்டுள்ளீர்கள் தூண்டிலின் பார்வையை நீங்கள் குறித்த வரையறைக்குள் பார்ப்பது தவறு. தூண்டில் அழிவு யுத்தமா? தடுப்பு யுத்தமா? என விவாதிப்பது ஓர் ஆய்வின் தொடராகவே ஒழிய ஒரு வறட்டுத்தனமாகவல்ல. தமிழீழப்போராட்டத்தை ஆதரிக்கும் அதே நேரம் அதற்கான போராட்டத்தலைமையை உருவாக்கவும் தூண்டில் முனைகின்றது. அந்த வகையில் புலிகளின் யுத்தத்தை அழிவு யுத்தமா? தடுப்பு யுத்தமா? என விவாதிக்க முற்படுகின்றனர்.

''கருத்துக்களை கருத்துக்களாக மதிக்கப்பட வேண்டும்'' என்ற வாதத்தை சமர் பூரணமாக ஏற்றுக்கொள்ளுகின்றது. உங்கள் பார்வையை சிலர் தவறாகப்பயன் படுத்தக்கூறுகின்றனர். அதாவது கருத்தை விமர்சிக்கும் உரிமையை தடுக்கின்றனர். ஒரு கருத்தின் மீது மாற்றுக்கருத்தை முன் வைக்கப்படும் போது அக்கருத்து தொடர்பாகவுள்ள முக்கியத்துவத்தை ஒட்டி விமர்சனம் கடுமையானதாகவோ, மென்மையானதாகவோ அமையலாம். இவைக்குள் எள்ளி நகையாடப்படுவது கூட அமையலாம். இப்படியான விமர்சனம் மீது விமர்சனம் பிழை என வாதாட முற்படுபவர்கள், தங்களின் கருத்தின் மீதான பலவீனத்தை கொண்டே இப்படி வாதாடுகின்றனர்.

''கட்சி கட்டுப்பாடு என்று கட்டியே போட்டு விடுவர்'' என்று நீங்கள் செல்வதில் ஒரு வறையறைக்குள் பார்க்க முடியாது. கட்சி கட்டுப்பாடு ஒரு கட்சிக்குத்தேவையானது. கட்சிக்கட்டுப்பாடு இல்லையெனில்: கட்சி ஒன்று இருக்க முடியாது. ஒரு கட்சிக்குள் மாற்றுக்கருத்துக்கு ஜனநாயகம் இருக்க வேண்டும். அக்கருத்தை வைக்கும் ஒழுங்கு கட்சிக்குள் இருக்க வேண்டும். இது இல்லாத பட்சத்தில் ஒரு கட்சி கட்சியாகவே இருக்காது. கட்சிக்கட்டுப்பாடு என்று ஒரு கருத்தை விவாதிக்கத்தடுப்பது பிழை. அதே நேரம் கட்சி தனக்கென ஒரு கட்டுப்பாட்டை கொண்டிருக்க வேண்டும். கட்சி எப்பொழுதும் ஜனநாயக மத்தியத்துவத்தைக்கொண்டு செயற்பட வேண்டும்.

-- ***ஆசிரியர்குழு*** --

---

''புலிகள் எந்த வர்க்கத்தினதும் பிரதிநிதிகள் அல்ல, அவர்களின் நலன்களுடன் தமிழ்மக்களின் நலன்களும் சில பின்னிப்பிணைந்துள்ளது''. புலிகள் தாம் சார்ந்த வர்க்கத்திற்காக நிற்கின்றார்களா? அப்படியாயின் இந்தியாவிடம் ஆயுதம் வாங்கி அவர்களையே நம்பி ஆயுதம் ஒப்படைப்பதாகக்கூறியவர்கள் பின் தங்கள் நலன் பாதுகாக்கப்படாத போது அவர்களையே எதிர்த்தார்கள். இலங்கை அரசை நம்பவில்லை என்றவர்கள் பின் பிரேமதாசா அரசுடன் பேச்சு நடத்தியது மட்டுமல்லாமல், ஆயுதமும் வாங்கி தற்போது அவர்களுடன் மோதுகின்றார்கள். ஏன்? இங்கு அவர்கள் நலன் பாதிக்கப்பட்டுள்ளது. தங்களின் நலன் பாதிக்கப்படும் என்றால் புலியினர் இஸ்ரேல் என்ன அமெரிக்காவுடனும் மோதத்தயார். அங்கு இருப்பவர்கள் சயனைற்றை கழுத்தில் கட்டிய தொண்டர்கள். இந்த நிலையில் அவர்களை ஒரு வர்க்கத்திற்குள் வரையறுப்பது எப்படி ?

-- ***ஜெகன் (சுவிஸ்)*** --



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இக்கருத்துக்கள் தொடர்பாக சமர்1, 2, தூண்டில், மனிதம், உயிர்ப்பு ஆகியவற்றில் விவாதங்கள் வெளிவந்தன. இவைகளையும் கவனத்தில் எடுத்துக்கொண்டே கருத்துக்களை விவாதிக்கின்றோம். அக்கருத்துக்கள் தொடர்பாக இவ்விதழில் பிறிதொரு விவாதத்தை முன்வைக்கின்றோம். தாங்கள் அவ்விவாதங்களையும் பார்க்கவும். உங்கள் கருத்தும், மனிதம் சஞ்சிகையில் வந்த கருத்துக்களையும் ஒன்றாகப்பார்க்க முடிகின்றது. உங்கள் கருத்துக்கள் தொடர்பாக மனிதத்தின் கருத்துக்களை ஒட்டி வைத்த கருத்தையும் பார்க்க. இருந்தும் உங்களது கருத்துக்களை தனியாக ஆராய முற்படுகின்றோம்.

புலிகள் எந்த வர்க்கத்தினதும் பிரதிநிதிகள் இல்லை என வாதாடமுற்படுபவர்கள் உலகில் நடுநிலை என்று ஒன்று உண்டு என வாதாட முற்படுகின்றனர். எந்த நடவடிக்கைக்கும், எந்தக்கருத்துக்கும் ஒரு வர்க்கத்தன்மை உள்ளது. இது தொடர்பாக 2ம் அகிலத்திற்கும், லெனினுக்கும் இடையில் பல போராட்டங்கள் நடந்துள்ளன. புலிகளின் நலன்களுடன் தமிழ்மக்களின் நலன்கள் சில பிணைந்துள்ளது என்ற உங்கள் வாதத்தில் புலிகளின் நலன்கள் என்று நீங்கள் கூறுவது எதை? புலிகள் தாம் சார்ந்தோருக்கேனப்போராடும் குறிக்கோள்கள் அனைத்தும் தரகுமுதலாளித்துவம் சார்ந்ததே. சிறுகுழுக்களாகவிருக்கும் இவர்கள் எப்போதும் தமது நலனுக்காகவே போராடுவார்கள். இத்தன்மை தரகுமுதலாளித்துவத்தின் சிறப்பான அம்சமும் கூட. இத்தரகுமுதலாளித்துவ கோரிக்கைகளுக்கு அப்பால் எந்தக்கோரிக்கையும் வர்க்கத்தன்மையற்றதென நீங்களோ, மனிதம் சஞ்சிகையோ சுட்டிக்காட்டவில்லை. இதை மேலும் விபரமாக மனிதம் தொடர்பான விமர்சனத்தில் பார்ப்போம். நீங்கள் சொல்வது போல் புலிகளுக்கு வர்க்கத்தன்மை இல்லையென எடுத்துக்கொள்வோம். அப்படியாயின் புலிகள் சுரண்டலை நடத்தவில்லை. இக்கருத்தை நாம் ஆராயமுற்படும் பொழுது எவ்வளவு பலவீனமானது. தமிழ்மக்கள் மீது புலிகள் சுரண்டலை நடத்துவதில் இன்று முதலிடம் வகிக்கின்றார்கள். சாதாரண ஜனநாயகத்தை அடக்கி ஒடுக்கி தங்கள் வர்க்க இருப்புக்காக சுரண்டலைப்பிரதானமாகக்கொண்டு இன்று தம்மைப்பேணுகின்றார்கள்.

இதே கருத்துகளுடன் கிட்லர், சதாம் ஹுசையின் பிரச்சனையை எடுப்போமாயின் இருவரின் குரல்களிலும் தேசியத்தன்மை (சொந்த மக்களின் கோரிக்கை) காணப்பட்டது. அதே நேரம் எதிரியைப்போன்று சொந்தமக்களை நசுக்கியபடி எல்லாவழிகளிலும் சுரண்டல்களை நடத்தினார்கள். அவர்களும் காலத்திற்கு காலம் நண்பர்களை மாற்றி தம்மைப்பாதுகாத்து கொள்ள முயன்றார்கள். அதற்காக இவர்களுக்கு வர்க்கத்தன்மை இல்லை என்றோ, எந்த வர்க்கமென்று வரையறுப்பது என்று கேள்வியெழுப்ப முடியாது. இவர்களின் வர்க்கத்தன்மை தெளிவானது. இதே போன்றே புலிகளின் வர்க்கத்தன்மையும் தெளிவானது.

புலிகள் உட்பட அனைத்து இயக்கங்களும் உருவாகிய பொழுது அவை ஒரு குட்டிபூர்சுவா இயக்கமாகவே இருந்தது. அது தனது வளர்ச்சியுடன் தனது தன்மையை மாற்றிக்கொண்டது. இந்நிலையில் தான் இந்தியா தலையிட்டு தமிழீழப்போராட்டத்தில் நடத்தியது. ஆரம்பத்தில் பயிற்சி முகாம்களை உருவாக்கிய பொழுது , ஒவ்வொரு இயக்கத்தையும் தனது வர்க்க

www.tamilarangam.net

நோக்கத்தின் அடிப்படையில் ஆராய முற்பட்டது. இதன் அடிப்படையில் தனது தரகு ஆகவும், நம்பகமான சக்தியாக டெலோவையும், ஈ.பி.ஆர்.எல்.எவையும் கணித்தது. புளொட்டிலிருந்த குழப்பமான சக்திகளின் செயற்கையை அடுத்து புளொட்டை அவதானத்துடன் கையாண்டது. புலியை அதன் பின்னணியைக்கொண்டு, புலிகளின் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுக்காது புறக்கணித்தது. பயிற்சி கொடுத்த நபர்களின் எண்ணிக்கை, பயிற்சியின் தரம், கொடுத்த ஆயுதங்களின் தொகை ஒவ்வொரு இயக்கங்களுக்கும் மாறுபட்டதாக இருந்தது. இக்காலத்தில் என்.எல்.எவ்.டிக்கான பயிற்சி நிராகரிக்கப்பட்டதுடன் தீவிர கண்காணிப்பையும் இந்தியா செய்தது. இந்தியவரசு ஒவ்வொரு இயக்கத்தையும் அதன் வர்க்கத்தன்மையையும் மதிப்பிட்டது.

இதே போல் புலிகளும் ஒவ்வொரு இயக்கத்தையும் இந்தியாவையும் மதிப்பிட்டது. ஆரம்பம் முதலே இந்தியா தொடர்பாக புலிகள் காலத்திற்கு காலம் தேவைப்படும் பொழுது இந்தியாவிற்கு எதிராக குரல்கொடுக்க முனைந்தனர். ஆனால் புலிகளில் இருந்த அரசியல் தெளிவின்மையும், பிரிதொரு ஏகாதிபத்தியத்தின் சார்பும், கீழ்மட்டத்திற்கு அரசியல் நிகழ்வுகள் தொடர்பாக மேல்மட்டம் தெளிவு கொடுக்கத்தவறியதன்விளைவே, கீழ்மட்டம் இந்தியா இறங்கிய பொழுது வரவேற்றது.

புலிகள் இந்தியா தொடர்பாக அரசியல் ரீதியில் ஆராய்ந்ததன் குறைபாடும், இந்தியா தொடர்பாகவிருந்த பயம், அவர்களுக்குள் இருந்த நெருக்கடியும், தரகுத்தன்மையை இந்தியா சார்பாக மாற்ற தயாராகவுமிருந்தனர். இதுவே ஆயுதத்தை வாங்கவும், கொடுக்கவும் முயன்றது. அதே நேரம் இந்தியா ஏமாற்றி விடும் என்ற பயமும் தான், ஒரு பகுதி ஆயுதத்தை மறைத்து வைத்ததும், இந்தியா மற்றைய இயக்கங்களை இறக்கிய பொழுது மோத முற்பட்டது. இதில் இந்தியா புலிகள் தொடர்பாக இருந்த நம்பிக்கையீனமும், தனக்கு நம்பகமானவர்களை நாட்டில் இறக்கியது. அதே நேரம் இலங்கையில் தொடர்ந்து இருக்க புலிகளுடன் மோதும் அவசியத்தையும் உணர்ந்தது. இதுவே புலிகள் தொடர்பாக இந்தியாவின் நிலையாகவிருந்தது.

இலங்கையில் இந்தியப்படையின் இருப்பை சிங்கள மக்கள் எதிர்த்த அதே நேரம் ஜே.வி.பியின் வளர்ச்சி இந்தியாவின் வருகையுடன் வேகம் கண்டது. இந்நிலைமையைத்தொடர்ந்து இலங்கையரசு ஆட்டம் காணும் நிலமை ஏற்பட்டது. இதை ஈடுகொடுக்கவே பிரேமதாசா இந்திய எதிர்ப்பு பிரச்சாரத்தை முன்னேடுத்ததுடன் இந்தியா வெளியேற வேண்டும் எனவும் கோரினார். பிரேமதாசா அரசு மேற்கத்தைய தரகுத்தன்மையை கொண்டிருந்தமையும், புலிகளும் அதேதன்மையைக்கொண்டிருந்தமையும் இருவரும் ஏகாதிபத்தியத்தின் வேண்டுகோளுக்கு இணங்க பிரேமதாசாவுடன் இணைந்து ஆயுதம் வாங்கியதும், இந்தியாவை வெளியேற்றியதுமாகும். இவ்வெளியேற்றம் மேற்கத்திய ஏகாதிபத்தியத்திற்கு அவசியமானது.

இவர்களுக்கிடையிலான மோதல்களை லெனின் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். "ஒரு ஏகாதிபத்திய நாட்டுக்கு எதிரான தேசிய விடுதலைப்போராட்டத்தை இன்னுமொரு பெரிய வல்லரசு தனது சொந்த ஏகாதிபத்திய நோக்கத்திற்காக குறிப்பிடத்தக்க

www.tamilarangam.net

சூழ்நிலையில் பயன்படுத்தி கொள்ளும்'' இக்கருத்து தொடர்பாக சமர் வெளியீடான ''அரசியல் அனாதைகளின் ஜனநாயகப்படுகொலை'' என்ற புத்தகத்தில் தெளிவாக சொல்லப்பட்டுள்ளது. இலங்கையில் ஒரு புரட்சியை தடுக்க, ஒரு புரட்சிகரமான சக்திகள் வளரவிடாமல் தடுக்க, தென்னாசியாவின் ஸ்திரத்தன்மையை உடைக்க, குழுக்களுக்கிடையிலான மோதல்களை ஏற்படுத்தியதும், இலங்கையுடன் மோதலை ஏற்படுத்தியதும் ஏகாதிபத்திய வழிமுறைகளே. இதே வகையில் இந்தியா பங்களாதேச விடுதலைப்போராட்டத்தை பயன்படுத்தியது. இது தொடர்பாக மேலும் மேற்குறிப்பிட்ட சமர் வெளியீட்டைப்பார்க்கவும்.

இஸ்ரேல் அமெரிக்காவுடன் தங்கள் நலன் பாதிக்கப்படும் போது மோதுவார்கள் என்ற விடயம் தொடர்பாகவும், முரண்பாடுகள் தொடர்பாகவும் ஆராயமுற்படுவோம். ஒத்த வர்க்கத்திற்கிடையில் முரண்பாடுகள் உண்டு. அந்த வகையில் புலிகள் இஸ்ரேலுக்குமிடையில் முரண்பாடுகள் உண்டு. சுரண்டல் பங்கு தொடர்பாகவிருக்கும் இம்முரண்பாடு நட்பு முரண்பாடாகவே இருக்கும். சில வேளைகளில் இம்மோதல் ஏற்படலாம், ஏற்பட்டாலும் மீண்டும் ஐக்கியப்படுவார்கள் எப்பொழுதும் சுரண்டலுக்கு ஆதரவாக சுரண்டப்படுபவர்களுக்கு எதிராகவிருப்பார்கள். ஒடுக்கப்பட்டவர்கள் எழும் பொழுது ஐக்கியப்படுவார்கள். இன்று ஜப்பான், அமெரிக்கா, மேற்கு நாடுகளுக்கிடையில் உள்ள முரண்பாடுகள், பகைமுரண்பாடாகத்தோன்றுவதும் , சிலவேளை யுத்தம் கூட நடக்கலாம். ஆனால் எப்பொழுதும் சுரண்டல் நடத்துவதில் ஐக்கியப்படுவார்கள். சதாம் ஹுசையின் அமெரிக்காவின் சொல்லப்பிள்ளையாக ஈரானுக்கு எதிராகப்பயன்படுத்தப்பட்டதும், பின் அமெரிக்காவுடன் மோதியதும் சுரண்டல் தொடர்பாக எழுந்த முரண்பாடே. அதே நேரம் அமெரிக்கா சதாம் ஹுசையினை அகற்றி நீண்டகாலத்தில் ஏற்படும் முஸ்லீம் அரசு ஆபத்தானது என கருதியதுமே சதாம் ஹுசையினை மீண்டும் ஆட்சியில் இருக்க அனுமதித்தது. சதாம் இருப்பதால் இன்று இருக்கும் அமெரிக்கா எதிர்ப்பு மட்டுப்படுத்தப்பட்டதாக இருக்கும் என்ற ஒரேகாரணம் மட்டுமே. எனவே சதாமின் வர்க்கத்தன்மையை வரையறுக்க முடியாது என கூற முடியாது. உலகில் எழும் யுத்தங்கள் அனைத்தும் சுரண்டல் தொடர்பானவையே. புலிகளுக்கு வர்க்கத்தன்மையுண்டு. அவர்கள் சுரண்டலை நடத்துவதில் தீவிரமாகவும் ஏகாதிபத்தியத்தின் பக்கம் சார்ந்தும் உள்ளனர்.

உங்கள் கடிதத்தில் புலிகளை ஒரு வர்க்கத்திற்குள் வரையறுப்பது எப்படி? என கேட்டுள்ளீர்கள். அப்படியாயின் புலிகளுக்கு வர்க்கத்தன்மை உண்டு என்பதை ஏற்றுக்கொள்கின்றீர்கள். எனவே புலிகளின் வர்க்கத்தன்மை என்ன என்பதே எம்முன் உள்ள கேள்வியாக இருக்க வேண்டும். அதை விடுத்து புலிகள் வர்க்கம் அற்றவர்கள் என ஏன் விவாதிக்க வேண்டும்? புலிகளின் வர்க்கத்தன்மை என்ன என்பதை தேசிய சக்திகள் தொடர்பான கட்டுரையைப்பார்க்கவும்.

--- **ஆசிரியர் குழு** ---

www.tamilarangam.net

சமர் இதழ் ஒன்றில் வெளிவந்த 3வது நிலைக்கான கோரிக்கை மிகவும் தேவையானதே. தற்போதைய போராட்ட சூழ்நிலையில், ஜனநாயக மறுப்புகளுக்கு மத்தியில், அமைப்பு ரீதியான இயக்கங்கள் தடைசெய்யப்பட்ட நிலையில் எம் மண்ணில் இம் 3வதுநிலை சாத்தியமற்றதே. எனவே புலம்பெயர்ந்தோர் மத்தியில் உள்ள முற்போக்கு சக்திகளை ஒன்றிணைத்து, பொது அரசியல் வழிமுறை ஒன்றினை சரியான விவாதங்களுக்கூடாக கண்டுபிடித்தல் இன்றைய காலகட்டத்தின் முன் உள்ள முக்கிய தேவையாகும். அத்துடன் இம் முற்போக்கு சக்திகளை ஒன்றிணைத்து ஒரு அமைப்பு ரீதியில் ஸ்தாபன மயப்படுத்தலுக்குரிய வேலைத்திட்டம் போன்றவற்றை அறிமுகப்படுத்தலும் அவசியமாகின்றது.

சரியான விவாதங்களுக்கூடாக நேச அணிகள், முற்போக்கு சக்திகள் எவை எவையென இனங்காணப்படும் அதே வேளை பிற்போக்குசக்திகளை அம்பலப்படுத்துவதும் மிக முக்கியமானதாகின்றது. இதன் பொழுது புலிகள் மீதான பார்வை தவிர்க்க இயலாததாகும்.

ஒரு சிலர் தனிய ஒரு சில நிகழ்வுகளை மாத்திரம் கருத்தில் கொண்டு (நின்று போராடுதல், தற்காப்பு யுத்தம் புரிதல் போன்ற சில நிகழ்வுகள்) புலியினர் ஒரு நேசவணி என்றும், அவர்கள் தேசியப்போராட்டத்தில் ஈடுபடுகின்றார்கள் எனவும், அவர்கள் ஒரு தேசியசக்திகள் என்றும் முடிவுக்கு வருகின்றார்கள். ஒரு சில நிகழ்வுகளை மாத்திரம் கருத்தில் கொண்டு எடுக்கப்படும் முடிவானது ஒரு ஆரோக்கியமான முடிவாக இருக்காது. முற்றுமுழுதான ஒரு பரந்துபட்ட விவாதத்தின் பின்னரே [சமூகப்பின்னணி, போராட்டத்தின் அரசியல் அடிப்படை, போராட்ட விளைவுகளும், அதனது தொலைநோக்கு பக்க விளைவுகளும் (LONGTERM EFFECT ) போன்ற அடிப்படையில் ஒரு பரந்துபட்ட முழு விவாதத்தின் பின்னரே ஒரு ஆரோக்கியமான முடிவு கிட்டும் என்பது எனது அபிப்பிராயமாகும்.

எனவே சமர் இது போன்ற ஒரு முழுமையான விவாதங்களுக்கு ஒரு மேடையாக அமையும் என்றும், புலம்பெயர்ந்தோர் மத்தியில் உள்ள முற்போக்கு சக்திகளை அணிதிரட்டி ஒரு பொது வேலைத்திட்டத்தை முன்வைக்க தன்னை முழுமையாக ஈடுபடுத்தும் எனவும் எதிர்பார்க்கின்றேன்.

*--ஸ்ரீதரன் (ஜேர்மனி) --*

********************************

www.tamilarangam.net

# வாசகர்களுக்கு ஓர் வேண்டுகோள்

"சமர்" சஞ்சிகை வெளியிடுவதில் நாம் இன்று பொருளாதார நெருக்கடியை எதிர் நோக்குகின்றோம். சமூகவிடுதலையில் அக்கறையுள்ள அனைவரும் கருத்து முரண்பாட்டை ஆரோக்கியமான நோக்கில் அணுகவேண்டும். நாம் விமர்சனங்களை கருத்தின் முக்கியத்துவத்தை ஒட்டி கடுமையானதாகவோ, மென்மையானதாகவோ முன்னெடுக்கின்றோம்.

LTTEயின் பாசிசம், மாற்றுக்கருத்தை அடக்கி, அதை வைத்திருந்தவர்களை அழித்துவரும் இன்றைய நிலையில், சமர் கூறும் கருத்துக்கள், உங்கள் கருத்துக்களுடன் மாறுபட்டாலும், மாற்றுக்கருத்து என்ற வகையில், விவாதத்தை தொடர்ந்து நடாத்த தாங்கள் எப்போதும் தயாராக இருப்பீர்கள். அந்தவகையில் சமர் தொடர்ந்துவர தாங்கள் கரமுயர்த்த கோருகின்றோம்.

இன்று வரை 15 சந்தாக்களை மட்டுமே நாம் பெற்றுள்ள நிலையில்; சஞ்சிகையை வெளிக்கொணர, தபால் செலவு உட்பட 3200பிராங்குகள் தேவைப்படுகின்றது. நாம் 72சஞ்சிகைகளை தபால்மூலம் வாசகர்களுக்கு அனுப்பி வருகின்றோம். மற்றும் சஞ்சிகைகளுக்கு 33இதழ்களை அனுப்பும் எமக்கு,தமது 9 சஞ்சிகைகள் மட்டுமே அனுப்பி வருகின்றனர். மற்றும் இந்தியா, இலங்கைக்கு இலவசமாக 37இதழ்களை அனுப்பி வருகின்றோம். இவைகள் தவிர 25 இதழ்கள் நேரடியாக விநியோகிக்கின்றோம்.

நாம் 15 சந்தாக்களை மட்டும் கொண்டு எமது கைகளால் பணம் போட்டு, நெருக்கடிகளுக்கூடாகவே சமரை வெளிக்கொண்டு வருகின்றோம். எமது நெருக்கடியை நீங்கள் உங்கள் சொந்த அனுபவத்தில் புரிந்து கொள்ளக்கூடியதே. தயவு செய்து சஞ்சிகைக்கு சந்தாக்களை அனுப்பி சமரை உற்சாகப்படுத்துங்கள். வாசகர்கள் சமரின் வளர்ச்சிக்கு (சந்தாவுக்கு அப்பால்) உதவ விரும்பின், உங்கள் பங்களிப்பை சமர் எதிர்பார்க்கின்றது.

எமது சந்தாவுக்கான வேண்டுகோள், எமது தவிர்க்கமுடியாத நெருக்கடியிலிருந்து கோருவதே. சந்தாவையொட்டி உங்கள் பதிலை எதிர்பார்க்கும் நாம், அதற்கான உங்கள் பதில் கிடைக்காத பட்சத்தில், நாம் தொடர்ந்து சமர் அனுப்பமுடியாத நிலையில் உள்ளமையை சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். மற்றும் எமக்கு சஞ்சிகையை அனுப்பாத சஞ்சிகையாளர்களுக்கும் இவ்விதழுடன் உங்கள் சஞ்சிகை கிடைக்காத பட்சத்தில் நிறுத்த வுள்ளதை மனவேதனையுடன் அறியத்தருகின்றோம்.

எமது இந்த அறிவித்தல் எமது தவிர்க்கமுடியாத பொருளாதாரநெருக்கடியின் தொடர்ச்சியே. தயவு செய்து எமது வேண்டுகோளுக்கு உங்கள் ஆதரவைத்தாருங்கள்.

-- ஆசிரியர் குழு --



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## நாவலனை (கெலனை) சமரிலிருந்து வெளியேற்றுவதற்கான சமரின் விளக்கம்

''சமர்'' சஞ்சிகை மக்களுக்கு வழிகாட்டும் வகையில் தனது கருத்துக்களை தெரிவித்து வருகின்றது. ''சமர்'' தான் சொன்ன கருத்துக்களை நடைமுறையில் தனது சொந்த வாழ்க்கையில் நடத்தப்போராடி வருகின்றது. குறிப்பாக எம்மண்ணில் இன்று காணப்படும் முரண்பாட்டின் தொடர்ச்சியாக நடைபெறும் படுகொலைகளை எதிர்ப்பதில் ''சமர்'' முன்னிலை வகிக்கின்றது.

இந்தவகையில் நாவலன் ஆகிய (கெலன்) நீர் ''சமர்'' எடுத்துக்கொண்ட வேலைமுறைக்கு மாறாக சமூகத்தில் உள்ள முரண்பாட்டை தீர்த்துக்கொள்ளும் முறையில் ஒரு கொலையை செய்துள்ளீர். இக்கொலையை தொடர்ந்து சமரிலிருந்து உம்மை வெளியேற்றுவது தவிர்க்க முடியாததாகவுள்ளது. நீர் இது தொடர்பாக சமரின் பெரும்பான்மை அடிப்படையில் முடிவு எடுக்க நீர் உட்பட்ட கூட்டத்தை கூட்ட கோரினீர். அதுவும் நிராகரிக்கப்படுகின்றது. இவைகள் தொடர்பான விளக்கம் கீழ் உள்ளது.

உமக்கும் உமது மனைவிக்கும் இடையில் உருவான குழந்தையை நீர் உமது பொருளாதாரப்பிரச்சனை, வீட்டுப்பிரச்சனைக்காக கொன்றுள்ளீர். குறிப்பிட்ட இப்பிரச்சனை ஏகாதிபத்தியத்தின் ஆதிக்கத்தில் உள்ள அனைத்து நாடுகளிலும் உள்ள பிரதான பிரச்சனை. இதை தீர்த்துக்கொள்ளும் வகையில் ''சமர்'' செயற்பட்டு வருகின்றது. இக்குறிப்பிட்ட பிரச்சனை மூன்றாம் உலகநாடுகளில் 90வீதமானோருக்கும், மேற்கத்தைய நாடுகளில் 60வீதத்திற்கும் மேற்பட்டொருக்கும் உள்ள பிரச்சனை. இப்பிரச்சனைக்கு தீர்வாக குழந்தையை கொல்வதென்பது அடிப்படையில் புலிகள் தனக்கு எதிரானவர்களை கொல்வதற்கு ஒத்ததே. புலிகள் எதற்காக கொல்கின்றார்கள் எனப்பார்ப்போமாயின், தனது வீடு, வசதியான பொருளாதாரத்தை...... காப்பாற்றவே. இதே முடிவையே நீரும் உமது வாழ்க்கையில் இன்று உள்ளநிலையைப்பேண உமது குழந்தையை கொன்றுள்ளீர். உமது இன்றைய நிலையை காப்பாற்ற போராடுவது மட்டுமே ''சமர்'' எடுத்துக்கொண்ட முடிவு. இதற்கப்பால் கொலை செய்வதல்ல. இது தொடர்பான விவாதத்தை நடத்திய பொழுது விதண்டாவாதமாகவும் சம்மந்தா சம்மந்தமில்லாத விடயங்களைக் கதைத்ததுடன் மட்டுமின்றி விவாதத்தின் ஊடாக ஒரு முடிவை வந்தடைய தயார் நிலையில் இருக்கவில்லை. இவ்விவாதம் தொடர்பாக உம்மை சந்தித்துக்கதைக்க வேண்டும் என போனில் கதைத்த பொழுது, நீர் கேட்டீர் ''சிவப்பு பெயின்டா அடித்தனி'' என்று. இது எதைக்காட்டுகின்றது. உமது மனைவியுடன் இரு முறை கதைக்க முயன்ற பொழுது நீர் சந்திக்க விடாமல் செய்ததுடன் ''நீ குழப்பிப்போடுவாய்'' என சொல்லி தட்டிக்கழித்தீர். நெருக்கடி முற்றிய பொழுது சந்திக்க ஏற்பாடு செய்ததையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நீர் கூட்ட கோரிய ''சமர்'' குழுவில் உம்மை வைத்து விவாதிக்க முடியாது. போராட்டத்தில் துரோகம் செய்தோர், காட்டிக்கொடுத்தோர், கொலை செய்தோர்,....... இவை போன்றோர் வந்து எம்மையும் கூட்டி வைத்து விவாதித்து பெரும்பான்மைப்படி செய்வோம் எனக்கோர முடியாது. ஏனெனில் இந்நடவடிக்கை என்பது குறித்த சம்பவத்தை ஒரு கருத்து முரண்பாடாக அங்கீகரித்து குறித்த நடவடிக்கையை ஏற்றுக்கொண்டதாகவே இருக்கும். உமது குழந்தையின் கொலை ஒரு கருத்து முரண்பாடு அல்ல. இது ஒரு கொலை. இக்கொலையை கருத்து முரண்பாடாகப்பார்த்தால் மட்டுமே விவாதம் என்ற வகையில் விவாதிக்க முடியும். இது நாம் எடுத்துக்கொண்ட குறித்த பணிக்கு எதிரான அப்பட்டமான கொலை. குறித்த கொலையை செய்யும் முன் நாம் உம்முடன் விவாதித்தோம். குறித்த கொலையை செய்வதா, வேண்டாமா என்று (அப்படி விவாதிப்பதே மிக மோசமானது) சமரைக்கூட்டி பெரும்பான்மைப்படி செய்திருக்கலாம் அல்லவா? நாம் தனித்தனியாக கதைத்த பொழுது செய்ய வேண்டாம் என மீண்டும் மீண்டும் வலியுறுத்தினோம்.

உலகில் உருவாகும் பிரச்சனைகள் அனைத்தும் சமூகத்தில் உள்ள முரண்பாட்டின் தொடர்ச்சியே. இவை அனைத்தும் வர்க்கத்தன்மைக்கு உட்பட்டதே. இம்முரண்பாட்டை தீர்த்துக்கொள்ள வர்க்கப்போராட்டம் மட்டுமே ஒரே வழி. உமக்குள்ள குறித்த வர்க்க முரண்பாடு ஒரு வர்க்கப்போராட்டத்தினூடாக மட்டுமே தீர்க்கப்படலாமே ஒழிய, ஒரு கொலையை செய்வதன் ஊடாக அல்ல என்பதை சுட்டிக்காட்டுவதுடன் நீர் குறித்த முரண்பாட்டை வர்க்கப் போராட்டத்திற்கூடாக தீர்க்காமல் இடைப்பட்ட ஒரு தீர்வாக ஒரு கொலையை செய்து சமரசவாதியாகவும், சாதாரணமனிதனை விட மோசமான ஒரு நிலைக்கு சென்றதோடு சமரின் குறித்த பணியை நிராகரித்தமையாலும், சமரிலிருந்து உம்மை வெளியேற்றுகின்றோம்.

-- ஆசிரியர் குழு --

**குறிப்பு :- இது தொடர்பான கருத்துக்களையும், விமர்சனங்களையும் சமர் வரவேற்கின்றது.**

**தேசிய இனப்பிரச்சனையும் முஸ்லீம் மக்களும் என்ற கட்டுரையை எழுதியவர் சமரிலிருந்து வெளியேற்றப் பட்டமையால் கட்டுரையின் தொடர் வெளியிட முடியாதுள்ளது. இது தொடர்பான பிறிதொரு கட்டுரை அடுத்த இதழில் வெளிவரும் என்பதை அறியத்தருகின்றோம்.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## எனது தோழிக்கு...

உன் நினைவுகள்
பொங்கி வழியும்
நாட்களில்
உனக்காக
ஒரு துளி கண்ணீர்
சிந்தாமல் இருக்க முடிந்ததில்லை !

இணைந்த உள்ளங்களாய்
ஒன்று சேர்ந்த எண்ணங்களுமாய்
எம்மூர் பனைநிழல் போர்த்த
பாதை வழியே
அந்தப்புழுதி மண்ணில்
கால்கள் புதையும்
சுகத்தையும் ரசித்துக்கொண்டு
உன்னோடு பயணம் செய்ய
விருப்பம்தான் !

சிறகு முளைத்த
வேதாளங்களும்
தரைக்கு வந்துவிட்ட
திமிங்கிலங்களும்
இடைவெளியில்லாமல்
எமது வாழ்வை
குதறும் பொழுது
அந்தி வேளையின்
களிப்பூட்டும் அழகை
நாங்கள் ரசிப்பதெப்படி ?

தீயினால் கருகிவரும்
தேசத்தில்
மானிடம்
சாம்பல் படிவுகளாய்
சிதைந்து வரும்
மண்ணில்
உனக்குப்பரிசளிப்பதற்காய்
ஒரு றோசாச்செடியை
நான் வளர்த்துக்கொண்டிருக்கவா
முடியும் ?

வானத்தின் மூலைகளில்
மிகத்தொலைவில்
கேட்கின்ற
இடிமுழக்கம்
உன்னைப்போல்
என்னையும்
உணர்வூட்டும் !

எங்கே
உன்கையை
இப்படி நீட்டு
கரம் பற்றுவோம் !
காலூன்றி நடப்பதற்காக !

-- *அருள் (இலண்டன்)* --



www.tamilarangam.net

## ஸ்டாலின் பற்றிய பிரச்சனை மீது

### சென்ற இதழ் தொடர்ச்சி....

அடைந்த வெற்றிகள், ரசிய விஞ்ஞானிகள், தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் ரசிய மக்கள் ஸ்டாலின் தலைமையின் கீழ் சாதித்த மாபெரும் சாதனைகளாகும் என்பது எல்லோரும் அறிந்ததே. ஏவுகணை உற்பத்திக்கான அஸ்திவாரங்கள் ஸ்டாலின் காலத்தில் போடப்பட்டவை. இந்த முக்கிய வரலாற்று உண்மைகளை எப்படி அழிக்க முடியும்? எல்லாப் பெருமைகளும் குருச்சேவுக்கே எப்படி சேரும்?

லெனினியம் காலாவதியாகிவிட்டது என்று கூறும் குருச்சேவை, மார்க்சிய-லெனினிய அடிப்படைக் கோட்பாடுகளைத் திரித்துப் புரட்டிய குருச்சேவை அவர்கள் ''மார்க்சிய-லெனினியக் கொள்கையை ஆக்கபூர்வமாக வளர்த்துச் செழுமைப்படுத்திய புத்திக்கூர்மையுள்ள முன்மாதிரி'' [1] என்று புகழ்கிறார்கள்.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சி தலைவர்கள் 'தனிநபர் வழிபாட்டை எதிர்ப்பது' என்ற போர்வையில் செய்வது யாவும், லெனின் மிகச் சரியாகச் சொன்னதைப் போல ''சாதாரண விசயங்களைப் பற்றி மிகச் சதாரண கண்ணோட்டங்களைக் கொண்டிருந்த பழைய தலைவர்களுக்கு பதிலாக, இயற்கைக்கு அப்பாற்பட்டு முட்டாள்தனமாகவும் குழப்பமாகவும் பேசுகிற புதிய தலைவர்களை முன்வைக்கிற'' [2] செயலேயாகும்.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் பகிரங்கக் கடிதம் மார்க்சிய-லெனினியத்தை பின்பற்றும் எங்கள் நிலைப்பாட்டின் மீது அவதூறு செய்கிறது. ''தனிநபர் வழிபாட்டு காலத்தில் திகழ்ந்துவந்த சித்தாந்தம் மற்றும் நெறிமுறைகள், தலைமைக்கான வடிவங்கள் மற்றும் முறைகள் ஆகிய, நடைமுறையில் இருந்தவற்றை பிற கட்சிகளின் மீது திணிக்க முயல்வதாக'' எங்கள் மீது அவதூறு கூறுகிறது. இந்தக் கூற்று ''தனிநபர் வழிபாட்டை எதிர்த்துப் போராடுவதன்'' முட்டாள்தனத்தை மீண்டும் அம்பலப்படுத்துகிறது.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களின் கூற்றுப்படி அக்டோபர் புரட்சி ரசியாவில் முதலாளித்துவத்துக்கு முடிவுகட்டிய பிறகு அங்கு ஒரு ''தனிநபர் வழிபாட்டுக் காலம்'' தொடங்கியது. அந்தக் காலத்தின் ''சமூக அமைப்பு முறையும்'', ''சித்தாந்தம் மற்றும் நெறிமுறைகளும்'' சோசலிசத்திற்கானவை அல்ல என்று தோன்றும். அந்தக் காலத்தில் ரசிய உழைக்கும் மக்கள் ஒரு ''கனத்த சுமையினால்''

---

1. ஏ. என். கோசிஜின், ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 22-வது பேராயத்தில் ஆற்றிய உரை, அக்டோபர் 21, 1961.

2. வி. இ. லெனின் ''இடதுசாரிக் கம்யூனிசம் ஒரு இளம்பருவக் கோளாறு'' தேர்வு நூல்கள். ஆங்கிலப் பதிப்பு, இண்டர் நேசனல் பப்ளிசர்ஸ், நியூயார்க், 1943. தொகுதி 10, பக் 82.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அழுத்தப்பட்டுக் கிடந்தார்கள். அங்கே ''மக்களுடைய வாழ்க்கையை நச்சுப்படுத்திய நிச்சயமின்மையும், சந்தேகமும், அச்சம் நிறைந்த சூழலும்''[1] நிலவியது;இவை ரசிய சமுதாய வளர்ச்சியை தடைசெய்தன.

1963 ஜுலை 19-ல் நடந்த ரசிய-ஹங்கேரி நட்புறவு பேரணியில் குருச்சேவ் ஆற்றிய உரையில் ''ஸ்டாலின் ஒரு கோடாரியைக் கொண்டு தனது அதிகாரத்தை நிலைநிறுத்தினார்'' என்று கூறி ஸ்டாலினுடைய ''பயங்கர'' ஆட்சி பற்றி பேசினார். அந்தக் காலத்தின் சமூக நிலைமை களை கீழ்க்கண்டவாறு வர்ணித்தார். ''அந்தக் காலத்தில் வேலைக்குச் செல்லும் ஒரு மனிதன் அடிக்கடி, மீண்டும் வீட்டுக்குத் திரும்புவோமா, தனது மனைவியையும் குழந்தைகளையும் மீண்டும் காண்போமா என்பதைப் பற்றி நிச்சயமற்றிருந்தான்''.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சி தலைவர்களின் வர்ணிப்புப்படி ''தனி நபர் வழிபாட்டுக் காலத்தில்'' சமுதாயம், நிலப்பிரபுத்துவம் அல்லது முதலாளித்துவக் காலத்திலிருந்ததைவிட மிகவும் ''வெறுக்கத்தக்கதாக வும்'' ''காட்டுமிராண்டித்தனமானதாகவும்'' இருந்தது.

ரசிய கம்யூனிஸ்ட் கட்சி தலைவர்களின் கூற்றுப்படி, அக்டோபர் புரட்சியின் விளைவாக நிறுவப்பட்ட பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமும், சோசலிச சமூக அமைப்பு முறையும் உழைக்கும் மக்களின் மீதான ஒடுக்கு முறையை நீக்குவதற்கோ அல்லது ரசிய சமுதாயத்தின் முன்னேற்றத்தை விரைவுபடுத்துவதற்கோ பல பத்தாண்டுகளாகத் தவறிவிட்டன. ரசிய கம்யூனிஸ்ட் கட்சியின் 20-வது பேராயம் ''தனிநபர் வழிபாட்டை எதிர்த்த போராட்டத்தை'' நிறைவேற்றிய பின்புதான் உழைக்கும் மக்களின் மீது இருந்த ''கனத்த சுமை'' அகற்றப்பட்டது, ''ரசிய சமுதாயத்தின் வளர்ச்சி'' திடீரென்று ''துரிதப்படுத்தப்பட்டது''[2]

குருச்சேவ் சொன்னார்: ''ஆ! ஸ்டாலின் மட்டும் பத்து வருடங் களுக்கு முன்பே செத்திருந்தால்!''[3] எல்லோருக்கும் தெரிந்தது போல் ஸ்டாலின் 1953-ல் இறந்தார். பத்து வருடங்களுக்கு முன்பு என்பது 1943 ஆக இருந்திருக்கும். அந்த ஆண்டுதான் ரசியநாடு மாபெரும் தேச

---

1. *அனைத்து கட்சி அமைப்புகளுக்கும் ரசியாவிலுள்ள அனைத்து கம்யூனிஸ்டுகளுக்கும் ரசிய கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் பகிரங்கக் கடிதம், ஜுலை 14, 1963.*
2. *மேற்கண்டதே.*
3. *என். எஸ். குருச்சேவ், மாஸ்கோவில் ரசிய-ஹங்கேரி நட்பு றவு பேரணியில் ஆற்றிய உரை, ஜுலை 19, 1963.*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பக்த யுத்தத்தில் எதிர்த் தாக்குதலை தொடங்கியிருந்தது. அந்தக் காலத்தில் ஸ்டாலின் இறந்து போக வேண்டுமென்று விரும்பியது யார்? ஹிட்லர்!

சர்வதேச கம்யூனிச இயக்க வரலாற்றில் மார்க்சிய-லெனினியத்தின் எதிரிகள் பாட்டாளி வர்க்க தலைவர்களைக் கொடியவர்களாகக் காட்டுவதும் ''தனிநபர் வழிபாட்டை எதிர்ப்பது'' போன்ற முழக்கங்களைப் பயன்படுத்தி பாட்டாளிவர்க்க இலட்சியத்திற்கு குழிபறிப்பதும் புதிய விசயமல்ல. நீண்ட காலத்திற்கு முன்பே மக்கள் கண்டு கொண்ட ஒரு அசிங்கமான தந்திரமே இது.

முதலாவது அகிலத்தின் காலக்கட்டத்தில் சதிகாரன் பக்கூனின் மார்க்சை வசைபாட இத்தகைய மொழியைத்தான் பயன்படுத்தினான். முதலில் மார்க்சின் நம்பிக்கையைப் பெறுவதற்கு புழுவைப் போல நெளிந்து ''நான் உங்கள் சீடன்; அதற்காக நான் பெருமைப்படுகிறேன்''[1] என்று எழுதினான். பிறகு முதலாவது அகிலத்தின் தலைமையைக் கைப்பற்றுவதற்கான தனது சதியில் தோல்வியுற்ற அவன் மார்க்சை வசைபாடினான். ''ஒரு ஜெர்மானியனும், யூதனுமான அவன் அடியிலிருந்து முடிவரை ஒரு எதேச்சதிகாரி''[2] மற்றும் ஒரு ''சர்வாதிகாரி''[3] என்று சொன்னான்.

இரண்டாவது அகிலத்தின் காலக்கட்டத்தில் லெனினை வசைபாட ஓடுகாலி காவுத்ஸ்கி இதே மாதிரி மொழியைத் தான் பயன்படுத்தினான். ''ஒரு அரசாங்க மதத்தின் தரத்திற்கு மட்டுமல்ல, மாறாக ஒரு மத்தியக் கால அல்லது கிழக்கத்திய (மதத்தின்) மூடநம்பிக்கையின் தரத்திற்கு''[4] மார்க்சியத்தைக் குறுக்கி விட்ட ''ஏகக்கடவுள் கொள்கையினரின் கடவுள்''[5] என்று லெனினை பழித்துக் கூறினான்.

---

1. எம். ஏ. பக்கூனின் மார்க்சுக்கு எழுதிய கடிதம், டிசம்பர் 22, 1868 நியூ ஜெய்ட். எண் 1, 1900.
2. பிரான்ஸ் மெஹ்ரிங், காரல் மார்க்ஸ், அவரது வாழ்க்கையின் கதை, ஆங்கிலப்பதிப்பு, கோசி பிரிடு பப்ளிசர்ஸ், நியூயார்க் 1935 பக் 429
3. ''ஏ. பெபலுக்கு எங்கெல்ஸ், ஜூன் 20, 1873'' காரல் மார்க்ஸ், பிரடெரிக் எங்கெல்ஸ் ஆகியோரின் தேர்வு நூல்கள், அயல்மொழிப் பதிப்பகம், மாஸ்கோ 1951, தொகுதி 2, பக் 432.
4. காரல் காவுட்ஸ்கி, ''சமூக ஜனநாயகத்திற்கு எதிராக கம்யூனிசம்'' ஆங்கிலப் பதிப்பு ரேண்ட் ஸ்கூல் பிரஸ், நியூயார்க் 1946 பக் 54.
5. மேற்கண்டதில் பக் 29.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மூன்றாவது அகிலத்தின் காலக்கட்டத்தில் ஸ்டாலினை வசைபாட ஒடுகாலி டிராட்ஸ்கி இதே மாதிரி மொழியைத்தான் பயன்படுத்தினான். ஸ்டாலினை ஒரு ''கொடுங்கோலன்'' [1] என்றும் ''ஸ்டாலினிய அதிகார வர்க்கம் தலைவர்களுக்கு தெய்வீக குணாம்சங்களைச் சூட்டும் ஒரு இழிவான தலைவர் வழிபாட்டை உருவாக்கிவிட்டது''[2] என்றும் கூறினான்.

நவீனத் திரிபுவாத டிட்டோ கும்பலும் ஸ்டாலினை வசைபாட இதே மொழியை பயன்படுத்துகிறது; ஸ்டாலின் ''முற்றமுழுக்க தனிநபர் அதிகாரத்தைக் கொண்ட ஒரு அமைப்பு முறையில்'' ''சர்வாதிகாரியாக''[3] இருந்தார் என்று கூறுகிறது.

இவ்வாறு ரசிய கம்யூனிஸ்ட் கட்சி தலைமையினால் எழுப்பப்பட்டுள்ள ''தனிநபர் வழிபாட்டை எதிர்க்கும்'' போக்கு, பாட்டாளி வர்க்க தலைவர்களைத் தாக்கவும், பாட்டாளிவர்க்க புரட்சிகர இயக்கத்துக்கு குழிபறிக்கவும் பக்கூனின், காவுட்ஸ்கி, டிராட்ஸ்கி மற்றும் டிட்டோ போன்ற அனைவரும் பயன்படுத்தியதுதான் என்பது தெளிவாகிறது.

சந்தர்ப்பவாதிகள் சர்வதேச கம்யூனிச இயக்க வரலாற்றில், மார்க்ஸ், எங்கெல்ஸ் அல்லது லெனினை வசைபாடுவதன் மூலம் அவர்களை மறுத்தலிக்க முடியவில்லை. குருச்சேவினாலும் வசைபாடுவதன் மூலம் ஸ்டாலினை மறுதலிக்க முடியாது.

லெனின் சுட்டிக் காட்டியதைப் போல, உயர்ந்த பதவி, இழிவுபடுத்தலின் வெற்றியை உறுதிப்படுத்த முடியாது.

லெனின் அருங்காட்சியகத்திலிருந்து ஸ்டாலினுடைய உடலை அப்புறப்படுத்த குருச்சேவ் தனது உயர்ந்த பதவியைப் பயன்படுத்திக் கொள்ள முடிந்தது. ஆனால் அவர் எவ்வளவுதான் முயன்றாலும் உலகெங்குமுள்ள மக்கள் மனதிலிருந்தும் ரசிய மக்களின் மனதிலிருந்தும் ஸ்டாலின்மீதான மாபெரும் பற்றுதலை நீக்குவதில் ஒருபோதும் வெற்றி பெற முடியாது.

---

1. லியோன் டிராட்ஸ்கி, ''ஸ்டாலின் மனிதனும் அவரது செல்வாக்கும் பற்றிய ஒரு மதிப்பீடு'' ஆங்கிலப் பதிப்பு, ஹார்ப்பர் அண்ட் பிரதர்ஸ், நியூயார்க் அண்ட் லண்டன் 1941, பக் 420
2. லியோன் டிராட்ஸ்கி, ''ஸ்டாலினிய அதிகார வர்க்கமும் கிரோவின் படுகொலையும்'' கிரோவ் படுகொலையைப் பற்றிய ஆங்கிலப் பதிப்பு, பயனீர் பதிப்பகம், நியூயார்க் 1956 பக் 17.
3. எட்வர்ட் கார்டெல்ஜ் ''அய்ந்து ஆண்டுகளுக்குப் பிறகு'' போர்பா, ஜுன் 28, 1953.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

மார்க்சிய—லெனினியத்தை ஒரு வழியிலோ அல்லது இன்னொரு வழியிலோ திரித்துப் புரட்டுவதற்கு குருச்சேவ் தன்னுடைய உயர்ந்த பதவியைப் பயன்படுத்திக் கொள்ள முடியும். ஆனால் அவர் என்னதான் முயன்றாலும் உலகெங்குமுள்ள மார்க்சிய—லெனினியவாதிகளால் பாதுகாக்கப்பட்ட, ஸ்டாலினால் பாதுகாக்கப்பட்ட மார்க்சிய — லெனினியத்தை தூக்கியெறிவதில் ஒருபோதும் வெற்றியடைய முடியாது.

நாங்கள் தோழர் குருச்சேவுக்கு அக்கறையுடன் ஒரு அறிவுரை கூற விரும்புகிறோம். நீங்கள் உங்கள் தவறுகளை உணர்ந்துகொண்டு தவறான பாதையிலிருந்து மார்க்சிய—லெனினியப் பாதைக்கு திரும்பி வருவீர்கள் என்று நம்புகிறோம்.

மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின், ஸ்டாலின் ஆகியோரது மாபெரும் புரட்சிகர போதனைகள் வாழ்க!

---



www.tamilarangam.net

## ஊர்வலம்

சுதந்திரம்
சமத்துவம்
சகோதரத்துவம்
பிறந்த தேசத்தின்
ஓர் மூலையில்,
உணர்வுகளின் இருப்பிற்கு
உருவம் அமைக்க முயன்று
எம் தோழமையுறவுகளும்
முறிந்து போகி நீண்ட நாட்களாயிற்று !

இன்று
தொழிலாளர் தினம்
தோழமைகளுடன் ஊர்வலமாம்
ஆம் !
என் தேசத்தவர்களின்
மண்டையோடுகளை மாலையாகவணிந்து
இரத்தவாற்றினுள் மூழ்கியெழுந்து,
அழகிய சுலோகங்களையெந்தியபடி
எலும்புக்கூடுகள்
செயின் ஆற்றங்கரைதனிலே
ஊர்வலமாக,
என் தேசத்தின்
குத்தகையாளர்கள் !

தேசியம் பற்றிய
உணர்வுகளை அறுத்தெறிந்து,
அருகில் துயின்றவனின்
கழுத்தை நெரித்தே
மனிதத்தை
குழி தோண்டிப்புதைத்துவிட்டு
தேசிய விடுதலை பற்றி
ஓலம் எழுப்புகின்றார் !
மக்கள்...விடுதலை...?

— *பொன்னி* —



www.tamilarangam.net

# தேசவிடுதலைப்போராட்டமும் தேசியசக்திகளும்...

தேசவிடுதலைப்போராட்டத்தின் இன்றைய நிலைமை மீண்டும் மீண்டும் எம்மை சிந்திக்கத்தூண்டுகின்றது. அதன் தொடர்ச்சியாக 3வது பாதை ஒன்றை அமைக்கும் தேவை எம்மெல்லோர் முன்னுமுள்ளது; இதன் தேவையுடன் எழுந்ததே தேசியசக்திகள் பற்றிய விவாதமும். இவ்விவாதத்தின் ஆரம்பத்தில் புலிகளின் வர்க்க மதிப்பீட்டை ஆராய முற்பட்டதுடன், அதன் தொடர்ச்சியாக இவ்விவாதம் 3வது பாதைக்கு அடித்தளம் அமைக்கும் வகையில், பல விடயங்களை தொட்டு நிற்கின்றது. இவ்விவாதத்தின் தொடர்ச்சியாலும், ஆரோக்கியமான போக்கும் ஒரு போராட்டத்தின் முன் நிபந்தனையாகவுள்ளது.

தேசியசக்திகள் தொடர்பான விவாதத்தில் மனிதம், தூண்டில், உயிர்ப்பு, சமர் என்பன தங்கள் கருத்துக்களை கூற முனைந்துள்ளனர். இக்கருத்து விவாதங்கள் இரு வகையாக பிரிக்கலாம்.

(1) சமர், தூண்டில், உயிர்ப்பின் விவாதங்கள் ஆரோக்கியமான வகையில் இணக்கப்போக்கை நோக்கிய வகையில் அமைந்துள்ளது.

(2) மனிதம் சஞ்சிகையில் விவாதம் இதற்கு எதிர்மறையாக; அடிப்படையையே திரிபுவாதத்துக்குள் இட்டுச்செல்லும் வகையில் தம் விவாதத்தை முன்னெடுத்துள்ளனர்.

நாம் இச்சஞ்சிகைகளில் வெளிவந்த விவாதத்தின் தொடர்ச்சியாக விவாதிக்க முற்படுகின்றோம். அவ்வகையில் மனிதம் இதழ் 15இல் வெள்வந்த '' புலிகள் எந்த வர்க்கத்தின் பிரதிநிதிகளுமல்ல '' என்ற கட்டுரையையும், மனிதம் இதழ் 16இல் உயிர்ப்பு இதழ் பற்றிய விமர்சனத்தை முதலிலும், அதன் பின் தூண்டில் இதழ்கள் 41, 48, 49இல் வெளிவந்த '' புலிகள் தேசியசக்திகள் '' என்ற கட்டுரையை அடுத்ததாகவும், உயிர்ப்பு சஞ்சிகையில் '' தேசியசக்திகள் பற்றி சில பிரச்சனைகள் '' என்ற கட்டுரையை இறுதியாகவும் விமர்சனத்திற்குள்ளாக்கின்றோம்.

## <u>மனிதம் 15இல் தேசியசக்திகள் தொடர்பான விவாதத்தின் மீது எமது விமர்சனம்</u>

மனிதம் இதழ் 15இல் ''விடுதலைப்புலிகள் தேசியசக்திகளா? இல்லையா? என்பது பற்றி இப்பொழுது புரட்சிகரமான சக்திகள் மத்தியில் ஒரு காரசாரமான விவாதம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது? இந்த விவாதத்தின் மூலம் நாம் அடையப்போகும் பயன் என்ன? என்று விளங்கவில்லை. எளிமையாக புரிந்து கொள்ளக்கூடிய உண்மைகளை கடினமான சொற்பதங்களை பாவிப்பதன் மூலம் தாமும் குழம்பி மற்றவர்களையும் குழப்பி எந்த முடிவுக்கும் வராமல் தொடர்ச்சியாக விவாதங்கள் நடைபெறுகின்றன'' இப்படியாக ''மனிதம்'' சஞ்சிகை தனது கட்டுரையை தொடங்குகின்றது. இத்தொடக்கத்தில் புரட்சிகரமான சக்திகள் மத்தியில் என்று சொல்வதன் அர்த்தம் என்ன? ஒன்று இவர்கள் புரட்சிகரமானவர்கள் என்று ஏற்றுக்கொள்கின்றார்களா? அப்படியாயின் பிந்திய மனிதத்தின் விவாதம் எதற்காக? அதாவது ''ஏன் இந்த விவாதம் நடைபெறுகின்றது? என்ற கேள்வியிலிருந்து இவர்கள் புரட்சிகரமான சக்திகள் என்னும் பதத்தை வெறும் கேலியாக பயன்படுத்தியுள்ளதை

www.tamilarangam.net

பார்க்க முடியும்.

''ஏன் இந்த விவாதம் நடைபெறுகின்றது'' என்ற மனிதத்தின் கேள்வியிலிருந்து விவாதத்தின் தேவையை புரிந்து கொள்ளாமை புலனாகின்றது. அப்படி புரிந்து கொள்ளாமல் மீண்டும் தங்கள் கருத்தை சொல்ல நினைப்பது, விவாதத்திற்கு தயார் இல்லாமையே, தாங்கள் நினைப்பதை திணிப்பதற்காகவே. இதை உறுதி செய்யும் வகையில்; இவ்விவாதத்தின் மூலம் ''நாம் அடைய இருக்கும் பயன் என்னவென்று விளங்கவில்லை'' எனச்சொல்லி தங்கள் மேதாவித்தனத்தையும் காட்டி கொள்ள விரும்புகின்றார்கள். தொடர்ச்சியாக எழுதுகின்றார்கள்; ''எளிமையாகப்புரிந்து கொள்ளக்கூடிய உண்மைகளை கடினமான சொற்பதங்களைப்பாவிப்பதன் மூலம் தாமும் குழம்பி மற்றவர்களையும் குழப்பி எந்த முடிவுக்கும் வராமல் தொடர்ச்சியாக விவாதிக்க...'' என்று குறிப்பிடும் கரிகாலன், இதழ் 16இல் ''உயிர்ப்பு'' மீதான விமர்சனத்தில் கடினமான சொற்பதங்களை பாவித்துள்ளனர். அதை எளிமையாக சொல்ல முடியாமல் போய் விட்ட அவர், இதழ் 15இல் கடுமை, இலகு பற்றி வாதிட முற்பட்டதேன்? ''கடினமான சொற்பதங்களை பாவிப்பதன் மூலம் தாமும் குழம்பி மற்றவர்களையும் குழப்பி வந்த முடிவுக்கும் வராமல்'' கடினமான சொற்பதம் என்பது, ஒரு கட்டுரையின் தேவையோடு அமைந்ததே. கிராமப்புறத்தில் மக்களுடனும், நகர்ப்புறத்தில் மக்களுடனும் வேலை செய்யும் போது, எப்படி ஒரு கட்சிக்குள் விவாதிக்கும் தன்மையில் கருத்தை வைக்காமல் எளிமைப்படுத்தி, நகர்ப்புறத்துக்கும், கிராமப்புறத்திற்கும் வேறுபடுத்தி வைப்பது போன்றே கட்டுரைகளும். இன்று குறித்த இவ்விவாதம் 3வது அமைப்பை உருவாக்கும் வகையில், வளர்ந்த சிந்திக்கின்றவர்கள் கூடுதலாக புரிந்து கொள்ளும் வகையில் அமைந்ததே. இதற்கப்பால் எல்லாத்தரப்பட்ட மக்களின் வாசிப்புத்திறனுக்கு அமைய ஒரு கட்டுரையை வரைய முடியுமா? என்பது சந்தேகமே. ஒரு கட்டுரையை விரும்பின் இலகுவாக பலதரப்பட்ட மக்களுக்கு, பகுதி பகுதியாக விரிவுபடுத்த முடியும். ''தாமும் குழம்பி மற்றவர்களையும் குழப்பி எந்த முடிவுக்கும் வராமல்'' என்ற மனிதம் சொல்வதால் சஞ்சிகை வெளியிட்டவர்களையும், கட்டுரையாளர்களையும் குழப்பியுள்ளனர், என்று தாங்கள் சொல்ல வருவது புத்திஜீவித்தனத்தின் வெளிப்பாடே. அவர்கள் சொல்ல வருவதனூடாக தங்களை மேதாவிகளாகவும், இக்கருத்தை சொல்லவந்தவர்கள், சமூகவியக்கத்தில் சாராத கற்பனைவாதிகளாக பார்க்கின்றார்கள். ஒரு கருத்தை சொல்ல முனைந்தவர்கள், குழம்பிப்போயுள்ளார்கள் என சொல்ல எவ் ஆதாரத்தை முன் வைக்கின்றார்கள். அவர்கள் நினைத்ததை எழுதுவதெனின் அதற்கு ஆதாரம் மிக அவசியம். அதுவும் சமூகவிஞ்ஞானத்துடன் பொருந்துவதாக இருக்க வேண்டும். ''மற்றவர்களையும் குழப்பி'' என்று சொல்வதனூடாக தாங்கள் குழம்பியுள்ளீர்களா? என சிந்திக்கத்தூண்டுகின்றது. ''எந்த முடிவுக்கும் வராமல்'' என தாங்கள் கூறியதனூடாக, தங்களினால் திணிக்கப்பட்ட கருத்து, ''தாமும் குழம்பியவர்களால்'' வெளியிட்ட கருத்து, மற்றவர்களை குழப்பியதனூடாக திணிக்கப்பட்ட கருத்து (தங்களது) கேள்விக்குள்ளாகின்றது. இதை உங்கள் ஆரம்ப விவாதமே சுட்டி காட்டி நிற்கின்றது.

''குறிப்பிட்ட பிரச்சனையை இயங்கியல் அடிப்படையில் ஆராய வேண்டும். மாறாக ஏற்கனவே இருக்கும் முடிவுக்கு அல்லது வழிக்கு பொருந்தி வருவதாக குறிப்பிட்டு காட்ட முனையக்கூடாது''. என்ற தங்கள் கருத்தில் ஏற்கனவே ''இருக்கும் முடிவு அல்லது விதிக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

பொருந்துவதாக'' இயங்கியல் அடிப்படைக்கு மாறுபட்டதாக, சஞ்சிகைகள் ஆராய்ந்ததாக தாங்கள் சொல்வதை; இயங்கியலுடன் தாங்கள் எங்கே இக்கட்டுரையில் ஆராய்ந்துள்ளீர்கள். ''வர்க்கத்தன்மையற்ற புலிகள்குழு'' என்ற கருத்தை இயங்கியலுடன் எங்கே ஆராய்ந்துள்ளீர்கள். ''முடிவு, விதிகள்'' என தாங்கள் கூறுவது, அடிப்படை மார்க்ஷிசத்தையே. இன்று இயங்கியலுடன் அடிப்படை மார்க்ஷிசத்தை பிழையென தங்களால் காட்ட முடியவில்லை. தங்கள் விவாதம் தான் இயங்கயலுக்கு மாறாக ஒற்றை வரிகளில் எந்த ஆய்வு முறையையும், ஆதாரங்களையும் சொல்லாமல் வைத்துள்ளீர்கள்.

''மார்க்ஸ் தொடக்கம் மாவோ வரையிலான மார்க்ஷிச அறிஞர்கள் சொன்ன கருத்து அல்லது முடிவை வைத்தே'' இப்பிரச்சனைக்கு முடிவு காண முற்பட்டதாக தாங்களே சொல்லி அவர்களது கருத்தை நிராகரித்துள்ளீர்கள். நாம் திட்டவட்டமாக சொல்கின்றாம் மார்க்ஷிச அறிஞர்கள் வைத்த அடிப்படை மார்க்சிசத்தில் இருந்தே நாம் சமூகத்தை ஆராய்கின்றோம். அது ஒன்றே சமூகத்தை சமூக விஞ்ஞானமாக ஆராய்ந்துள்ளது. அதிலிருந்து மார்க்சிற்கு பின்னைய லெனின், (70 ஆண்டுகளின் பின்) மார்க்ஷிய அடிப்படையை வைத்தே; மார்க்சிசத்தை, புரட்சியை ரஷ்யாவுக்கு ஏற்ற வகையிலும், 100 வருடங்களின் பின் சீனாவில் மாவோவும் மார்க்சிய அடிப்படையிலிருந்தே, மார்க்ஷிசத்தை வளர்த்ததோடு புரட்சியையும் நடாத்தினர். இன்று 140 வருடங்களுக்குப்பின் கூட பல நாடுகளில் பல புரட்சிகர ஸ்தாபனங்கள் பல தளப்பிரதேசங்களை அமைத்து, மார்க்ஷிச அடிப்படையில் முன்னேறுகின்றனர். இதற்கு மாறாக மனிதம் மார்க்சிசத்தின் அடிப்படையை கேள்விக்குள்ளாக்கியபடியே, இயங்கியலை மார்க்ஸ் முதல் மாவோ வரை தவறாக கையாண்டனர் என, இயங்கியலை மாறுபட்ட முறையில் விவாதிக்கின்றனர். தமது கருத்துக்குள்ளேயே முரண்படுகின்றனர். மார்க்சிசத்தின் அடிப்படைகள் தவறு எனின் எங்கே? மனிதம் அவைகளை எல்லாம் விமர்சித்து உலகுக்கு வழிகாட்டும் புதிய தத்துவத்தை எடுத்தியம்ப வேண்டும். இப்படி செய்யாமல் சும்மா கூறுவது மார்க்ஷிசத்தை திரித்து புரட்டுவது தான்.

''தேசியசக்திகள், ஐக்கிய முன்னணித்தந்திரம் பற்றிய மாவோவின் கருத்துக்களை மனத்தில் வைத்துக்கொண்டு; அவை பற்றி ஏற்கனவே ஒரு முடிவை எடுத்து விட்டு, புலிகளைப்பற்றி யாராவது மதிப்பிட முனைந்தால் அது தவறு. அது சலிப்பூட்டும் விவாதங்களை மட்டுமே உருவாக்கும்'' என மீண்டும் விவாதத்தின் மீது சலிப்பூட்டுவதாக கூறி புலிகள் வர்க்கமற்றவர்கள் என்பதை ஆராய்வுக்கும், விவாதத்துக்கும் அப்பால் திணிப்பை நிகழ்த்த முயற்சிக்கின்றனர். விவாதிப்பதற்கு தங்கள் கருத்தின் பலம் இன்மையும், விவாதிக்கத்தயார் இன்மையும், எதற்காக விவாதிக்கின்றார்கள் என்ற கேள்வி எழுவதுடன், தங்களால் திணிக்கப்பட்ட கருத்துக்கள் விவாதத்திற்கு முன் வருவதால், தங்கள் சக்திகளை கட்டிக்காக்க முடியாமல் போயுள்ள தன்மையையுமே காட்டுகின்றது. தூண்டிலுக்கு பதிலளிக்க ''தேசிய சக்தி, ஐக்கிய முன்னனி'' பற்றி சொல்லும் மனிதம் கற்பனாவாதத்திற்குள் உட்படுகின்றார்கள். புலிகள் பற்றிய மதிப்பீடு ஐக்கிய முன்னணியை மனத்தில் வைத்துத்தான் தூண்டில் செயற்படுகின்றது என சொல்லும் மனிதம் எந்த இயங்கியல் ஆய்வுமுறையை வைத்து முடிவுக்கு வந்தீர்கள். தொடர்ச்சியாக தூண்டில் வெளியிட்ட கருத்துக்கள் ஐக்கிய முன்னணியை வைத்துத்தான் வெளியிடுகின்றார்களா? மாவோ கருத்துக்களை உடனடியாக ஒரு

வசனத்திற்கு பொருந்துவது தாங்கள் சொல்லுவது போல் ''இருக்கும் முடிவுக்கு அல்லது விதிக்கு பொருந்தி வருவதாக'' அமைத்து தூண்டிலுடன் பொருத்த முனைவதன் நோக்கம் தான் என்ன? யார் விதி அல்லது முடிவுகளை அப்படியே பயன்படுத்துகின்றார்கள் என்பதை தாங்களே திரும்பிப்பார்ப்பது நன்று.

''நாம் புலிகளைப்பற்றி மதிப்பிட வேண்டியது அவசியமானதே'' என்ற தங்கள் கருத்து ''விடுத்லைப்புலிகள் தேசிய சக்திகளா? இல்லையா? என்பது பற்றி இப்போது புரட்சிகரமான சக்திகள் மத்தியில் ஒரு காரசாரமான விவாதம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. இந்த விவாதத்தின் மூலம் நாம் அடையவிருக்கும் பயன் என்ன? என்பது விளங்கவில்லை'' என்று தங்கள் கருத்துக்கு முற்றாக மாறுபட்டுள்ளது. குழப்பம் உங்களுடையதே ஒழிய எங்களுடையதல்ல என்பதை தாங்கள் தங்களுடைய கட்டுரையூடாக சொல்ல வருகின்றீர்களா? ''கடந்தகால, நிகழ்கால நடவடிக்கைகளிலிருந்து ஆராய்ந்து சரியான ஒரு முடிவை நாம் முன்வைக்க வேண்டும். அடையப்பெறும் முடிவானது மார்க்ஷிய மூலவர்கள் கூறிய முடிவுகளுடன் அல்லது கருத்துக்களுடன் பொருந்தி வருகின்றதா? இல்லையா? என்பது அல்ல பிரச்சனை'' என்ற கருத்தில் தாங்கள் குழம்பியுள்ளீர்கள். மூலவர்களின் முடிவை வைத்தே கருத்தை சொல்வதாக சொல்லி முன்பு நிராகரிக்க முற்படுகின்றீர்கள். தொடர்ச்சியாக எழுதும் போது மூலவர்கள் சொன்னது ''பொருந்தி வருகின்றதா?'' என்ற கேள்வியை எழுப்பியுள்ளீர்கள், தாங்கள் முதலில் ஒரு முடிவை எடுக்க வேண்டும் மார்க்ஷிசம் சரியா? பிழையா? என்பதை. பிழை எனின் எப்படி என்பதை கூற வேண்டும். அதைவிடுத்து இரண்டையும் குழப்ப முயல்வது ஏன்?

''புலிகள் தரகு முதலாளித்துவ சக்திகளின் நலன்களுக்காக போராடுவதால் அவர்கள் தேசிய சக்திகள் இல்லை என்பது ''சமர்'' பத்திரிகையினதும், ஒரு சாராரினதும் வாதமாகும். இப்பிரச்சனைகள் சகலவற்றையும் வர்க்க கட்டமைப்பு, வர்க்க பார்வை என்று கூறப்படுவதற்குள் உள்ளடக்கி விட்டால்....'' என்ற தங்கள் கருத்தில் திரிபு வாதத்தில் மிகத்தெளிவான பக்கங்கள், உலகில் உருவாகும் அனைத்து பிரச்சனைகளும், கருத்துக்களும் வர்க்கத்தன்மைக்கு உட்பட்டதே. இது அடிப்படை மார்க்சிச விதியாகும். இவ்வடிப்படை மார்க்ஷிசம் பிழையெனின் மார்க்ஸ், எங்கல்ஸ், லெனின், ஸ்டாலின், மாவோ மற்றும் மார்க்சிசத்தின் அறிஞர்கள் வெளியிட்ட கருத்துக்களை மனிதம் எடுத்து விமர்சிப்பது தான், ஒரு விமர்சனத்தின் ஆரோக்கியமான அணுகுமுறையாகும். மனிதத்தின் கருத்துக்கு எதிராக பல வெளியீடுகள் உள்ளது. 2ம் அகிலத்திற்கும், லெனினுக்கும் இடையில் இது தொடர்பாக காரசாரமான விவாதம் நடைபெற்றுள்ளது. இதைப்பற்றி ஒரு விமர்சனத்தை முன்வைக்காமல், வர்க்கத்தன்மையில்லை என ஒற்றை வரியில் சொல்வதென்பது; தமது கருத்துக்கே கருத்துப்பலம் இல்லாது மட்டுமன்றி இது கடைந்தெடுத்த அடிப்படை திரிபு வாதமாகும்.

''தெளிவாகவும் உறுதியாகவும் கூறமுடியும் புலிகள் எந்த மக்கள் பிரிவினதும் பிரதிநிதிகளல்ல. மக்கள் பிரதிநிதிகள் என்று சொல்லப்படுமிடத்தில் குறைந்த பட்சம் முதலாளித்துவ ஜனநாயகமாவது இருக்க வேண்டும்.'' தங்கள் வாதத்தில் எந்த பிரிவினதும் பிரதிநிதிகளல்ல என்ற விடயத்தை உறுதிசெய்ய முதலாளித்துவ ஜனநாயகமின்மை ஆதாரத்திற்கு முன்னெடுத்து ஒன்றையொன்று குழப்பியுள்ளீர்கள். முதலாளித்துவ ஜனநாயகம் என்பது முதலாளித்துவ சக்திகளுக்கு மட்டுமானதே. அங்கே பாட்டாளிகளுக்கோ,

www.tamilarangam.net

முதலாளித்துவ சக்திகளுக்குட்பட்ட மற்ற வர்க்க சக்திகளுக்கு எந்த ஜனநாயகமும் கிடையாது. இதே முதலாளித்துவம் சிலவேளை தனது சக்திக்கே ஜனநாயகத்தை வழங்காது பாசிசத்தை கட்டவிழ்த்துவிடும். குறிப்பாக 3ம் உலக நாடுகளில் முதலாளித்துவ ஜனநாயகம் தோன்றவோ, ஆட்சிக்கு வரவோ ஏகாதிபத்தியம் அனுமதிக்காது. இங்கு முதலாளித்துவ சக்திகள் ஏகாதிபத்தியத்துடன் சமரசத்திற்கு செல்வதற்கூடாக, தரகு முதலாளிகளாக மாற்றப்பட்டு மக்களை ஒடுக்குபவர்கள், மற்றோரு பிரிவு பாட்டாளிவர்க்க போராட்ட எழுச்சியின் போது ஆதரிப்பார்கள். ''புலிகள் முதலாளித்துவ ஜனநாயகத்தை கொடுக்காததால் வர்க்கமில்லை. எந்த மக்களின் பிரதிநிதிகளில்லை''. என்ற வாதத்தினூடாக முதலாளித்துவ ஜனநாயகத்தை கொடுத்தால் மட்டுமே வர்க்கமுண்டு என்று கூறவருகின்றீர்கள். அப்படியாயின் முதலாளித்துவ ஜனநாயகத்தை கொடுக்காத சிறீலங்கா அரசு, இந்திய அரசு,.... போன்ற 3ம் உலக நாடுகளின் எல்லாவரசுக்களும் வர்க்கத்தன்மையற்றவர்களா? அப்படித்தான் தங்கள் கருத்து எனின் அப்பட்டமான திரிபுதான். அந்த நாட்டு அரசுக்களின் வர்க்கத்தன்மை தொடர்பான விடயம் பிரிதோர் விவாதத்தை நோக்கியது.

''அனைத்து வர்க்கங்களினதும் சில புலிகளின் நலன்களை அடையும் வழிகளுடன் பிணைந்துள்ளது'' என்ற தங்கள் கருத்தில் புலிகளின் நலன்கள் என எதை குறிக்கின்றீர்கள். தங்கள் கட்டுரை எதிலும் புலிகளின் நலன்கள் என எதையும் சுட்டிக்காட்டவில்லை. ஏன்? குறித்த புலிகளின் நலன்கள் என அமையப்போகும் விடயங்கள் அனைத்தும் ஒரு குழுவை மையமாக வைத்தே. அக்குழு யார்? இங்கு அக்குழு என்பது மொத்த சனத்தொகையில் மிக குறைந்தோரால் பிரதிநிதித்துவம் செய்வதே. அவர்களின் நோக்கு சொத்துக்களை சேர்ப்பது, தமது வாழ்வை பாதுகாப்பதுமே. இவர்கள் அதற்காக மற்றவர்களை அடக்கி ஒடுக்கி, சுரண்டி வாழ்வார்கள். இதனால் எழும் போராட்டங்களில் இருந்து தப்பித்துக்கொள்ள ஆயுதங்களுக்காகவும், நிதி தேவைக்காகவும் ஏகாதிபத்தியத்தை சார்ந்திருப்பார்கள். தமது வாழ்வை மையப்படுத்தி ஏகாதிபத்தியத்திற்கு சந்தையை ஏற்படுத்தவும் பக்கத்தில் உள்ள நாடுகளை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க ஏகாதிபத்தியத்துடன் சாதகமாக செயற்படவும், இன்னொரு ஏகாதிபத்தியத்தை தனக்கு சாதகமான ஏகாதிபத்தியம் ஒடுக்க பயன்படும் வகையிலும், ஒரு புரட்சிகர சக்தி வளர்ந்து விடாமல் இருக்கவும் எப்பொழுதும் இக்குழு செயற்படும். இத்தன்மையை இக்கட்டுரையின் பிரிதோரிடத்தில் ஆராய முற்படுகின்றோம். புலிகளின் நலன்கள் இதுவே. இத்தன்மை தரகு முதலளித்துவத்தின் மிகச்சிறந்த குணாம்சமாகும். இந்த வகையில் ஸ்ரீலங்கா அரசை (பிரேமதாசாவை) சுற்றியும் ஒரு குழுவே இன்று (புலிகள் போல்) செயற்படுகின்றது.

''புலிகள் தமது தனித்துவத்தை அங்கீகரிக்கச்சொல்வது 3ம் உலக நாட்டின் முதலாளித்துவத்தின் போர்க்குணம் அல்ல. அது புலிகள் என்ற அமைப்பின் போர்குணத்தையும் ஒரு தேசியத்தின் போர்குணத்தையும் போட்டுக்குழப்பிக்கொள்கின்றார்கள்'' என எழுதும் மனிதம் குழப்பிக்கொள்கின்றார்கள் என்ற வாதத்தின் ஒரு தேசியத்தின் போர்க்குணம் என்பது சமரத்தை நாடாது என வாதாடுகின்றார்கள். அதிலிருந்து கொண்டு, புலிகள் சமரசத்தை (தங்களை அங்கீகரிப்பதனூடாகவே) நாடுவதால், புலிகளின் போர்குணம் (வர்க்கமற்ற புலிகளை) என குறிப்பிடுகின்றனர். ஒரு தேசியத்தின் போர்குணாம்சம்

www.tamilarangam.net

கூட சமரசத்தை நாடும், இதில் யார் தலைமை தாங்குகின்றார்கள் என்பதை பொருத்தே தங்கியுள்ளது. மனிதம் சஞ்சிகையின் வர்க்கமற்ற உலகு பற்றிய கனவுகளில் இருந்து முடிவுக்கு வருகின்றார்கள். ''முதலாளித்துவ தேசியத்தின் போர்குணம் அல்ல சமரசத்தை நாடுவது'' என சொல்ல வருவது முதலாளித்துவ வர்க்க ஊசலற்ற ஒரு போர்குணமான பிரிவு எனச்சொல்லுவதும், தாங்கள் (முதலாளித்துவ சக்திகள்) ஒரு புரட்சியை சமரசமின்றி கொண்டு செல்ல முடியும் என வாதாடுவதற்கே: இவ்விவாதத்தில், தூண்டிலில் முதலாளித்துவத்தின் சமரசத்தின் பக்கத்தில் புலிகளின் கோரிக்கை அமைவாக இருந்ததாக வாதாட முற்படுவதில் நாம் முரண்படுகின்றோம்.

இது தொடர்பாக விவாதத்தை ''தேசிய சக்தி'' பற்றி தூண்டிலில் மீதான விமர்சனத்துடன் விவாதிக்கின்றோம். தொடர்ச்சியாக மனிதம் சஞ்சிகை விவாதிப்பதைப்பார்ப்போம். ''புலிகள் தமது எந்த இலக்குகளையும் அடையாது என்றும் இராணுவமுறையையே நம்பியிருக்கும் ஒரு அமைப்பாகும்'' இக்கருத்து உண்மைக்கு மாறானது. புலிகள் இராணுவமுறையை கையாளுகின்றனர். அதேநேரம் அரசியல் ரீதியில் அதை அடைய முயல்கின்றனர். இது தொடர்பாக பல உதாரணங்களைப்பார்க்க முடியும். இந்தியா, இலங்கையரசுக்களுடன் ஆன பேச்சுவார்த்தை, தனிநபர் குழுக்களுடன் பேச்சுவார்த்தை, பத்திரிகைகளில் விடும் அறிக்கைகள், வெளிநாட்டில் செய்யும் பிரச்சாரம்... இப்படிபல, இவை அனைத்தும் இராணுவமுறைக்கு அப்பால் அரசியல் ரீதியில் அணுகப்பட்டவை. இன்னுமொரு பக்கத்தில் இராணுவ வன்முறையை கையாளும். அதாவது அரசியலற்ற குழுக்கள் என மனிதம் கூறுவது போல் பார்ப்போமாயின்: இலங்கை, இந்தியா அரசுகளும் அனைத்து நடவடிக்கைகளையும் இராணுவ ரீதியிலே கையாள்கின்றனர். இங்கு தேர்தல் என்பது வெறும் மோசடியே. இராணுவ ஆட்சி நடக்கும் 3ம் உலக நாடுகளின் அரசுக்களும் அப்படியே. அப்படியாயின் இவ்வரசுக்களுக்கு அரசியல் இல்லையா? மனிதத்தின் இயங்கியல் போக்கற்ற ஆய்வின் வெளிப்பாடாக எழும், இவ்விவாதம் தாம் நினைப்பதை திணிப்பதற்காக கையாளப்படுகின்றது.

''அப்படியாயின் இவர்களின் அரசியல் இலக்கு என்ன?'' என்ற மனிதத்தின் கேள்விக்கு அவர் பின் எழுதியுள்ளதை பதிலாக வைக்கின்றோம். ''ஒரு குறிப்பிட்ட நலன்களை அடையும் திசையில் நகர்வதை காணமுடியும். அவர்களது சிறந்த இராணுவ நடவடிக்கைகள் மூலம் அந்த திசையில் கணிசமான அளவு முன்னெறியிருக்கின்றார்கள். அந்த இலக்கு யாதெனில் அந்த அமைப்பின் சொந்த நலன்களை அடையும் இலக்கேயாகும். அவர்களது நடவடிக்கையிலிருந்து இரு விடையங்கள் திட்டவட்டமாகத்தெரிகின்றன. தமிழ் மக்களை அடக்கியாளும் உரிமையை அவர்கள் யாருக்கும் விட்டுக்கொடுக்க மாட்டார்கள். அவர்களது இராணுவக்கட்டமைப்பு தொடர்ச்சியாக பேணப்பட வேண்டும்.'' பிறிதோரிடத்தில் ''புலிகள் எந்த ஏகாதிபத்தியத்தினதோ அன்றி தரகு முதலாளிகளினதோ பிரதிநிதிகள் அல்ல. இதன் அர்த்தம் ஏகாதிபத்திய, முதலாளித்துவ எதிர்ப்பு போராளிகள் புலிகள் என்பதல்ல. புலிகள் ஏகாதிபத்தியத்திடமிருந்து உதவிகளை பெறுவார்கள். அவர்களின் நலன்களுக்கு எதிராகப்போகாமல் கண்டும் காணாதிருப்பார்கள். அவர்களது போராட்டத்தின் இறுதி விளைவு ஏகாதிபத்தியத்திடம் நாட்டை அடகு வைப்பதாக கூட இருக்க முடியும். ஆனால் அவர்கள் ஏகாதிபத்தியத்தின் பிரதிநிதிகளல்ல'' என்ற விவாதம்

www.tamilarangam.net

மனிதம் தமது கருத்துக்கு முரணாகவே வாதாடுகின்றார்கள். இவ்விவாதத்தில் எங்கேயாவது இயங்கியலுடன் அணுகியுள்ளார்களா எனின் இல்லையென்றே அடித்து கூறமுடியும். ''குறிப்பிட்ட திசைநோக்கி'' என்பது ஒரு அரசியல், அதற்கேன ஒரு இலக்குள்ளது. அதை பின் சுட்டிக்காட்டும் போது அவர்களின் சொந்த நலன்களை அடையவே. சொந்த நலன்கள் என்பது எவை? புலிகள் தம்மை சுற்றியுள்ளவர்களின் சொத்துக்களையும், வசதியான வாழ்க்கையையும்... காப்பாற்றவே போராடுவதாக இவர்கள் சொல்கின்றனர். நாம் இக்கருத்துடன் உடன்படுகின்றோம். அதே நேரம் இவ்வுடன்பாட்டில் சுட்டிக்காட்ட விரும்புவது, இவ்வகையான தன்மை அடிப்படையில் சுரண்டவே. இத்தன்மை ஒரு குறித்த வர்க்கத்திற்குரிய சிறப்பம்சமாகும். ஒரு முதலாளியை பார்ப்போமாயின் (நிலப்பிரபு, தரகு முதலாளி....) தொழிலாளர்களை அடக்கியொடுக்கி, தேவை ஏற்படின் கொன்றும் தானும் தமக்கு சார்ந்தோர்க்காக திட்டமிட்ட ஒழுங்கமைப்பில் (இராணுவ ரீதியில்) செயற்படும் பண்பை, புலிகளுடன் ஒப்பிட்டு பார்ப்போமாயின் புலிகளுக்கு அரசியலுண்டு எனப்பார்க்கலாம். மனிதம் கூறுகின்றார்கள்; தமிழ் மக்களை அடக்கியாளும் உரிமையை யாருக்கும் விட்டுக்கொடுக்க மாட்டார்கள். இராணுவக்கட்டமைப்பை தொடர்ச்சியாக பேணுவார்கள் என்ற வாதத்தில் இரு விடயமாக இதை பிரித்துப்பார்க்க முடியாது. அடக்கியாள்வதெனின் இராணுவமின்றி சாத்தியமில்லை. இரண்டும் ஒன்றுக்குள் ஒன்றானது. ''தமிழ்மக்களை அடக்கியாளும் உரிமை'' என்ற விவாதத்தில் ஏன் தமிழ்மக்களை அடக்கியாள வேண்டும்? புலிகளுக்கு என்ன லாபம்? புலிகள் தாமும் தாம் சார்ந்தோரின் வாழ்வை பாதுகாக்கவே மக்களை அடக்கியாளுகின்றனர். தாமும் தாம் சார்ந்தோரின் வாழ்வு என்பது பொருளாதாரத்தை வசதியான வாழ்க்கையை ... இது சுரண்டலை நடத்தும் எல்லாப்பிரிவினருக்கும் பொதுவானது. இது புலிகள் என்ற அமைப்பை பிரதிநிதிப்படுத்தும், தரகு முதலாளித்துவத்தின் செயற்பாட்டால் ஏற்பட்ட விளைவே. ''புலிகளின் சிறந்த இராணுவ நடவடிக்கை'' எனப்பாராட்டை கொடுக்கும் மனிதம் இராணுவம் தொடர்பாக இயங்கியலுடன் ஆராய்ந்து அந்த பாராட்டைக்கொடுக்கவில்லை. புலிகளின் இராணுவ நடவடிக்கைகள் எம் தேசவிடுதலைப்போராட்டத்தில் எப்பொழுதும் சிறப்பானதாக இருந்ததில்லை. எதிர்பாரா நேரத்திலும், எதிர்பாராத வகையிலும், திட்டமிடாத வகையிலும், குட்டிபூர்சுவா இயக்கமாக ஆரம்பத்தில் இருந்த போது செய்த நடவடிக்கைகளாலும் அதில் ஏற்பட்ட அநுபவ ரீதியான யுத்தத்தை விரிவாக்கி இன்று ஒரு ஏகாதிபத்திய வழிகாட்டலில், ஏகாதிபத்தியத்தின் நோக்கத்தை ஈடுசெய்யும் வகையில் யுத்தம் விரிவடைந்துள்ளது. இவர்களின் படுமோசமான யுத்த தோல்விகளை ஒரு சில நடவடிக்கைகளை கொண்டே பார்க்கலாம். ஆனையிறவு தாக்குதல், யாழ் கோட்டை தாக்குதல், முல்லைத்தீவு தாக்குதல்,.... இப்படி பல.

''புலிகள் எந்த ஏகாதிபத்தியத்தினதோ அன்றி, தரகுமுதலாளித்துவத்தின் பிரதிநிதிகளோ அல்ல''. அன்றி எனச்சொல்ல வருவதன் ஊடாக இரு வேறுபடான விடயமாகப்பார்க்கின்றனர். இக்கருத்தை முதலில் வரையறுத்தது மாவோ. இவர்கள் எங்கே மாவோவின் இக்கருத்தை விமர்சித்து இரு வேறுபாடானது எனக்காட்டியுள்ளனர். ஏகாதிபத்தியத்தை சார்ந்தோர் தரகுமுதலாளிகளே. மேற்குறிப்பிட்ட மனிதத்தின் வாதத்தின் தொடர்ச்சியாக ''இதன் அர்த்தம் ஏகாதிபத்திய தரகுமுதலாளித்துவ எதிர்ப்பு போராளிகள் புலிகள் என்று அல்ல''. எவ்வளவு முட்டாள் தனமாக 'மனிதம்' விவாதிக்க

www.tamilarangam.net

முற்படுகின்றனர். இவர்கள் ஏகாதிபத்தியத்தின் பிரதிநிதிகள் அல்ல. ஆனால் ஏகாதிபத்தியத்திற்கு எதிராக போராட மாட்டார்கள். இலங்கையில் ஏகாதிபத்தியம் தலையிடவில்லையா? தனது சுரண்டலை நடத்தவில்லையா? அப்படித்தான் மனிதம் சொல்வார்களானால் அது பிரிதொருவிவாதம்.

புலிகள் சுரண்டலை (மனிதம் கூறும்போது தனது குழுநலன் சார்ந்து என்று சொல்லுகின்றார்கள்) நடத்துகின்றது. புலிகளும், ஏகாதிபத்தியமும் சுரண்டலை நடத்தும் பொழுது இருவருக்குமிடையில் சுரண்டல் தொடர்பாக எழும் முரண்பாட்டை இருவிதமாக மட்டுமே தீர்க்கமுடியும்.

(1) ஏகாதிபத்தியத்துடன் கைகோர்த்து இணைந்து சுரண்டலை நடத்துவது. (இன்று இந்தியா, இலங்கை ... போன்ற மூன்றாம் உலக நாடுகளின் அரசுகள் செய்வது போல்)
(2) அப்படி சுரண்டலில் எழும் போட்டி மோதலாக (மனிதம் குறிப்பிடுவது போல் புலிகளின் நலன்களுக்கு எதிராக செயற்பட்டால்) வெடிக்கும். இதிலிருந்து இந்தியா, இலங்கையுடன் புலிகளின் மோதலைப்பார்க்கலாம்.

ஏகாதிபத்தியத்துடன் மோதல் ஏற்படாமல் இருக்கும் வரை அங்கு ஏகாதிபத்திய சுரண்டலை அனுமதிப்பது என்பது; புலிகள் தரகுமுதலாளித்துவ (ஏகாதிபத்திய கைக்கூலிகள்) பிரதிநிதிகளாகப்பார்க்கலாம். மோதல் ஏற்பட்டால் பிரிதொரு ஏகாதிபத்தியம் சார்ந்து நிற்கவும் அல்லது மீண்டும் ஏகாதிபத்தியத்துடன் ஐக்கியப்படவும் முடியும்.

மனிதம் ஏகாதிபத்தியம் பற்றிய கற்பனவாதப்பார்வையை பார்ப்போம். ''புலிகள் ஏகாதிபத்தியத்திடம் இருந்து உதவியை பெறுவார்கள். அவர்களின் நலன்களுக்கு எதிராக போகாமல் கண்டும் காணாமல் இருப்பார்கள். அவர்களது போராட்டத்தின் இறுதி விளைவு ஏகாதிபத்தியத்திடம் நாட்டை அடைவு வைப்பதாக கூட இருக்கமுடியும். ஆனால் அவர்கள் ஏகாதிபத்தியத்தின் பிரதிநிதிகள் அல்ல''. ஒன்றுக்கு பின் ஒன்றாக கருத்துக்களை உழறிக்கொட்டப்பட்டுள்ளது. ஏகாதிபத்தியத்திடமிருந்து உதவியப்பெறுவார்கள். அவர்களின் நலன்களுக்கு எதிராகப்போகாமல் கண்டும் காணாமல் இருப்பார்கள். போராட்டத்தின் இறுதியில் ஏகாதிபத்தியத்திடம் நாட்டை அடகுவைப்பார்களெனின் இவர்கள் யார்? ஏகாதிபத்தியத்திடம் உள்ள உறவு என்ன? ஏகாதிபத்தியம் உதவி கொடுக்க என்ன காரணம்? ஏன் நாட்டைப்புலிகள் ஏகாதிபத்தியத்திடம் அடகு வைக்கின்றார்கள்? மேலுள்ள காரணத்தில் இருந்தே மனிதம் ஒத்துக்கொள்ளுகின்றார்கள் தரகுமுதலாளித்துவத்தின் சிறப்பானபிரதிநிதியாக புலிகள் இன்று உள்ளதாக பின் ஆனால் போட்டு எழுதுகின்றனர். ஏகாதிபத்தியத்தின் பிரதிநிதிகள் அல்ல. மனிதம் முன் சொன்னதையே மறுக்கின்றனர். மனிதம் முன் சொன்னது போல் (மற்றவர்களையும் குழப்பி) என்பது மனிதத்தையே குழப்பி, அவர்களாகவே உளறத்தொடங்கியதை பார்க்க முடிகின்றது. (தாமும் குழம்பி) சமர், தூண்டில் உங்களை குழப்பி உளற வைத்ததற்கு, மனிதத்தின் தெளிவான முகத்தை அம்பலப்பட வைத்ததற்கும் மனிதம் வாசகர்கள் நன்றி கூற வேண்டும்.

''குறிப்பிட நலன்களை அடையும் திசையில் நகர்வை காணமுடியும்'' என வாதிடும் மனிதம்

www.tamilarangam.net

பிரிதொரிடத்தில் ''முன்னுக்கு பின் முரணாக தான் கூறியவற்றிற்கு முரணான நடவடிக்கையில் ஈடுபடுவது தவிர்க்க முடியாது. இது மத்தியதரவர்க்கத்தின் அல்லது முதலாளித்துவ வர்க்கத்தின் ஊசலாட்டப்பகுதி என கொள்ளக்கூடாது''. குறிப்பிட்ட நலன்களை அடையும் எனக்குறிப்பிட்டு, முன்னுக்குப்பின் முரணானது எனச்சொல்வதில், புலிகளின் வர்க்க மதிப்பீடுபற்றி மனிதத்தின் பார்வைக்குறைபாடுதான் இதை சொல்ல வைத்துள்ளது. முன்னுக்குப்பின் முரணாக கருத்து வைப்பது சுரண்டலை நடத்தும் அனைத்துப்பிரிவினருக்கும் உள்ள சிறப்பான அம்சமாகும்.

''ஒரு பலம் வாய்ந்த இராணுவம் புலிகளிடம் உள்ளமையால் இந்தியா, இலங்கை இராணுவங்கள் தோற்கடிக்க முடியவில்லை'' என்ற வாதம் இராணுவம் என்பது நிரந்தரமானதாகவும் அழிவுகள் இன்றி இருப்பதாகவும், இயங்கியலுக்கு முரணாக மனிதம் விவாதிக்கின்றனர். இராணுவத்தின் இருப்பு எப்பொழுது மக்களின் ஆதரவுடன் மட்டுமே சாத்தியமாகும். ஒரு யுத்தத்தை நடத்தும் குறிப்பான இன்றைய நிலையில், இது மேலும் மக்களின் நலனுடன் கூடுதலாக இணைக்கப்படுகின்றது. இன்று தமிழ்மக்களின் கோரிக்கைகளை புலிகள் தம்முன் வைத்திருப்பதே, புலிகள் தொடர்ந்து நிலைத்திருக்க முடிகின்றது. குறித்த இப்போராட்டத்தை புலிகள் ஏகாதிபத்தியம் சார்பாக (மனிதம் முன் சொன்ன அடிப்படையில்) நின்று மக்கள் மீது வன்முறையைப்பாவித்தபடி போராடுகின்றனர்.

''எந்த ஏகாதிபத்தியமும் புலிகளுடன் முரண்பட்டால் அதாவது புலிகளின் நலன்களுக்கு எதிராக செயற்பட்டால், எந்த ஏகாதிபத்தியத்துக்கு எதிராகவும் இராணுவ நடவடிக்கையில் இறங்க புலிகள் தயங்க மாட்டார்கள். இதைப்புரிந்து கொள்வதற்கு சதாம், நோரிக்கோ போன்றோர்கள் அமெரிக்காவின் அடிவருடிகளாக இருந்த பொழுது தமது சொந்த நலன்களுடன் அமெரிக்கா முரண்பட்ட பொழுது யுத்தம் புரிய தயாரானதை கவனத்தில் எடுக்க வேண்டும்'' என்ற வாதத்தில் மனிதம் சிறப்பாக திரிபை முன்வைக்கின்றனர். புலிகளுடன் சதாம், நோரிக்கோ ... போன்றோரை ஒப்பிட்டு யுத்தம் புரிய தயாரானதாக கூறும் இவர்கள், சொந்த நலன்களுக்காக போராட முற்பட்டதாக கூறுவதன் ஊடாக, சொந்த நலன்கள் (என்பது மனிதத்தின் பார்வையில் வர்க்கமற்ற தன்மை) என மீண்டும் வாதாடுகின்றனர். அப்படியாயின் மூன்றாம் உலக அரசுக்கள் எல்லாம் சதாம், நோரிக்கோ... போன்றவையே. அப்படியாயின் அவ்வரசுக்களுக்கு வர்க்க அடிப்படையற்ற குழுக்களே. இது மனிதத்தின் கருத்து. இக்கருத்து சிறப்பாக மனிதத்தின் திரிபை அம்பலப்படுத்த வருகின்றது. மனிதம் ஊளறிக்கொட்டியதில் வெளிப்பட்டு விட்ட இவ்விடயம், மனிதம் இது தொடர்பாக என்ன கருத்தை கூறுகின்றார்கள் எனப்பார்த்தே, மூன்றாம் உலக அரசுக்களுக்கு வர்க்கமுண்டு என வாதிக்கலாம்.

சதாம், நோரிக்கோ.... போன்றார் அமெரிக்கா ஏகாதிபத்தியத்தின் சிறப்பான பிரதிநிதிகளாக அவ்வவ் நாடுகளில் செயற்பட்டனர். இவர்களின் வர்க்கப்பாத்திரம் தரகுமுதலாளித்துவமே. இவர்களுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலுள்ள மோதல் என்பது சுரண்டல் தொடர்பாக எழுந்தவை தான். அமெரிக்காவுக்கு சென்று கொண்டிருந்த பெரியளவிலான சுரண்டலைக்கண்டு, ஆத்திரமுற்ற இவர்கள் சுரண்டலை முழுமையாகப்பெற, மக்களிடமிருந்து அமெரிக்க எதிர்ப்புணர்வை பயன்படுத்த முனைந்தனர். இவர்களின் தோல்விக்கு

www.tamilarangam.net

முக்கிய காரணம் இவர்கள் சுரண்டலை நடத்தியதும், மேலும் சுரண்டலை தான் முழுமையாக பெறும் வகையில் யுத்தத்தை அதற்கிசைவாக நடத்தியதும், ஏகாதிபத்தியம் பற்றிய ஊசலாட்டமுமே. இதுவே இவர்களின் எழுச்சியும் தோல்வியுமாகும். இது போன்றே புலிகளும் ஏகாதிபத்தியத்தின் செல்லப்பிள்ளையாக இருந்ததும், இந்தியாவும் அது சார்ந்த ஏகாதிபத்தியங்கள் புலிகளை அழிக்க முற்பட்டதும், மேற்கத்தய தரகாக இருந்த புலிகளின் ஊசலாடப்போக்கும், இந்தியாவுடன் சமரசத்தை நாட முற்பட்டதும்; இந்தியா, புலிகள் தமக்குள் கொண்டிருந்த நம்பிக்கையீனமும் ஒன்றையொன்று மோதும்வகையில் நகர்த்துவதில் மேற்கத்தைய ஏகாதிபத்தியங்கள் வெற்றி பெற்றது. இதன் வெளிப்பாடாகவே இலங்கை, புலிகள் இடையேயான பேச்சுவார்த்தையும், இரண்டும் ஒன்றாகவிணைந்து இந்தியாவை வெளியேற்ற முயன்றது.

''சதாம், நோரிக்கோ... ஆகியோருக்கு இருந்த வாய்ப்புகளை விட புலிகளுக்கு நீண்டகால யுத்தத்துக்கு சாதகமான அம்சங்கள் அதிகமாகவே உள்ளது. அவர்கள் நகர்புற கொரில்லா வடிவத்தில் பல படிப்பனைகளைப்பெற்ற, சயனைற்றை கழுத்தில் கட்டிய ஊழியர்கள்''. இங்கு நகர்ப்புற கொரில்லாவாக இருந்தால் மட்டும் ஒரு யுத்தத்தை நடத்தி விட முடியாது. நகர்ப்புற கொரில்லா தொடர்ந்து இருக்க ஆதரவான மக்கள் சக்திகள் தேவை. அல்லது குழுநலன் சார்ந்தோரின் குறிப்பான ஆதரவு தேவை. குறிப்பான ஆதரவு என்பது; ஏகாதிபத்தியம் சார்ந்த தரகுமுதலாளித்துவத்தின் ஆதரவே. இவையில்லாத எந்த சக்தியும் ஒரு அரசியல் சக்தியாகவோ அது சார்ந்த இராணுவம் ஆகவோ இயங்க முடியாது அழிந்து போகும்.

''இவ்வெளிப்படையான தெளிவாகத்தெரியும் உண்மைகள் ஒரு போராட்டத்தை முன்னேடுப்பதில் புலிகளைப்புரிந்து கொல்வதற்கு போதுமானவையே.'' எண்ற மனிதத்தின் இறுதிப்பந்தி மேலுள்ள விவாதத்தில் ஒன்றுக்குப்பின் ஒன்றாக விவாதித்துள்ளதன் மூலம், புலிகள் பற்றி எந்த இலகுவாக வந்தடையும் பார்வையை காட்டுகின்றது. சமர், தூண்டில் ஆதாரமாக பல விடயங்களை வைத்து விவாதித்தன. அவைகளை ஒவ்வொன்றாக விமர்சனம் செய்யாது, தமது கருத்துக்கும் ஆதாரங்களை முன்வைக்காமல் சொன்னதுடன் மார்க்சியத்தின் அடிப்படையையே கேள்விக்கு உள்ளாக்கி, அது பற்றி விமர்சன ரீதியாக எதுவும் முன்வைக்காமல் மார்க்ஷியம் பிழை எனக்கூறியும் உள்ளனர். ஒரு விமர்சகர் தமது கருத்தை முன்வைக்கும் பொழுது தொடர்ச்சியாக விவாதிப்பதற்கு தயாராகவிருக்க வேண்டும். விவாதத்தை நடத்த தயார் இன்மையை இரு சந்தர்ப்பத்தில் சொல்லி, தம்து கருத்தை திணித்துவிட முயலும் மனிதத்தின் போக்கு போராட்டத்தில் மிகப்பெரிய பாதிப்பை ஏற்படுத்து. அடிப்படை திரிபை பரப்பிவரும் மனிதம் மற்றைய சஞ்சிகைகளை (தாமும் குழம்பி) குழப்பக்காரர்கள் எனச்சொல்லி தமது மேதாவித்தனத்துடன் திரிபுகளைத்திணிக்க முயல்வது மிக மோசமான நடவடிக்கையாகும். இது புலிகள் எப்படி மாற்றுக்கருத்தை கொண்டிருப்பவர்களை கொன்று போராட்டத்தில் தடையாகவிருக்கின்றார்களோ அதே போன்று மாற்றுச்சஞ்சிகைகளின் கருத்துக்களை விமர்சனத்திற்கு தயாரின்றி ஒற்றைவரிகளில் பதிலளித்து திரிபை புகுத்த முயல்வது போராட்டத்திற்கு இன்னுமொரு தடையாகும். மனிதம் மார்க்சிய மூலவர்களின் கோட்பாடுகளில் பிழையிருக்கின்றது என்றவாதம், மிகச்சிறப்பாக சீனக்கம்யூனிட் கட்சி (டெங் கும்பல்) 1984இல் கூறியதற்கு ஒத்ததே. ''மர்க்சின் சில கருத்துக்கள் இப்போதைய காலகட்டத்திற்கு ஏற்றவையல்ல. இப்போதைய நவீனகாலத்தின்

www.tamilarangam.net

நிலமைகள் பற்றி மார்க்ஷீக்கோ அல்லது எங்கசுக்கோ அல்லது லெனினுக்கோ தெரியாது''. (நன்றி – இரஷ்சியக்காரடியின் உண்மைமுகம்) இக்கருத்தை சொல்லியே சீன கம்யூனிசக்கட்சி முதலாளித்துவத்தை மீட்டார்கள் அதே கருத்தை மனிதம் சொல்வதிலிருந்து, மனிதம் எதை செய்ய முயலுகின்றார்கள் என்பதை மனிதம் வாசகர்களே சிறப்பாக புரிந்து கொல்வார்கள்.

**''உயிர்ப்பு 1'' பற்றிய மனிதத்தின் விமர்சனம் தொடர்பான எமது விமர்சனம்**

''இயற்கையும் சமூகமும் தனிப்பட்ட மனித மனத்திற்கு வெளியே இருந்து அவனது விருப்பு வெறுப்பை சாராது இயங்கிக்கொண்டிருப்பதாகும் என்ற கருத்து கட்டுரையில் கூறப்படுகின்றது. ஆனால் அதன்பின் இவ்வாறு குறிப்பிடுவதன் மூலம் நாம் தனிப்பட்ட நபர்களுக்கு அவர்களுக்கும் அவர்களது குணநலன்களுக்கும் வரலாற்றில் எந்தப்பாத்திரமும் கிடையாது என கூறவில்லை'' என்று உயிர்ப்பில் கூறப்படுகின்றது. ''இயற்கையுடனும் சமூகத்துடனும் மனிதன் கொண்டுள்ள அவனது விருப்பு வெறுப்புக்களை கொண்டுள்ள இயங்கியலை முதல் கருத்து நிராகரிக்க அவனது வரலாற்று பாத்திரத்தை இரண்டாவது கருத்து அங்கீகரிக்க குழப்பமே மீதியாகின்றது. ஒரு ஓட்டமான வாசிப்பில் இரண்டாவது கருத்து அடிபட்டு போகின்றது. கட்டுரையில் இயற்கைக்கும் சமூகத்திற்கும் மனிதனுக்கும் இடையிலான உறவு என்பது விளங்கப்படவில்லை'' என்று மனிதம் உயிர்ப்பு கூறியதை முன்னொடுத்து விமர்சிக்க முற்பட்டனர். இருந்தும் மனிதம் கூட குறிப்பிட்ட ''விளங்கப்படவில்லை'' என்ற விடயத்தை விளங்கப்படுத்தவில்லை. இது ஒருபுறமிருக்க உயிர்ப்பின் கருத்து தெளிவாக சுட்டிக்காட்டியுள்ளதை பார்க்க முடிகின்றது. மனிதம் சஞ்சிகை சமூகப்போக்கு தனிமனிதன் விரும்பியபடி இயங்குவதாக கூற முயலுகின்றனர். அது தான் ஓட்டமான வாசிப்பில் இரண்டாவது கருத்து அடிபட்டு போகின்றது என்ற வாதம் (இது எப்படி எனப்புரியவில்லை ?). சமூகத்துக்கும் மனிதர்க்கும் இடையிலான உறவில் தனிமனிதன் அல்லது குணநலன்கள் சமூகத்தின்மீது ஆற்றும் பங்கு, இவற்றுக்கிடையிலான உறவு பற்றியும் கூறவருகின்றன. இதை உயிர்ப்பு சஞ்சிகை விரிவாகவும் ஆழமாகவும் பதிலளித்துள்ளனர். நாம் இதை மேலும் விளக்குகையில் ஒரு தனிமனிதன் விரும்பும் அனைத்தையும் சமூகம் செயற்படுத்தாது. ஒருவன் விரும்பலாம் கம்யூனிஸ் சமூகத்தை ஆனால் சமூகம் அதை ஏற்க வேண்டும் என்றோ, சமூகம் அதை இயக்கிக்கொண்டிருப்பதகவோ அர்த்தமல்ல. சமூகம் அதை விரும்பின் மாத்திரமே சாத்தியம். புலிகளில் இணையும் ஒருவன் கொலை செய்யவென இணைவதில்லை. அவன் விரும்புவது தேசவிடுதலைப்போராட்டத்தை தான். அவன் விரும்புவதற்கு மாறாக கொலை செய்கின்றான் எனின்; புலிகளின் அரசியல் போக்குக்கு மாற்றப்படுகின்றான். யார் எதிர்கின்றானோ அவன் தனிமனிதனாக வெளியேற அல்லது கொல்லப்படுகின்றான். இங்கு தான் தனிமனிதப்பாத்திரம் வெளிப்படுகின்றது. இது புலிகளின் போக்கையொற்றி இசைவாக நடப்பதில்லை. அதே போல் இக்கொலையை முன்நின்று நடத்துவதற்கூடாக தனிமனிதப்பாத்திரம் புலிகளின் போக்குடன் நிகழ்த்தப்படுகின்றது. இதற்கு சிறந்த உதாரணமாக பிரபாகரனைப்பார்க்கலாம். எனவே சமூகப்போக்கு என்பது தனிமனித



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விருப்பு வெறுப்புக்கு அப்பால் பட்டது. ஒரு மனிதன் விரும்பும் பட்சத்தில் எல்லாம் மாறிவிடாது.

''முன்னணிப்பாத்திரம் வகிக்கும் நபர்களுக்கூடாகவன்றி அவர்கள் எந்த சமூகசக்திகளை வர்க்கப்பிரதிநிதித்துவ படுத்துகின்றார்கள் என்பதைக்கண்டறிய வேண்டும்'' என குறிப்பிடப்படுகின்றது. ''இது மார்க்ஷியத்தின் சமூதாய ஆய்வுமுறையை மிகவும் எளிமையாக புரிந்து கொண்டதன் வெளிப்பாடே''. ''ஒரு சமூகசக்தியோ அன்றி வர்க்கங்களையோ பிரதிநிதித்துவப்படுத்தாமல் தமது குழுநலனை மையமாக வைத்து சமூகத்தில் நிலவும் முரண்பாடுகளை தாமே கையிலெடுத்து அத்துடன் கவர்ச்சிவாதத்தையும் சேர்த்து பலகுழுக்கள் கும்பல்கள் மக்களை அடக்கியாள்கின்றது''. என்ற மனிதத்தின் வாதத்தில் உயிர்ப்பு குறிப்பிட்டு கூறிய ''சமூக சக்திகளை வர்க்கங்கள் பிரதிநிதித்துவப்படுத்துவதாக'' சொன்னதை மனிதம் நிராகரிக்காமலேயே இதை இலகுபடுத்திய மார்க்ஷியம் எனச்சொல்லி, தமக்கு சாதகமாக எடுக்க முயன்ற மனிதம், அதற்கு மாறாக குழம்பி, சமூகசக்திகளையோ அன்றி வர்க்கங்களையோவோ பிரதிநிதித்துவபடுத்தாத குழுக்களைப்பற்றி கூறியுள்ளனர். இது நான்கு வரிக்கு முன் கூறியதை திரித்துப்பிரட்ட முயல்வதை பார்க்க முடிகின்றது. குழுவை மையமாகவைத்து கவர்ச்சியைக்காட்டி எனச்சொல்லும் இக்கருத்து தொடர்பாக முன்பே விமர்சித்துள்ளோம். மனிதத்தை கேட்கவிரும்புகின்றோம், இன்று உலகில் குழுநலன்களுக்கு அப்பால் கவர்ச்சியைக்காட்டாத அரசு ஒன்றைக்காட்ட முடியுமா? இதில் இன்று புரட்சிகர அமைப்பை விடுத்தே கூறுகின்றோம். எல்லாம் ஒரு குறித்த வட்டத்துக்குள் செயற்படும் அரசுக்களே.

''புலிகளை தேசிய விடுதலைப்போராட்டத்தில் ஊசலாட்டம் காட்டுபவர்களாக காட்டமுனைவது தவறு'' என்று மனிதம் உயிர்ப்பு சஞ்சிகையை விமர்சிக்கின்றனர். அதேநேரம் இக்கருத்தை விரிவான ஆய்வில்லாமல் எடுத்ததாக சொல்லவரும் மனிதம் தன் விரிவான ஆய்வில் புலிகளை தேசவிடுதலைப்போராட்டத்தில் ஊசலாட்டம் அற்றவர்கள் எனச்சொல்லுகின்றனர். புலிகளின் ஊசலாட்டம் தொடர்பாக சமர், தூண்டில், உயிர்ப்பில் பல ஆதாரங்கள் முன்வைக்கப்பட்டது. புலிகளின் ஊசலாட்டம் தொடர்பாக மனிதம் வாசகர்கள் அனுபவத்திலும், சம்பவங்களினூடாக அறிவார்கள்.

''பொருளாதார நிலைக்குப்பொருத்தமான சமூக உணர்வாக தேசிய இனங்கள் ஒன்று கலப்பது என்னும் நிகழ்வு தோன்றுகின்றது''. என்ற உயிப்பின் கருத்தையொட்டி மனிதம் ''தேசிய இனங்கள் ஒன்றுகலக்கும் நிகழ்வு என்ற பிரச்சனையில் பொருளாதாரநிலையின் பங்கு என்ன? என்பது பற்றி மேற்படி கருத்தாவது ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல. ஏனெனில் இது பொருளாதாரநிலைக்கு மிகவும் கூடியவழுத்தம் கொடுக்கின்றது. தேசிய இனங்கள் ஒன்றுகலப்பது என்பது, அதற்கு தேவையான அடிப்படையான பொருளாதாரநிலையை கோருமென்பது புரிந்து கொள்ளப்படக்கூடியதே. மாறாக தேசிய இனம் ஒன்றுகலப்பது என்பது ஒரு கலாச்சாரப்புரட்சி சம்பந்தப்பட்ட பிரச்சனை'' என்ற மனிதத்தின் வாதத்தில் ஒரு பக்கம் மட்டுமே உண்மை. ஒரு கலாச்சாரப்புரட்சி சோசலிச சமூதாயத்தில் மட்டுமே சாத்தியமானது அல்ல. முதலாளித்துவ கலாச்சாரப்புரட்சியும்

www.tamilarangam.net

நிகழுகின்றன. உயிப்பின் விவாதம் முதலாளித்துவ தோற்றத்தில், முதலாளித்துவ முதிர்ச்சியில் தேசிய இனம் ஒன்றுகலப்பது பற்றியே. முதலாளித்துவ பொருளாதாரத்தின் வளர்ச்சியை மையமாக வைத்து ஒரு கலாச்சாரப்புரட்சி நிலப்பிரபுத்துவத்திற்கு எதிராக முதலாளித்துவ நாடுகளில் நடத்தப்பட்டது. இது தேசிய இனங்களை ஒன்றிணைக்கும் வகையில் தவிர்க்கமுடியாது மையப்படுத்தப்பட்டது. இது தொடர்பாக சமர்4இல் பிரான்சில் இருந்த பல தேசிய இனம் இன்று இல்லாமல் போய், ஒரு மொழி ஆதிக்கத்துக்கு வந்தது தொடர்பான ஒரு கட்டுரை தெளிவுபடுத்தியுள்ளது. இங்கு அம்மொழிகள் அழிய அடக்குமுறை மற்றும் பல வழிகளுக்கூடாக இது நடத்தப்படுகின்றது. ஆனால் இங்கு பெரிய எதிர்ப்பு ஏற்படாமலிருக்க முக்கிய காரணமாகவிருந்தது பொருளாதார நிலையே. இந்நிலமை மூன்றாம் உலகநாடுகளில் தோன்றாமைக்கு முக்கியகாரணம் அங்கு ஒரு முதலாளித்துவ அரசு இன்மையும், பொருளாதாரநிலையின் பலமின்மையே. தேசிய இனங்கள் ஒன்றுகலப்பது பொருளாதாரவாதத்தின் அடிப்படையிலேயே. இதற்கு மாறாக பொருளாதார இருப்பு இல்லாமல், ஒருபோதும் ஒரு கலாச்சாரப்புரட்சியில் மட்டும் தேசிய இனம் ஒன்று கலக்காது. கலாச்சாரப்புரட்சி பொருளாதார வாழ்வுள்ள இடத்தில் ஒரு ஊக்குவிக்கும் பண்பையும், மாற்றத்தையுமே செய்கின்றது.

''முதலாளித்துவத்தின் ஆரம்பகட்டத்தில் தேசிய இனங்கள் விழிப்பு அடைந்ததாகவும், முதலாளித்துவத்தின் முதிர்ந்தநிலையில் தேசிய இனங்கள் ஒன்றுகலப்பது பற்றியும்'' என்று உயிப்பு கூறிய கருத்தை மனிதம் ''ஏற்றுக்கொள்ளப்பட கூடியது அல்ல முதலாளித்துவத்தின் ஆரம்பகட்டத்தில் இல்லாத தேசியவினங்கள் இன்றையவுலகில் விழிப்படைவதையும், முதலாளித்துவ முதிர்ச்சி, வளர்ச்சியடைந்த நிலையிலிருக்கும் நாடுகளில் தேசியவினங்கள் ஒன்று கலக்க தயாராகவில்லாததையும் மேற்படிகருத்தானது விளக்கமாட்டாது'' என்ற மனிதத்தின் கருத்தில் முதலாளித்துவ நாடுகளையும், மூன்றாம் உலகநாடுகளையும் ஒன்றாக குழப்பி தேசிய இனப்பிரச்சனையை ஆராய முற்படுகின்றனர். ''முதலாளித்துவத்தின் ஆரம்பகட்டத்தில் இல்லாத தேசிய இனங்கள் இன்றையவுலகில் விழிப்படைவதையும்'' என்ற வாதத்தில் ஒரு முதலாளித்துவ நாட்டில் புதிதாக ஒரு தேசிய இனம் உருவாகின்றது. எந்த நாட்டில் நடந்தது? அடக்கப்பட்ட தேசிய இனங்கள் மூன்றாம் உலகநாடுகளில் ஆரம்பம் முதலே இருந்துவந்த தேசிய இனங்கள் இன்று போராடமுற்படுகின்றனர். இது மூன்றாம் உலகநாடுகளுக்கு மிகப்பொருத்தமானது. ஏகாதிபத்தியத்திலோ, முதலாளித்துவநாட்டிலோ போராட்டமாக தேசிய இனப்போராட்டம் முன்வர வேண்டுமாயின், அங்கு பொருளாதார நெருக்கடி ஏற்பட வேண்டும். அத்துடன் அங்கு சரியான புரட்சிகர சக்தி இல்லாமல் இருக்க வேண்டும். மற்றும் ''முதலாளித்துவம் வளர்சியடைந்திருக்கும் நாடுகளில் தேசிய இனங்கள் ஒன்றகலக்காததை'' சுட்டிக்காட்டும் மனிதம், நாடுகளின் அரசு பற்றி மதிப்பீட்டை இழக்கின்றனர். இந்நாடுகள் தனித்தனியான அரசுக்களாகவிருப்பதையும், இவை ஒன்றான நாட்டுக்குள் இல்லாமலிருப்பதையும் பார்க்கத்தவறி, கலப்பு பற்றி கூறி, தீர்ப்பை புகுத்திவிட, சம்பந்தமில்லாதவிடத்தில் பொருத்தமுயலும் இப்போக்கு இயங்கியலுக்கு மாறானது.

www.tamilarangam.net

''பலமான முதலாளித்துவ வளர்ச்சி முற்போக்கான தேசியத்தையே தோற்றுவிக்கின்றது. பலவீனமான முதலாளித்துவ வளர்ச்சி பிற்போக்கான தேசியத்தை தோற்றுவிக்கின்றது'' என்ற உயிர்ப்பின் கருத்தை மறுக்கும் மனிதம் ''இது தவறான கருத்தாகும். முதலாளித்துவம் இல்லாத போது புரட்சியாளார்களால் சரியான முற்போக்கான தேசியத்தை உருவாக்க முடியும்'' என்ற இவ்விவாதம் உயிர்ப்பின் முன்னைய கருத்தை மறுப்பது என்பது அடிப்படையில் என்னத்தை கூறுகின்றார்கள் எனப்புரியவில்லை? பலமான முதலாளித்துவ சக்திகள் இருப்பின், தனது நலனுக்காக தாகுமுதலாளித்துவம், நிலப்பிரபுத்துவத்துக்கு எதிராக போராடமுற்படுவதனால் முற்போக்கு தன்மையையே பிரதிபலிப்பார்கள். பலவீனமானதாகவிருக்கும் போது சமாசத்தை தாகுமுதலாளிகளுடன் செய்து கொள்வது அல்லது பாட்டாளிவர்க்கத்துடன் இணைந்து கொள்வது நிகழும். மனிதம் கூறிய புரட்சியாளர்கள் சரியான முற்போக்கு தேசியத்தை உருவாக்கமுடியும் என்பதை உயிர்ப்பு சஞ்சிகையும் சுட்டிக்காட்டியுள்ளது. அதை மனிதம் சஞ்சிகையின் பார்வைக்கு முன்வைக்கின்றோம். ''தேசியம் என்பதில் அந்த சமூகத்தின் பல்வேறு வர்க்கங்களின் நலன்களும் பிரதிபலிக்கச்செய்கின்றன. தேசியயெழுச்சியில் இணைந்துகொள்ளும் ஒவ்வொருவர்க்கம் தத்தமது நலன்களை மனதில் கொண்டே செயற்படுகின்றன. எந்த வர்க்கம் (மனிதத்தின் பார்வையில் புரட்சியாளர்கள்) தேசிய இயக்கத்தில் தலைமை தாங்குகின்றது என்பதை பொருத்து தேசிய இயக்கத்தில் முற்போக்குத்தன்மை அமைகின்றது''. இக்கருத்து மனிதம் கூறிய 22ம் பக்கத்தில் அடுத்த பந்தியிலிருந்தது. இது மனிதத்திற்கு புரியாத கடுமையான மார்க்ஷியமாகவிருந்ததோ என சந்தேகமாகவுள்ளது.

உயிர்ப்பு தாகுமுதலாளித்துவத்தின் தொழிற்படும் முறைபற்றி கூறப்பட்டதை மனிதம் சஞ்சிகை கூறுகின்றார்கள் ''கோட்பாட்டளவில் பார்த்தால் தரகுமுதலாளிவர்க்கம் இப்படியே தொழிற்படும், ஆனால் இலங்கையில் தரகு முதலாளிவர்க்கம் ஒரு இயங்குசக்தியென்று நாம் பார்க்கமுடியுமா? தான் திட்டமிட்டு ஏனையவற்றை முன்னேடுக்கும் ஒரு சக்தியாக இலங்கையில் தரகுமுதலாளித்துவ வர்க்கம் பார்க்கமுடியுமா? குறிப்பாக தமிழ் தாகு முதலாளித்துவ வர்க்கம் இதை விட மோசமான நிலையிலேயே உள்ளது'' என்ற மனிதத்தின் விவாதம் முன்னைய விவாதத்தில் பதிலளிக்கப்பட்டாலும் மீண்டும் பார்ப்போமாயின்; இலங்கையில் தாகு முதலாளித்துவவர்க்கத்தயு ஒரு இயங்குசக்தியாக பார்க்க முடியுமா? என்ற கேள்வியிலிருந்து இலங்கையரசு உட்பட அனைத்தும் வர்க்கமற்ற தன்மையென கூறும் மனிதம் தனது திரிபை அப்பட்டமாக தோலுரித்து காட்டுகின்றனர். திட்டமிட்டு இலங்கையாசு (தாகுமுதலாளிவர்க்கம்) செயற்படமுடிகின்றதா? இலங்கையின் ஆளும்வர்க்கம் தாகுமுதலாளிகள் என்றில்லாமல் வெறும் குழுவாகவா செயற்படுகின்றது? இக்குழு இலங்கையின் பொருளாதார அடிப்படையை முழுக்கமுழுக்க ஏகாதிபத்தியத்துக்கு சார்பாக மாற்றி அண்டிப்பிழைக்கின்றனர். இவர்கள் இயங்குசக்தியாகவே இருக்கின்றனர். இவர்கள் இன்று பெருந்தோட்டங்களை கைமாற்றுவதும், அடிப்படை விவசாய உற்பத்திகளை ஏகாதிபத்தியம் சார்ந்த பொருளாதாரத்தை நோக்கி மாற்றுவதும், சுதந்திரவர்த்தக வலயத்தை உருவாக்குவதும்....

www.tamilarangam.net

இப்படிப்பல. இக்குழுவின் தன்மை தான் தாகுமுதலாளித்துவம். இத்தன்மை தாகுமுதலாளித்துவத்தின் சிறப்பான அம்சமும் கூட. கோட்பாட்டளவில் ஏற்றுக்கொள்ளும் மனிதம் தாகுமுதலாளித்துவத்தின் செயற்பாட்டை நடைமுறையில் ஏற்கவில்லையென கூறவருகின்றனர். சொந்தநாட்டை விற்கும் இவ்வாசுக்கள் தாகுமுதலாளிகள் அல்லவென வாதிடுவது ஏன்? இது இவர்களுக்கே வெளிச்சம். ''தமிழ்தாகுமுதலாளிவர்க்கம் இதை விட மோசமான நிலையில் உள்ளது''. இது உண்மைதான். சிங்களத்தாகு முதலாளிவர்க்கத்திற்கும், தமிழ்தாகு முதலாளிவர்க்கத்திற்கும் இடையில் சுரண்டல் தொடர்பான முரண்பாடே இன்று தேசிய இனப்போராட்டத்தை, தமிழ்தாகு முதலாளிவர்க்கம் தனது கையில் எடுத்து தலைமைதாங்கி போராடுகின்றது.

''பணம்படைத்த வர்க்கங்களான முதலாளி, தாகுமுதலாளி போன்ற வர்க்கங்களுக்கு இன்று ஆயுதம் தாங்கிய மக்களை அடக்கியாளும் பாசிச குழுக்களுக்கிடையே உள்ள உறவு என்ன? என்பதே அக்கேள்வியாகும். இலங்கை போன்றவொரு நாட்டில் பாசிசக்குழுக்கள் மக்களை அடக்கியாள அதிகாரத்திற்கு போட்டிபோடுகின்றன. பழைய மாபுத்தனமான வர்க்கப்பார்வை எனக்கூறப்படுவதில் விடைகாணமுடியாது. அல்லது இது போன்ற குழுக்களில் வெறும் வர்க்கக்கருவியாக பார்க்கமுயல்வது தவறு''. மனிதத்தின் இவ்விவாதத்தில் பணம்படைத்த வர்க்கத்திற்கும், பாசிசக்குழுக்களுக்கும் இடையே என்ன உறவு? இது பற்றி மௌனமாக கேள்வி கேட்பதில் விட்டுவிடுகின்றார்கள். தாகுமுதலாளித்துவத்திற்கும் இக்குழுக்களுக்கிடையேயுள்ள இவ்வுறவு என்பது தாகுமுதலாளித்துவத்தை பாதுகாப்பதே என நாம் கூறியதை மாபுத்தனமான வர்க்கப்பார்வையென ஒற்றைவரிகளில் பதிலளிப்பதிலிருந்து எதையும் சொல்லாமால், விவாதிக்க கருத்தின்றி தனது திரிபுகளைத்திணிக்க முயலுகின்றனர். மீண்டும் கூறுகின்றோம்; இக்குழுக்கள் வேறு, தாகுமுதலாளிகள் வேறு என்பதல்ல. மனிதம் முடிந்தால் இயங்கியல் ஆய்வுகளுடன் மரபுவழியான வர்க்கப்பார்வையை நிராகரிக்கட்டும். அதே போல் மாபுத்தனமான மார்க்சியத்தையும் நிராகரிக்கட்டும். பணம்படைத்தவர்களுக்கும் மனிதம் குறிப்பிடும் குழுவுக்கும் இடையேயான உறவை கூறட்டும். இவை மனிதம் சஞ்சிகைக்கு முடியாது. ஏனெனில் திரிபுகள் எப்பொழுதும் வெற்றிபெற முடியாதவை.

''எமது மக்கள் மத்தியில் இருக்கும் பிரச்சனைகளைத்தீர்ப்பதற்குரிய சரியான ஸ்தாபனவடிவமாக பாட்டாளிவர்க்க கட்சியென்ற ஸ்தாபனவடிவம் தான் சரியானதா? '' இக்கருத்து மனிதம் தன்னை இனங்காட்டுவதிலிருந்து மனிதத்தின் அரசியல் போக்கு முதலாளித்துவப்போக்கே. பாட்டாளிகள் அல்லாத ஒரு பிரிவு முற்போக்கான போராட்டத்தில் இறுதிவரை தலைமை தாங்கமுடியுமாயின் யார்? முதலாளிகளா? குட்டிபூர்சுவா வர்க்கமா? அல்லது யார்? இதே நேரம் பின் குறிப்பிடுகின்றார்கள் ''தற்போது மூன்றாம் உலகநாட்டுப்போராட்டங்கள் பல பட்டாளிகள் என்போர் இல்லாமலேயே முற்போக்காக முன்னெடுப்பதை அவதானிக்கலாம்''. அப்படியாயின் எந்த நாட்டில்? தயவு செய்து சுட்டிக்காட்டுங்கள். அவர்களின் தத்துவம் என்ன? முற்போக்காக (இறுதிவரை) முன்னெடுக்கப்படுகின்றது என வாய்கூசாமல் பச்சைப்பொய் கூறும் மனிதம், எதையோ திணித்துவிடும் போக்கே தொடர்ந்தும் காணப்படுகின்றது. ''மூன்றாம்

www.tamilarangam.net

உலகப்போராட்டங்கள் பல பிற்போக்கான அனுபவங்கள் இருந்த போதும் அதற்கான காரணம் பாட்டாளிகள் தலைமைதாங்கவில்லை என்பதல்ல''. அப்படியாயின் எந்த வர்க்கம் தலைமை தாங்கியிருக்க வேண்டும். தொடர்ந்து கூறும் மனிதம் ''நடைமுறையில் அந்தப்பழைய தத்துவங்கள் இன்றைக்கு எந்த மூன்றாம் உலகநாட்டுக்கும் தீர்க்கவல்லன என்பது எம்முன்னுள்ள கேள்வி''. பழையதத்துவம் இன்றையகாலத்திற்கு தவறானது எனின்; எங்கே இயங்கியலுடன் விமர்சித்து உள்ளீர்கள். சும்மா கிடைத்த சங்கு என்பதற்காக ஊதுவது ஏன்? பிற்போக்கானவகையில் போராட்டம் சென்ற நிலையில் அங்கு பாட்டாளித்தலைமை இருக்காததை ஒப்புக்கொள்ளும் மனிதம், அது தீர்க்காது என வாதிடுவது எந்த ஆதாரத்தை வைத்து. இன்று ''மாபுத்தனமான வர்க்கப்பார்வை'' கைக்கொள்ளும் பிலிப்பைன்ஸ், பேரு, எல்சல்வடோர், பர்மா, மலேசியா.... கம்யூனிஸ்ட் கட்சிகள் தேசவிடுதலைப்போராட்டத்தை பிற்போக்காகவா முன்னெடுக்கின்றனர். பாட்டாளிவர்க்கம் தலைமைதாங்கின் இப்போராட்டம் பிற்போக்காகவா இருக்கும்?

மார்க்சியத்தின் தோற்றம் பற்றி உயிப்பின் கருத்தில் நாம் முரண்படுகின்றோம். தூண்டிலின் கருத்துடன் உடன்படுகின்றோம். இது தொடர்பாக உயிர்ப்பின் விவாதத்தில் விவாதிக்க முற்படுகின்றோம். ''பாட்டாளிவர்க்க சித்தாந்தம் என்ற ஒன்றை மட்டுமே மார்க்ஷியமாக குறுக்க முனைந்துள்ளதோ என்று எண்ணத்தோன்றுகின்றது'' இக்கருத்தில் மார்க்ஷியம் என்பது உலகை பொருள்முதல்வாத நோக்கில் ஆய்வுக்கு உட்படுத்தியதே. அதை ஏற்றுக்கொள்ளும் சக்தியாக பாட்டாளிவர்க்கம் இருப்பதால் அதை முழுமையாக நடைமுறைக்கு இட்டுச்செல்லும் ஒரு சக்தியாகவும் இருக்கின்றது. இதற்கு அப்பால் கருத்துமுதல்வாத நோக்கில் உலகை ஆய்வு செய்யும் யாரும் மார்க்ஷியத்தை ஏற்றுக்கொள்வதில்லை. மார்க்ஷியம் என்பது உலகை உள்ளபடி ஆய்வுக்கு உள்ளாக்குகின்றது. இதை நடைமுறையில் செய்வது பாட்டாளிவர்க்கம் மட்டுமே. மனிதம் இந்த மார்க்ஷியத்தையே பழையவர்க்கப்பார்வை என கூறி நிராகரிக்கின்றனர். தேவையானதையும், தமக்கு சாதகமானதையும் எடுத்துக்கொள்ளும் மனிதம் நிராகரிப்பை விமர்சிக்க கருத்துப்பலம் இன்றி திணிக்கமுயலுகின்றனர்.

''மார்க்சியம் என்பது கிழக்கு ஐரோப்பியாவின் வீழ்ச்சியின் பின்பு அதன் வாழ்வைக்கொண்டிருக்கின்றது என்பதால்'' மனிதத்தின் விவாதம் முன்னைய கருத்துடன் ஒன்றுக்கொன்று முரண்படும் வகையில் திரித்துப்புரட்டியுள்ளனர். மார்க்ஷிய வீழ்ச்சியை கூறியவர்கள் பின் வாழ்வைப்பற்றி கூறுகின்றனர். கிழக்கு ஐரோப்பியாவின் வீழ்ச்சியென்பது மார்க்ஷியத்தின் அடிப்படையிலிருந்து விலகிச்சென்றமையால் தான். கிழக்கு ஐரோப்பியாவில் வாழுகின்றது எனின்; இன்று அது உண்மையானதாகவும், சரியானதாகவும் (மனிதம் கூறுவது போல் பழையமாபுத்தனமான மார்க்ஷியமாகவல்ல) இருப்பதால் தான். மனிதம் சொல்வது போல்; அதன் இயங்கியல் அணுகுமுறையே, ஏனெனில் மார்க்ஷியத்தின் விஞ்ஞான பூர்வமான அணுகுமுறையே இயங்கியல் இனம்காட்டுகின்றது''. இதை கூறும் மனிதம் இதை மார்க்ஷியத்தின் மாபுத்தனமானது எனச்சொல்லி நிராகரிக்கின்றனர்.

www.tamilarangam.net

பாட்டாளிவர்க்க சித்தாந்தம் மட்டும் மார்க்ஷியம் எனக்குறுக்க முனைந்தது எனச்சொல்லும் மனிதம், இன்று ஐரோப்பியாவில் மார்க்ஷியம் உயிர்வாழ்வதை இனம் காட்டுவது பாட்டாளிவர்க்க கட்சி மட்டுமே. மனிதம் எதை சொல்லியிருக்கின்றார்கள் என்பதே மனிதத்திற்கு புரியாமல் இருப்பதை பார்க்க முடிகின்றது. அதை கீழ் உறுதி செய்கின்றார்கள் ''மார்க்சினால் கூறப்பட்ட பாட்டாளிவர்க்க சித்தாந்தம் என்பது இன்று கேள்விக்குள்ளாக்கப்படுகின்றது'' எனின் ஐரோப்பாவில் உயிர்வாழும் மார்க்சியம் (இவை மார்க்சினால் உருவாக்கப்பட்டது) தவறானதா? இவையெல்லாம் மனிதத்தின் திரிபுகளும் புரட்டல்களுமே.

இதே கட்டுரையில் 35ம் பக்கத்தில் ''எந்தவொரு வர்க்கத்தின் நலனும் மறைந்திராமல் ஒரு குழுவின் நலன்களே மறைந்திருக்க முடியும். பாரிய மூலதனத்தைக்கொண்ட குழு தனது நலன்களையோ அரசியல் கோரிக்கைகளையோ முன்வைக்க முடியும். கடந்தகால நடைமுறையிலிருந்து புலிகள் எந்தவொரு வர்க்கத்தின் நலன்களை பிரதிநிதித்துவப்படுத்த தயாராகவில்லை. தமது குழு நலன்களை வைத்தே அவர்கள் செயற்படுகின்றார்கள்'' என்ற வாதத்திற்கு முன்பே பல தடவை பதிலளித்துள்ளோம். தனது குழுநலன்கள் என்பது எதை? பாரியமூலதனத்தை கொண்டகுழு தனது நலன் என்பது எதை? இங்கு இவர்களால் சுரண்டல் நடத்தப்படவில்லையா? சுரண்டும்தன்மை வர்க்கப்பார்வையில்லையா? எந்த வர்க்கத்தின் நலன்களை பிரதிபலிக்க புலிகள் தயாராகவில்லை என யார் கூறியது? என்ன ஆதாரம்? குழுநலன் என்பது என்ன? இவர்களுக்கும் தரகு முதலாளிகளுக்கும் என்ன உறவு? இதை மனிதத்திடம் கோருவதுடன் மனிதம் வாசகர்களுக்கு இதை விவாதிப்பதற்கு முன்வைக்கின்றோம். ''அந்த சமூதாயத்தில் நிலவும் அமைப்புக்கள்'' எந்தவமைப்புக்களை குறிப்பிடுகின்றீர்கள்? அதன் தத்துவம் என்ன? அரசியல் இலக்கு என்ன?

''மேலும் பலர் ஒரு பிரச்சனையில் நேரொதிராக இருமுரண்பாடுகளே இருக்கமுடியும் என கருதுகின்றார்கள் அது தவறு, மாறாக ஒரு பிரச்சனையில் பலதரப்பட்ட முரண்பாடுகள் நிலவமுடியும்'' என்ற மனிதத்தின் இவ்விவாதம் அடிப்படையில் தவறானது. ஒரு பிரச்சனையில் எப்பொழுதும் எதிரும்புதிருமான இருகூறுகள் இருக்கின்றது. இதை மாவோ முரண்பாடுகள் பற்றி... என்ற நூலில் தெளிவாக கூறுகின்றார். மாவோ கூறுகின்றார் ''இயக்கப்போக்கில் உள்ள முரண்பாடுகள் ஒவ்வொன்றிலும் எதிரும்புதிருமான இரு கூறுகள் உள்ளன. இவற்றை குறிப்பான இயல்பை வெளிப்படுத்தும் போக்கில் உட்சாரத்தை கண்டறிவது இயலவேயியலாது. நமது ஆய்வில் மிகக்கூடுதலான கவனம் இதில் செலுத்த வேண்டும். பெரும் நிகழ்ச்சிப்போக்குக்கள் எதை எடுத்துக்கொண்டாலும் அதன் வளர்ச்சிப்பாதையில் பல முரண்பாடுகள் இருப்பதை காணலாம்''. இது தொடர்பாக லெனின் இயங்கியல் பிரச்சனை பற்றி என்ற கட்டுரையில் ''கணிதத்திலும்:- கூட்டுதல், கழித்தல்; நுண்ணென்னும், முழுவெண்ணும் ; எந்திரவியலில்:- வினையும், எதிர்வினையும்; இயற்பியலில்:- நேர்மின்னாற்றலும், எதிர்மின்னாற்றலும்; வேதியலில்:- கருக்கலின் செயற்கையும், பிரிவும்; சமூகவிஞ்ஞானத்தில்:- வர்க்கப்போராட்டமும் ஆகும்''. இவையெல்லாம் ஒன்றுக்கொன்று முரண்பட்ட நிகழ்ச்சிகள்.

www.tamilarangam.net

ஒன்றின்றி மற்றது இருக்கமுடியாது. எனவே ஒரு பொருளில் எப்பொதும் எதிரும் புதிருமான முரண்பாடுகளின் தன்மையிருக்கும். ஒரு பிரச்சனையில் பலதாப்பட்ட முரண்பாடுகள் மட்டும் இருக்கமுடியும் என்பது ஒவ்வொரு வர்க்கத்திற்கும் இடையேயான முரண்பாட்டை மனிதம் சுட்டிக்காட்டினர். இதுவும் சரியானது. இவை ஒவ்வொரு வர்க்கத்திற்குமிடையிலான முரண்பாடுகள் ஆகும். இவை நேர்ரெதிரான தன்மையில் செயற்பட முடியும். இதை மாவோ, லெனின் மிகத்தெளிவாக சுட்டிக்காட்டியுள்ளனர்.

மனிதம் நிராகரிப்பது ஒவ்வொரு பிரிவுக்குமிடையில் எழும் குறித்த முரண்பாடுகளின் நேரெதிர் தன்மையே. தொடர்ந்தும் உயிர்ப்பு கூறுவதை மனிதம் ''மக்களைப்பொறுத்தவரையில் சிங்களப்பேரினவாதத்திற்கும், தேசியத்துக்குமிடையிலான முரண்பாடு பிரதானவடிவம் பெறுவதனால்... என்று கட்டுரையில் குறிப்பிடப்படுகின்றது. முரண்பாடுகள் பற்றி இவ்வணுகுமுறை தவறானது. சமூதாயத்தில் நிலவும் முரண்பாடுகள் ஒன்று பிரதான இடம் வகிக்கின்றது என்ற கருத்தானது, ஏனைய முரண்பாடுகள் சமுதாயவளர்ச்சியில் செலுத்தும் பங்கை மறைமுகமாக மறுப்பதுடன், ஏனைய முரண்பாடுகள் பிரதான முரண்பாட்டின் அடிப்படையிலேயே நிலவுகின்றன என்ற கருத்து உருவாக்கப்படுகின்றது'' என்ற மனிதத்தின் கருத்தில், உயிர்ப்பு மிகத்தெளிவாக கூறுகின்றது ''சிங்களப்பேரினவாதத்திற்கும், தமிழ் தேசியத்துக்குமிடையிலான முரண்பாடு பிரதான வடிவம் பெறுவதனால்...'' என்று கூறுவதிலுள்ள பிரதான வடிவம் என்பதற்கூடாக அவர்கள் சமுதாயத்தில் பல முரண்பாடுகள் நிலவுவதை அங்கீகரித்துள்ளனர். ஆனால் நீங்களோ அப்படி உயிர்ப்பு கூறவில்லையென பின்வருமாறு கூறுகின்றீர்கள். ''ஏனைய முரண்பாடுகள் சமூதாய வளர்ச்சிக்கு செலுத்தும் பங்கை மறைமுகமாக மறுப்பதுடன்'' கட்டுரையை புரியாத வகையில் உயிர்ப்பு எழுதியதாகப்படவில்லை. மிகத்தெளிவாக ஒரு முரண்பாட்டின் பிரதான அம்சத்தை சுட்டிக்காட்டியுள்ளனர், அத்துடன் பல முரண்பாடுகள் பிரதான முரண்பாடுடன் செயற்படும் என்பதை ஏற்றுள்ளனர். மனிதம் முரண்பாடுகள் பற்றிய இந்த அணுகுமுறை தவறானது என்று உயிர்ப்பின் கருத்தை மறுத்து தொடங்கும் பொழுது அதில் இன்னுமொரு விடயமும் தொங்கி நிற்கின்றது. அதாவது பிரதான முரண்பாடாக ஒன்றுக்கு மேற்பட்ட முரண்பாடுகள் நிலவமுடியும் என்பதே அத்துடன் ''ஏனைய முரண்பாடுகள் பிரதான முரண்பாட்டின் அடிப்படையிலேயே நிலவுகின்றன என்ற கருத்து உருவாக்கப்படுகின்றது. இவையிரண்டும் அடிப்படையில் தவறானது''. இதை மாவோ ''சிக்கலான வளர்ச்சிப்போக்கில் பல முரண்பாடுகளைக்காணலாம். இவற்றில் ஒன்று கட்டாயம் முதன்மை முரண்பாடாக காணலாம். இதன் வாழ்வும் வளர்ச்சியும் இதாமுரண்பாடுகளின் வாழ்வையும் வளர்ச்சியையும் நிர்ணயிக்கின்றது. அல்லது அவைகளின் மீது செல்வாக்கு செலுத்துகின்ற முதன்மை முரண்பாடாகவே உள்ளது''. இதை மாவோ முரண்பாடுகள் என்ற நூலில் உதாரணத்தின் ஊடாக ''முதலாளிய சமூதாயத்தின் முரண்பாட்டில் உள்ள இரு சக்திகள் பட்டாளிவர்க்கமும், முதலாளியவர்க்கமும் ஆகும். இவை இங்கு முதன்மை முரண்பாட்டை உருவாக்குகின்றன. இந்த முதன்மை முரண்பாட்டால் நிர்ணயிக்கப்படுகின்றது அல்லது இதன் செல்வாக்குக்கு

www.tamilarangam.net

உட்படுகின்ற இதர முரண்பாடுகள் எஞ்சியுள்ள நிலவுடமை வர்க்கத்திற்கும், முதலாளிவர்க்கத்துக்கும் இடையேயுள்ள முரண்பாடு, பாட்டாளிவர்க்கத்துக்கும், விவசாய சிறுமுதலாளிவர்க்கத்துக்கும் இடையேயுள்ள முரண்பாடு...'' என மாவோ தெளிவாக சுட்டிக்காட்டியுள்ளார். மனிதம் இவையெல்லாம் தவறு எனின், முதலில் மாவோவின் முரண்பாட்டை விமர்சித்து புதிய தத்துவத்தை முன் வைக்க வேண்டும். இதற்கு அப்பால் இடையில் ஒரு வரிகளுக்கூடாக சொல்வது அவர்களின் கருத்துக்களுக்கே கருத்துப்பலம் இன்மையை காட்டுகின்றது.

மீண்டும் மனிதம் கூறுகின்றது ''மேல்நிலையில் இருக்கும் முரண்பாடானது ஏனைய மேவாதிக்கத்துக்காக போட்டி போடும் முரண்பாடுகளின் மேல் காத்திரமான பங்கையாற்ற முடியாது''. மனிதம் மேலும் ''தமிழ்மக்கள் மத்தியில் சிங்கள பேரினவாதத்திற்கும், தமிழ்தேசியத்துக்கும் இடையிலான முரண்பாட்டை பிரதான முரண்பாடாக காட்டமுனைவது தவறு''என்ற கருத்தை முன்வைக்கின்றனர். இப்படி கூறியவர்கள் பின் பிரதான முரண்பாடாக மூன்று முரண்பாட்டை சுட்டிக்காட்டியுள்ளனர். இதில் ''இலங்கையில் வாழும் இனங்களுக்கிடையிலான ஐக்கியத்திற்கும், ஐக்கியமின்மைக்கும் இடையிலான முரண்பாடு'' எனக்குறிப்பிட்டதற்கு மாறாக மேற்கூறியது அமைந்துள்ளது. இந்த விவாதத்தை ஏன் முன்வைக்கின்றார்கள் எனின், ஐக்கிய இலங்கை போராட்டமே இன்று எம் இலக்கு என வாதிடவே. ஐக்கிய இலங்கை எனின்; மனிதம் வைத்த கருத்துக்கு தூண்டில் அளித்த பதிலுக்கு இன்றுவரை கருத்தியல் ரீதியில் விமர்சனத்தை முன்வைக்காமல் இன்று மீண்டும் மறைமுகமாக தமது கருத்தை திணிக்கமுயல்வது ஏன்? இது இயங்கியலுடனான விமர்சனமுறையல்ல என்பதை சுட்டிக்காட்டுகின்றோம்.

இனி மனிதம் கூறிய முதன்மை முரண்பாடாக போட்டியிடும் மூன்று முரண்பாடுகளையும் ஆராய்வோம்.
அவையாவன;

(1) இலங்கையில் வாழும் இனங்களுக்கிடையிலான ஐக்கியத்திற்கும் ஐக்கியமின்மைக்கும் இடையிலான முரண்பாடு.
(2) இலங்கையில் நிலவும் பாசிசத்துக்கும் ஜனநாயகத்துக்குமிடையிலான முரண்பாடு.
(3) இலங்கை மக்கள் மேல் ஆதிக்கத்தை நிறுவமுனையும், நிறுவியிருக்கும் ஏகாதிபத்தியத்துக்கிடையிலான முரண்பாடு.

இதில் மூன்றாம் முரண்பாடு முன்னைய மனிதத்தின் விவாதமான ''இலங்கையில் தாகுமுதலாளிவர்க்கம் ஒரு இயங்கு சக்தியென்று நாம் பார்க்க முடியுமா? தான் திட்டமிட்டு ஏனையவற்றை முன்னெடுக்கும் ஒரு சக்தியாக இலங்கையில் தாகு முதலாளிவர்க்கத்தை பார்க்க முடியுமா?'' என்ற கருத்துக்கும் முற்றிலும் மாறுபட்டது. ஏன் மனிதத்திற்கு இந்தக்குழப்பம்? முன்சொன்னதற்கு மாறாக சிலவுண்மைகளை மீண்டும் சொல்லிவிடுகின்றார்கள். இனி மூன்று முரண்பாட்டையும் பார்ப்போமாயின்;

www.tamilarangam.net

முதலாவதாக மனிதம் குறித்த முரண்பாடு இன்று பிரதான முரண்பாடாக போராடுகின்றதா? நிச்சியமாகவில்லை. இனமுரண்பாடு தீவிரமடைய முன் ஐக்கியத்திற்கும், ஐக்கியமின்மைக்கும் இடையிலான முரண்பாடு தமிழ்மக்களுக்கும், சிங்கள பேரினவாதத்திற்கும் இருந்த முரண்பாடுகள் ஒன்றையொன்று மிஞ்சி மேல் நிலையை அடைய போட்டியிட்டது. ஆரம்பத்தில் ஐக்கியம், ஐக்கியமின்மைக்கிடையிலான முரண்பாடு தமிழ்மக்களுக்கும், சிங்களப்பேரினவாதத்துக்கும் இடையிலான இனமுரண்பாட்டை விட மேல் நிலையிலிருந்த போதிலும், பிந்தியகாலத்தில் தமிழ்மக்களுக்கும் சிங்கள பேரினவாதத்திற்குமிடையிலான இனமுரண்பாடு மேல் நிலைக்கு வந்ததைத்தொடர்ந்து, இம்முரண்பாடே பிரதான முரண்பாடாக மாறியுள்ளது. இக்கட்டுரையில் அடுத்தபந்தியில் ஐக்கியம், ஐக்கியமின்மையின் பகுதி முரண்பாடாக இனமுரண்பாட்டை வரையறுக்க முயல்வது இன்றைய நிலையை, இயங்கியலுடன் ஆராயாது தமது முடிவுகளுடன் பொறுத்த முனைவதாகும். நாம் தொடர்ந்து மனிதத்தில் கூறிய மூன்று பிரதான முரண்பாட்டில் முன்னணியிலுள்ளது எனக்குறிப்பிட்டதில் நாம் முதலாம் முரண்பாட்டை தமிழ்மக்களுக்கும், சிங்களப்பேரினவாதத்திற்குமானதென வரையறுத்துக்கொண்டே ஆராய்கின்றோம்.

இம்மூன்று முரண்பாடுகளும் ஒன்றோடுவொன்று பிணைக்கப்பட்டவையே. பிரதான முரண்பாடில்லாத போது மற்றது இருக்கமுடியாது. இவற்றின் உருவாக்கம் எப்போதும் ஒன்றைமையமாகவைத்தே உருவானது. இலங்கையில் மக்களுக்கு தரகுமுதலாளித்துவத்துக்கும் (ஏகாதிபத்தியத்துக்கும்) , நிலப்பிரபுத்துவத்துக்கும் இடையிலான முரண்பாடாகவிருந்த போதும் நீங்கள் குறிப்பிட்டவற்றில் இரு முரண்பாடுகள் அதற்குட்பட்டவையாக, பிரதான முரண்பாட்டுடன் வாழ்வையும், வளர்ச்சியையும் கொண்டிருக்கின்றது. இப்பிரதான முரண்பாட்டு இன்று நீங்கள் குறிப்பிட்ட முதலாம் இரண்டாம் முரண்பாட்டின் வளர்ச்சியுடன் ஒன்றிணைந்துள்ளது. இவையின்று ஒரே முரண்பாடாகவே உள்ளது. இம்முரண்பாடே சிங்களப்பேரினவாதத்திற்கும் தமிழ் இனத்த்த்துக்குமிடையிலான தேசியப்போராட்டமாக வளர்ந்துள்ளது. இதன் வளர்ச்சியில் இன்று பாசிசம் இல்லாமலோ, ஏகாதிபத்திய ஆதிக்கம் இல்லாமலோ இம்முரண்பாடு உயிர்வாழ முடியாது. இதில் தேசிய இனமுரண்பாடு இன்றி மற்றவையிரண்டும் உயிர்வாழ முடியாது. இன்று பிரதான முரண்பாடாக இன முரண்பாடு மாறிய பின் மற்றைய இரு முரண்பாடுகளும் வளர்ந்து மிக இறுக்கமாக இம்முரண்பாட்டுடன் இணைந்துள்ளது. இன முரண்பாட்டை வெற்றி கொள்வதனூடாக மற்றைய இரண்டும் வெற்றி கொள்ளப்பட முடியும்.

இதைத்தொடர்ந்து மனிதம் இன முரண்பாட்டை பகுதி முரண்பாடாக ஐக்கியம், ஐக்கியமின்மையில் உள்ளதெனச்சொல்லிய பின் ''சிங்களப்பேரினவாதத்துக்கும் தமிழ்மக்களுக்கும் இடையேயான முரண்பாடு பிரதான முரண்பாடாகவிருந்தால், தமிழ்மக்களுக்கும் முஸ்லீம் மக்களுக்குமிடையிலான முரண்பாட்டை எப்படி விளக்குவது'' எனக்கேட்டுள்ளனர். இதில் தமிழ் முஸ்லீம் மக்களுக்கிடையிலான முரண்பாடு வளர்ந்து வருகின்றது. இதன் வளர்ச்சியின் போக்கில் தமிழ்

www.tamilarangam.net

இனவாதிகளுக்கும் முஸ்லீம் மக்களுக்குமிடையிலான முரண்பாடு முன்னிலைக்கு போட்டி போடமுடியும். இது சிலவேளை சிங்கள முஸ்லீம் மக்கள் இணைந்து தமிழ்மக்களுடன் ஒரு பிரதான முரண்பாடாக மாறலாம். இது முரண்பாடுகளைக்கையாலுவதிலுள்ள தன்மையைப்பொறுத்தது.

தொடர்ந்தும் மனிதம் ''அளவில் பெரிதாக தெளிவாகத்தெரிவதாக இருக்கும் இந்த முரண்பாட்டையே பிரதான முரண்பாடாக கருதுவது பிரச்சனையை தீர்க்க உதவாது''. எனற வாதம் மேற்குறிப்பிட்ட மாவோ, லெனின் விவாதத்திற்கு மாறுபட்ட கருத்தாகும். இக்கருத்து அடிப்படைத்திரிபு ஆகும். திரிபுகளுக்கு மீண்டும் சுட்டிக்காட்ட விரும்புவது முதலில் மார்க்ஷிய நூல்களை வரிக்கு வரியாக விமர்சியுங்கள். அதனூடாக புதிய தத்துவத்தை முழுமையாக வையுங்கள். இதற்கு மாறாக இயங்கியலை நிராகரித்து, ஒற்றைவரிகளில் வாசகர்களை திசைதிருப்புவதும், கருத்துக்களைத்திணிக்க முயல்வதும் விமர்சனம் ஆகாது. அத்துடன் ஒற்றைவரிகளில் வைப்பதை (மார்க்சியத்தை தான் விமர்சிக்காவிட்டலும் பறவாயில்லை) ஆதாரத்துடன் இயங்கியலுடன் முன் வையுங்கள்.

உயிர்ப்பு குறிப்பிட்ட ''பாசிசம் என்பது குறிப்பான பிரச்சனையாகவும் தமிழ் மக்களினது தேசவிடுதலை என்பது பொதுவான பிரச்சனையாக கூறப்பட்டதை மனிதம் இக்கருத்தை ஏற்றுக்கொள்ள முடியாதென கூறும் இக்கருத்தானது, பாசிசத்தை மட்டும் ஒழித்தால்: தேசிய இனப்பிரச்சனை தீர்த்துவிடமுடியுமென வாதாடுகின்றனர். பாசிசம் என்பது வேறு ஒரு பிரதான முரண்பாட்டின் இருப்புடன் ஒன்றானது. இது தேசிய இனமுரண்பாட்டின் வளர்ச்சியில் தன்னகத்தே பாசிசத்தையும் கொண்டிருக்கும். இலங்கையில் தீவிரமடைந்த தேசிய இனப்பிரச்சனையுடன் பாசிசம் வளர்ந்து ஒன்றுகலக்கின்றது. மக்கள் தேசிய இன முரண்பாட்டுக்கு எதிராக போராடும் பொழுது பாசிசம் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்படுகின்றது. இம்முரண்பாட்டில் எழும் கோரிக்கை இல்லாத போது பாசிசம் இல்லாமல் போய்விடும்.

உயிர்ப்பு மேலும் சொன்ன ''புலிகளின் பாசிசம் பற்றிய விமர்சனங்கள் எதுவும் தமிழ் தேசத்துக்குள் தோன்றியுள்ள உள்முரண்பாடு என்ற எல்லைக்குள்ளாகவே முன்னேடுக்கப்பட வேண்டும்''. இதை மனிதம் ''ஒரு சமுதாயத்தி நிலவும் உள்முரண்பாடு வெளிமுரண்பாடு என்று பார்க்கலாமா? இல்லை'' என்ற இக்கருத்து அடிப்படை மார்க்ஷியத்துக்கு விரோதமானது. இதை மாவோ முரண்பாடு பற்றி என்ற நூலில் ''பொருட்களின் வளர்ச்சியென்பதே அப்பொருடகளின் உள்ளியக்கம் அவற்றின் இன்றியமையா தன்னியக்கம் என்றே புரிந்து கொள்ள வேண்டும். அதே வேளையில் ஒவ்வொரு பொருளும் தனது இயக்கத்தில் தன்னைச்சுற்றியுள்ள பொருட்களுடன் ஒன்றுக்கொன்று தொடர்புடையதாகவும், ஒன்றையொன்று பாதிப்பனவாகவும் இருக்கின்றது என்று பார்க்க வேண்டும். ஒரு பொருளின் வளர்ச்சிக்கான அடிப்படைக்கு காரணம் பொருளுக்கு வெளியே இருப்பதன்று அதற்குள்ளேயே இருப்பதாகும். இது அதற்குள் நிலவும் முரண்பாட்டில் பொருத்துள்ளது. ஒவ்வொரு பொருளிலும் இந்த உள்முரண்பாடு (அகமுரண்பாடு) இயல்புள்ளது''. இக்கருத்து உள்முரண்பாடு வெளிமுரண்பாடு என ஒரு சமுதாயத்தில் ஒரு போராட்டத்தில்... என அனைத்திலும் இருக்கும்.

www.tamilarangam.net

என்வே மனிதம் ஏதோவொன்றை நிறுவும் போக்கில் இயங்கியலுக்கு மாறாக, அடிப்படை மார்க்சியத்தை திரித்தும், மறுத்தும் திணிக்கவே முயலுகின்றனர். இம்முறை மார்க்சிய அடிப்படை (மார்க்சிய அடிப்படை தவறு என கூறுகின்றனர்) விவாத முறைக்கே மாறுபட்டதாகும். இருந்தும், மீண்டும் சுட்டிக்காட்ட விரும்புவது உங்கள் கருத்துக்களை ஆதாரத்துடன் முன்வையுங்கள். அத்துடன் விவாதத்தை தொடர்ந்து நடத்தும் அணுகுமுறையை கைக்கொள்ளும்படியும் கோருகின்றோம்.

## தேசிய சக்திகள் பற்றி தூண்டில் மீதான விமர்சனம்

தூண்டில் 41இல் ''சமர் கூறுவது போல் புலிகள் தரகுமுதலாளித்துவ போக்குள்ளவை தானா என்பது ஆய்வுக்குரியது. ஏன் என்றால் அப்படியடித்து கூற இருக்கும் காரணங்களைப்போலவே இன்னும் சரியாக கூறுவதானால் அப்படியில்லையென அடித்து கூறவும் காரணங்கள் இருக்கின்றன. புலிகள் தமிழ் தரகுமுதலாளித்துவத்தின் போக்கை காட்டுவார்கள் என்றால் ஏன் அவர்கள் தமிழர் விடுதலைக்கூட்டணி போல இன்று விட்டுக்கொடுத்து சரணடையவில்லை? அவர்களுக்கு ஒரு தேசியவாதம் இருக்கின்றது''. இதன்பின் ''புலிகளிடம் இருக்கும் சிந்தனை முதலாளித்துவ தேசியவாதத்தில் எவ்வகைப்பட்டது என்று ஆராய்வது அது த்ரகுமுதலாளித்துவ வகைப்பட்டதா, தேசிய முதலாளித்துவ வகைப்பட்டதா என்பது தீர்க்கப்பட வேண்டிய பிரச்சனை. நாம் இந்த இடத்தில் அவசரப்பட்டு தீர்வு சொல்லவிரும்பவில்லை''. பின்னால் தொடர்ச்சியாக புலிகளையும் தமிழர் விடுதலைக்கூட்டணியுடன் ஒப்பிட்டு மதிப்பிடும் போது ''அரசியல் நீரோட்டத்தையிட்டு அவநம்பிக்கையுடன் அணுகவைக்கின்றது. ஆயினும் இது அதுவாக முடியாது மாறமாட்டாது என அடித்து கூறமுடியாது''. தொடர்ந்தும் ''உன்டை அபிப்பிராயத்திலே புலிகள் தரகுமுதலாளித்துவவாதிகள் அல்ல என்பது கிளியர் தானே? இன்னுமில்லை அதாவது இன்றுவரை அவர்கள் அந்தப்பிடிக்குப்போகவில்லை. நாளை போகக்கூடும்'' என்ர தூண்டிலின் கருத்துக்களை பார்ப்போமாயின் புலிகள் தரகுமுதலாளிகள் தானா என்பது ஆய்வுக்குரியது. புலிகள் முதலாளித்துவ தேசியவாதத்தின் எந்த வகையென ஆராய்வது தமிழ் தரகுமுதலாளித்துவமா? தேசியமுதலாளித்துவமா? இது தொடர்பாக அவசரமாக தீர்வு சொல்லவிரும்பவில்லை. மாறமாட்டாது என அடித்துச்சொல்ல முடியாது. இன்னும் இல்லையென்ர சொற்களுக்கூடாக தூண்டில் தரகு முதலாளிகள் என்பது ஆய்வுக்குட்பட்டதாகவும் இன்னும் நிராகரிக்காத தன்மையுடன் ஆய்வுடன் நிற்கின்றார்கள். மற்றும் முதலாளித்துவ தேசியவாதத்தில் எந்தவகையென ஆராய்வதும், அது தரகுமுதலாளித்துவ வகைப்பட்டதா? தேசியமுதலாளித்துவப்பட்டதா? என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளனர். இக்கட்டுரையில் தூண்டில் புலிகள் முதலாளித்துவ தேசியவாதத்திற்கு உட்பட்ட ஒரு பிரிவுவென மட்டும் கூறி அவர்கள் தேசிய முதலாளித்துவ பிரதிநிதிகளா? அல்லது தரகு முதலாளித்துவ பிரதிநிதிகளா? என்பதை விவாதத்திற்கு விட்டுவிடுகின்றனர்.

www.tamilarangam.net

தூண்டில் 48இல் ''முதலாளித்துவ தேசியவாதம் போன்ற பதங்களை புலிகள் குறித்து பாவிக்கின்ற போது அவர்கள் (சமர்) மறுத்துரைக்கின்ற வேகத்தைப்பார்த்தால் தேசியவாதம் தொடர்பாக அவர்களுக்கும் ஒருவித தூய்மைவாத அபிப்பிராயம் இருப்பதாக படுகின்றது''. இது தொடர்பாக சமருக்கு தூய்மைவாதம் கிடையாது. முதலாளித்துவ தேசியவாதத்தில் தனக்கே உரிய சுரண்டும் இயல்பை சமர் மறுத்துவிடவில்லை. முதலாளித்துவ தேசியவாதத்தில் நீங்கள் குறிப்பிட்ட இரு பிரிவுகளும் ஒன்றாக ஒரு பிரச்சனையை கையாள முடியாது. இதில் தனித்தனியாக ஒவ்வொன்றும் தேசியப்போராட்டத்தை தனது நோக்கு நிலையில் நின்று போராட முற்படும்

இரண்டும் தேசிய விடுதலைப்போராட்டத்தை தனக்கு சாதகமாக பயன்படுத்த முனையும். அதிலிருந்து மக்கள் மீதான ஒடுக்குமுறையும் மாறுபடும் தன்மையிருக்கும். இதில் புலிகள் எந்தப்பிரிவு என்பதிலிருந்தே எமது விவாதம். ''அன்று பிரபுத்துவத்தை எதிர்த்து முதலாளித்துவம் புரட்சி செய்த போது அதிலிருந்த முற்போக்கு அம்சங்கள் பின் அவசியமற்றனவாகி விட்டன'' என்ற இக்கருத்து சரியானது. இதை மூன்றாம் உலக நாடுகளுக்கும் நிலப்பிரபுத்துவத்தை ஒழிக்காமல் இருக்கும் நாடுகளுடன் பொருத்துவது சரியானதா? இங்கு நிலப்பிரபுத்துவத்துக்கு எதிரான சக்திகள் முற்போக்கை ஏன் பிரதிபலிக்க முடியாது. இப்படி உருவாகும் தேசிய முதலாளித்துவவாதிகள் ஒரு பாட்டாளிவர்க்கம் போராட்டத்தில் முற்போக்காக இருந்தால் அன்றி, இன்றைய நிலையில் சாத்தியமா? இது தொடர்பாக கீழே ஆராய்வோம்.

''பிறவர்க்கங்களின் ஜனநாயக கோரிக்கைகள், பாட்டாளிவர்க்கப்புரட்சி என்பவை பற்றிய அச்சம்'' இவை கூட முன்னையது போல் முதலாளித்துவ தேசிய சக்திகள் முற்போக்காக இருக்க முடியாது எனக்காட்ட முன்னேடுக்கப்பட்ட விவாதமே. இக்கருத்து

சோவியத்தின் சோசலிசப்புரட்சிக்குப்பின் பல நாடுகளில் இருந்தும் முதலாளித்துவ தேசிய சக்திகள் இணைந்து போராடியுள்ளனர். உ+ம்:- சீனா, நிக்கரக்குவா, பிலீப்பையின்ஸ், கம்பூச்சியா, வியட்நாம்.... இப்படி பல நாடுகளை காணலாம். தூண்டிலின் விவாதம் முற்போக்கைப்பற்றி தீர்மானிக்க ஒரு காரணமாக முழுமையாகப்பார்க்க முடியாது. ''அன்றைய தேசியவாதத்தலைவர் சன்யாட் சென்னை முதலாளித்துவ தேசியவாதத்தின் பிரதிநிதியாக கருதுகின்றது. சன்யாட்சென் இன்று இருந்தால் கூட அன்று இருந்தது போல் இருந்திருக்க முடியாது''. இதை நாம் ஒரு நிபந்தனையுடன் ஏற்றுக்கொள்ளுகின்றோம். அதாவது ஒரு பாட்டாளிவர்க்கம் பலமான நிலையில், ஐக்கிய முன்னணிக்குள்ளோ, வேறு அமைப்பாகவோ சன்யாட்சென் போல ஒருவர் இருக்கமுடியும். சன்யாட்சென் இருந்தகாலம் நிதி மூலதனத்தின் ஆதிக்கம் பெரிதாக ஏற்படாத, தரகு முதலாளித்துவம் என்ற சக்தி ஆதிக்கம் பெரிதாக பெறாத காலம். இக்காலத்தில் முதலாளித்துவ தேசியவாதம் காலனியாதிக்கத்தையும் நிலப்பிரபுத்துவத்தையும் எதிர்ப்பதாகவிருந்தது. இன்று தரகுமுதலாளித்துவ ஆதிக்கத்துக்குள் முழுமையாக உட்பட்ட நிலையில், ஒரு நாட்டில் நடக்கும் நிகழ்வுகளில் ஆதிக்கத்தை நிகழ்த்தும் அளவிற்கு பலம் பெற்றுள்ளது. தரகுமுதலாளித்துவத்துக்கு எதிராக உறுதியாக கருத்தை வைத்து உருவாகாத எந்த சக்தியும்,

www.tamilarangam.net

தாரகுமுதலாளித்துவத்தின் நேரடி, மறைமுக ஆதிக்கத்துக்குள் செல்வார்கள். இந்நாடுகளில் தேசியமுதலாளித்துவ பிரிவு எப்பொதும் உறுதியாக இருப்பதாயின், பாட்டாளிவர்க்கம் பலமான நிலையில் ஒரு ஸ்தாபன்மாக மட்டும் இருந்தால் மட்டுமே சாத்தியமாகும். பாட்டாளிவர்க்க கட்சி பலமாகவில்லாத நிலையில் அங்க தேசிய முதலாளித்துவம், தாரகுமுதலாளித்துவத்துக்கு எதிராக குரல்கொடுக்கா முடியாதவகையில் தாரகுமுதலாளித்துவத்துக்குள் உள் வாங்கப்பட்டு விடுவார்கள். இது எம்மண்ணில் உருவான அனைத்து இயக்கங்களையும் வைத்தே புரிந்து கொள்ள முடியும். தாரகுமுதலாளித்துவத்துக்கு எதிராக குரல் கொடுத்த சிறு இயக்கங்களான என்.எல்.எவ்.டி, பி.எல்.எவ்.டி, தீப்பொறி சோரம் போகாமல் இருந்ததும், சில இயக்கங்கள் இந்திய சார்பாகவும் (சோவியத்சார்பாகவும்) மாறியதுடன் புலிகள் மேற்கத்தைய சார்பாகவும் செயற்பட்டு வருவதை பார்க்க முடியும். ஒரு சுதந்திரமான தேசிய சக்தியென ஒன்றுமே இன்று எம்மண்ணில் இல்லை. ஆகத்தனிநபர்களாக மட்டுமே உள்ளனர். புலிகள் இன்று போராடும் தன்மையை ஏகாதிபத்தியம் தனது நலன் நோக்கி கையாளுவதே . இலங்கையிலுள்ள தேசிய இனமுரண்பாட்டில் எழும் போராட்டம் முற்போக்காக நகர்வை தடுக்கவும், ஒரு வர்க்கப்போராட்டம் உருவாகமல் தடுக்கவும், இந்தியாவின் ஆதிக்கத்தை தடுக்கவும், தென்னாசியாவின் உறுதித்தன்மையை தடுக்கவும்... மேற்கத்தைய ஏகாதிபத்தியம் முயலுகின்றது. இதில் இன்று பயன்படுத்தப்படும் சக்திகளில் புலிகளும் ஒன்று. இந்த நோக்கில் பயன்படுத்தப்படும் போது தமிழ்மக்களின் கோரிக்கையை கையில் எடுப்பது தவிர்க்க முடியாது. தமிழர் விடுதலை கூட்டணியினர் 1950முதல் ஒரு மத்திய தர இயக்கமாக வளர்ந்து அதன் வளர்ச்சியில் ஏகாதிபத்தியம் சார்ந்து சென்றதையும் இன்று நாம் பார்க்கின்றோம். இவர்களை அம்பலப்படுத்த 30வருடங்கள் சென்றன. இவர்கள் தமிழ் மக்களின் முழுக்கோரிக்கைகளையும் (ஏகாதிபத்தியத்தின் தாருவாக இருந்து கொண்டே) வைத்து போராடுவது போல் செயற்பட்டனர். இதைப்போல் இன்று புலியின் செயற்பாடுகள் தேசியத்தின் மீது செயற்படுகின்றனர். ஆனால் இவர்கள் ஏகாதிபத்தியத்தின் செல்லப்பிள்ளைகளாகவும் உள்ளனர். இதை அவர்களின் பல நடவடிக்கைகள் எமக்கு எடுத்துக்காட்டியதை முன்பு சுட்டிக்காட்டினோம்.

தூண்டிலில் தொடர்ந்து ''சமர் சொந்த நலன் குழுநலன் என்ற பதங்களைப்பாவிக்கின்றதெ ஒழிய தரகு முதலாளிய வர்க்கநலன் எவை? அதன் அரசியல் கோசங்கள் எவை? அவை எப்படி புலிகளுடன் கோசங்களைப்பொறுத்துகின்றன எனச்சுட்டிக்காட்டவில்லை'' என்ற கருத்து தொடர்பாக முன்பு ஓரளவுக்கு சொல்லியுள்ளோம். இக்கருத்தையோட்டி மீண்டும் ஆராய்வோமாயின் சொந்த நலன், குழுநலன் என சொல்வது குறித்தவொரு பகுதி மட்டும், தங்களை மையப்படுத்தி செயற்படும் தன்மையைத்தான் இத்தன்மை தரகு முதலாளித்துவப்பிரிவுக்கு ஒரு சிறப்பான அம்சம் கூட. இக்குழுநலன் தரகாக இருக்கும் குறித்த பிரிவினரை சிறப்பாக சுட்டிக்காட்ட பயன்படுத்தியதே. இச்சக்திகளின் நலன்கள் ஒரு நாட்டை முழுமையாக ஏகாதிபத்தியத்துக்கு சேவைசெய்யும் வகையில் கையாள்வதே. தேசியவிடுதலைப்போராட்டம் தீவிரமடையும் முன்பே, இலங்கை தாரகுமுதலாளித்துவ நிலப்பிரபுத்துவ நாடாக இருந்ததும், தேசியவிடுதலைப்போராட்டம் தீவிரமடைந்த பின் எந்த

www.tamilarangam.net

மாற்றமும் தாகு முதலாளித்துவம் நிலப்பிரபுத்துவத்தின் மீது நிகழவில்லை. தொடர்ந்தும் பேணப்படுவதுடன் மேலும் நாட்டை அடகுவைக்கவும் முயலுகின்றனர். தேசியவிடுதலைப்போராட்டம் தொடங்கிய பின், இருந்த சில தேசிய முதலாளித்துவ சொத்துக்கள், செயற்பாடுகள் முற்றாக அழிக்கப்பட்டது. தேசியவிடுதலைப்போராட்டத்தின் பின் அறிமுகம் செய்த சில உள்நாட்டு உற்பத்திகள் கூட இன்று அழிக்கப்பட்டு விட்டது. புலிகள் போராடப்பயன்படுத்தும் ஆயுதங்கள் முழுமையாக ஏகாதிபத்தியத்திடமிருந்தே பெறுகின்றனர். உள்ளூரில் சில வகையான ஆயுதங்களை தற்பொது செய்த போதும் (அவை பெருமளவில் வெளியிலிருந்து கொண்டுவரும் நெருக்கடியினால் தான்), சில அடிப்படை ஆயுதங்களை சுயமாக செய்யமுயன்றவர்களை (உள்ளுக்குள்) கொன்றுமுள்ளனர். ஏனெனில் சுய ஆயுதவுற்பத்தி சுயமான விடுதலைக்கு வித்திடும் என்பதாலேயே. புலிகள் பயிற்சி எடுத்த இடங்கள், இன்று சர்வதேச போதைவஸ்துக்களுடன் உள்ள தொடர்பு, மற்றும் யாழ்கடத்தல்காரர்களின் (அநியப்பொருட்களை சிங்கள தரகுமுதலாளித்துவத்துக்கு எதிராக கடத்தும் தமிழ் தரகு முதலாளித்துவம்) ஆதிக்கம் புலிகள் எதைச்சார்ந்துள்ளனர் என்பதை சிறப்பாக எடுத்துக்காட்டுகின்றது.

இன்று சுயவுற்பத்தி, கேள்வித்தாள்களில் சுயவுற்பத்தியுடன் அமைந்த கேள்விகள்; இவைகளை வைத்துக்கொண்டு தேசியத்தின் பற்றினால்தான் வருகின்றது எனச்சொன்னால் தமிழர் விடுதலைக்கூட்டணி இப்படி எத்தனையை கூறினார்கள். குறிப்பான இச்செயற்பாடுகள் இன்று யாழ்ப்பாணத்திலுள்ள பொருளாதார நெருக்கடியும், மக்கள் மீதான புலிகளின் பாசிச நடவடிக்கை ஏற்படுத்தும் எதிர்ப்பு உணர்வு, தங்கள் மீது பாய்யும் என்ற ஒரு அம்சம் காரணமாகவே சுயபொருளாதாரம் பற்றியும், மனித உரிமை பற்றியும், [சிறைகள், நீதிமன்றங்கள், பொலிச்சேவை உருவாக்கி ஒரு சிலவற்றை (அரசியல் கைதிகளையல்ல) விசாரித்து] நாடகமாட முற்படுகின்றனர். இவைகளிலிருந்து தேசியம் பற்றி மதிப்பிட முடியாது. புலிகளின் கோசங்கள் அன்று தமிழர் விடுதலைக்கூட்டணி 1980க்கு முன் நடத்தியது போலவே உள்ளது. வெளியில் வைக்கும் கோசத்தை மட்டும் வைத்து (அமெரிக்க ஜனாதிபதியின் ஜனநாயக் கோரிக்கைகள், சீரழிந்த கம்யூனிஸ்ட் கட்சியின் கோசங்கள் போன்று)நாம் தரகா, தேசியமாவென மதிப்பிட முடியாது. அவர்களின் நடவடிக்கைதான் அனைத்தையும் தீர்மானிக்கின்றது. அந்தவகையில் புலிகளின் செயற்பாடுகள் அனைத்தும் தேசியத்தின் பெயரால் ஏகாதிபத்தியத்துக்கு சிறப்பாக சேவைசெய்கின்றது.

எமது சொந்த மக்கள் உயிர்வாழ பனம்பழத்தை சூப்பும்பொழுது, புலிகள் கொகக்கோலாவும், சீஸ் இன்றி வாழமுடியாது உள்ளனர். சொந்த நாட்டின் உவேபத்தியில் தம்மைக்காத்துக்கொள்ள முடியாதவர்கள்; சொந்த உற்பத்திபற்றி அக்கறை காட்டுவார்கள் என எதிர்பார்க்க முடியாது. தேசிய முதலாளித்துவம் எனின் தேசியத்தன்மை தெளிவானதாக இருக்க வேண்டும். சொந்தத்தேசத்தில் தேசியம் கட்டியெழுப்பப்பட வேண்டும். தேசியம் கட்டியெழுப்ப ஒரு போராட்டத்தில் மிக சாதகமான (புலிகள் இன்று தளப்பிரதேசத்தை) தனமையை கொண்டுள்ளனர். இன்று அன்னியசக்திகளின் தயவில் சொந்தவுற்பத்தியை தடுக்கும் வகையில் முழுமையாக செயற்பட்டு வருகின்றனர்.

www.tamilarangam.net

''தமிழ் மக்களின் இன்றைய போராட்டம் தேசிய விடுதலைப்போராட்டம்'' இதில் சமருக்கு எந்தக்கருத்து முரண்பாடும் கிடையாது. இப்போராட்டத்தை ஒவ்வொரு சக்தியும் தனது நோக்கில் கையாளும்: இதில் புலிகள் தனது நோக்கில் கையாழுகின்றது. புலிகள் என்னும் போது இவ்வியக்கம் ஆரம்பத்தில் குட்டிபூர்சுவா இயக்கமாக இருந்து தனது இருப்பையொட்டி தொடர்ந்து ஏகாதிபத்தியத்துடன் சரணடைந்தது. இவ்வியக்கத்தின் செயற்பாடுகள் அனைத்தும் மிகத்தெளிவாக இன்று வெளிவருகின்றது. அவர்கள் எந்தப்பின் தளத்தில் நிற்கின்றனர் எங்கிருந்து உதவியை பெறுகின்றனர் இவைகள் தொடர்பாக முன்பு நாம் சுட்டிக்காட்டினோம்.

''நிலவுகின்ற அரசியல் காலகட்டம்'' இதை எடுப்பின் இலங்கையில் இனமுரண்பாடு பிரதான முரண்பாடாக உள்ள நிலையில், தமிழ் தரகு முதலாளிவர்க்கம் சிங்கள தரகுமுதலாளித்துவத்தின் பாதிப்பால் இவ்வின முரண்பாட்டை சாதகமாகப்பயன்படுத்துவதில் முனைந்துள்ளது. இதற்கு இசைவாக சர்வதேச நிலைமையுள்ளது. ஏகாதிபத்தியத்தின் நிதிமூலதனத்தின் ஊடாக மூன்றாம் உலகநாடுகளை கட்டுப்படுத்துகின்றனர். இன்று ஏகாதிபத்தியம் அனைத்து துறைகளிலும் தனது ஆதிக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இவ்வகையில் தேசியவிடுதலைப்போராயட்டத்தையும், தனக்கு சாதகமாகப்பயன்படுத்துவதில் வெற்றிபற்றுள்ளது. இதை பல உதாரணங்கள் மூலம் பார்க்கலாம்: பங்களாதேஷ், சூடான், எரித்திரியா, குர்திஸ், ஆப்கானிஸ்த்தான்... இப்படி எல்லாப்போராட்டத்தையும், முழுமையாக ஏகாதிபத்தியம் பயன்படும் வகையில் உள்ளூர் தரகுமுதலாளித்துவம் பயன்படுத்தப்படுகின்றது.

''தேசியமுதலாளித்துவசக்திகள் இருக்க முடியாது என்ற எடுகோளில் இருந்து கட்டியெழுப்ப முடியும் இந்த தர்க்கம் சமரை அறியாமலேயே நடக்கிற போராட்டம் தேசியப்போராட்டம் என அங்கீகரிப்பதில் சமரை கொண்டுபோய் விட்டு விடுகின்றது'' என்ற தூண்டிலின் வாதத்தில் தேசிய முதலாளித்துவம் இருக்க முடியாது என்ற வாதம் எப்படி நடக்கும் போராட்டத்தை தேசியய விடுதலைப்போராட்டத்தை அல்லது இல்லையா என்பதை தீர்மானிக்கின்றது? ஒரு வர்க்கம் இருக்கின்றதா, இல்லையா என்பதில் இருந்து போராட்டத்தை தேசியப்போராட்டமாக வரையறுக்க முடியாது. சமர் இன்று தமிழ் மக்கள் முன்னுள்ள போராட்டத்தை தேசிய விடுதலைப்போராட்டமாக அங்கீகரிக்கின்றது. அதிலிருந்தே நாம் விவாதத்தை நடத்துகின்றோம். இப்போராட்டத்தை புலிகள் த்ம் நலங்களுக்கு ஏற்ப பயன்படுத்துகின்றது. இதே போல் எல்லா வர்க்கமும் தமது நோக்கில் பயன்படுத்த முயலும். மற்றும் தேசியமுதலாளித்துவ சக்திகள் இருக்கமுடியாது என்ற எமது வாதம், மூன்றூம் உலக நாடுகளில் இன்று ஏகாதிபத்தியத்தின் பிடி இறுகிவரும் இன்றைய நிலையில் ஒரு சுதந்திரமான முதலாளி உருவாகமுடியாது. அவர்கள் தரகு முதலாளியாகவோ அன்றி மத்தியதர நிலைக்கு மாற்றப்பட்டுவருகின்றனர். மத்தியதரத்துக்கு மாறும் இவர்கள்கூட போராட்டத்தில் உள்ள வெற்றியில் ந்ம்பிகையிழந்து தரகு முதலாளித்துவத்துடன் இணைந்துகொள்ளுகின்றார்கள். இதை எம் நாட்டி உருவான இயக்கங்களைக்கொண்டே பார்க்க முடியும். இக்கருத்தை யொட்டி மேலும் தூண்டில் ''தரகுமுதலாளிவர்க்கத்தின் அரசியல்

www.tamilarangam.net

கோரிக்கைகள் எப்படி அமையும் என்று அது குறித்து காட்டவில்லை''. இது தொடர்பாக நாம் விளக்கியுள்ளோம். தரகுமுதலாளித்துவம் அப்பட்டமாக தாம் ஏகாதிபத்தியத்தின் கைக்கூலிகள் என சொல்வதில்லை. அதே போல் அரசியல் கோரிக்கைகளை நேரடியாக வைப்பதில்லை. அதுவும் ஒரு விடுதலை அமைப்பு மேலும் இதை இரகசியமாக கையாண்டால் மட்டுமே உயிர்வாழ முடியும். எப்பொழுதும் அரசியல் கோசங்களில் இருந்து ஒரு அமைப்பு பற்றி முடிவுக்கு வருவதாயின், சரியான கட்சி, ஒரு உண்மையான சோசலிசவரசில் மட்டுமே சாத்தியம். இதற்கு மாறாக சுரண்டல் அமைப்புக்களை சரியாக இனம்காண அவர்களின் நடவடிக்கைகள் யாரைச்சார்ந்துள்ளனர் என்பதைக்கொண்டே அறியமுடியும். இதில் புலிகள் அரசுக்கு எதிரான செயற்பாட்டை நீங்கள் குறித்துக்காட்ட விரும்பலாம்: இச்செயற்பாட்டை முன்பு விளக்கியிருந்தாலும் மீண்டும் ஆராய்வோமாயின் தேசியத்தை சொல்லும் அனைவரும் தேசியவாதிகளாக இருப்பதில்லை. இதற்கு சிறந்த உதாரண்மாக கிட்லர், சதாஹுசைன், பிரேமதாசா... இப்படிப்பார்க்கலாம். மக்களின் தேசிய உணர்வை சிறப்பாக பயன்படுத்தும் இவர்கள் தரகுமுதலாளிகளே. இவர்கள் யாருடன் சிறப்பான உறவை கொண்டிருக்கின்றார்கள் எனப்பார்ப்பின் அவர்களின் வர்க்க மூலத்தைப்பார்க்கலாம். இதை லெனின் ''ஒரு மனிதனை அவனது நண்பர்களைக்கொண்டு மதிப்பிடலாம். அவனது அரசியல் கூட்டாளிகள் அவனக்காக வாக்களிப்பவர்கள் ஆகியோரைக்கொண்டு ஒரு மனிதனது அரசியல் வண்ணம் இன்னதென கூறிவிடலாம் (லெனின் தேர்வு நூல் தொகுதி2, பக்கம்240)'' இதிலிருந்து புலிகளின் நண்பர்கள் தேசிய விடுதலைப்போராட்டத்தை நேசிக்கும் மக்களல்ல ஏகாதிபத்தியமும் அதன் அடிவருடிகளுமே.

தேசிய விடுதலைப்போராட்டத்தை முன்னெடுப்பவர்கள் என்றவொர் வரையறை, யாருடைய பிரதிநிதியென சொல்ல முடியாது என்பதை தூண்டில் ஒத்துக்கொள்ளுகின்றது. புலிகளின் நண்பர்கள் இன்று தெளிவானது. இதிலிருந்து புலிகளின் வர்க்க மூலம் தெளிவானது. யாருடைய பிரதிநிதியென சொல்ல முடியாது என்பதி தூண்டில் ''எந்த வர்க்கத்தின் பிரதிநிதிகள் என்று சொல்லவில்லை எங்கின்றார்களே. இது ஒரு சிக்கலான கேள்வி தான். சிக்கலுக்கான காரணம் தேசிய விடுதலைப்போராட்ட காலகட்டமாக இது இருப்பதே. உதாரணமாக ஜப்பானிய எதிர்ப்பு போராட்டமாக சீன கம்யூனிஸ்ட் கட்சி நடத்திய போது கட்சி யாருடைய பிரதி நிதியாக செயற்பட்டது என்று சொல்லலாமா? கட்சி பாட்டாளிவர்க்கத்தின் பிரதிநிதியாகவா செயற்பட்டது? இல்லை, அது முமக்களினதும் அனைத்து தேசியவர்க்கத்தினதும் நலங்களை கருத்தில் கொண்டது''. எனவே புலிகள் தேசிய விடுதலைப்போராட்டத்தில் ஈடுபடுவதை மட்டும் கொண்டு அதை மதிப்பிட முடியாது. யாரின் கூட்டாளியாக செயற்படுகின்றது என்பதிலிருந்தே புலிகளைப்பார்க்க வேண்டும்.

''அவர்களது போக்கு முதலாளித்துவ தேசிய வாதம் என நாம் கூறுகின்றோம். அவர்களின் பின்னால் உள்ள சக்திகள் யார் என்றால் இந்தக்கோரிக்கைகளின் தேசியத்தன்மையின் காரணமாக முழுத்தேசிய வர்க்கங்களுமே நிற்கின்றனவென கூற வேண்டும்'' எனற இவ்விவாதம் தொடர்பாக முதலாளித்துவ தேசியவாதம் தொடர்பாக தூண்டிலின் பார்வையில், தரகுமுதலாளித்துவத்தையா அல்லது தேசிய

www.tamilarangam.net

முதலாளித்துவத்தையா பிரதி செய்கின்றது என்பதை இன்னும் முடிவு செய்யவில்லை. ஆனால் இவர்கள் பின் எல்லாவர்க்கமும் உள்ளது என அவர்களின் அரசியல் கோரிக்கைகளையும் சுட்டிக்காட்டுகின்றனர். அவரிகளின் அரசியல் கோரிக்கைகளில் இருந்து அது அல்லது இது என சொல்லமுடியாது என்பதை முன்பே தூண்டில் ஒத்துக்கொள்ளுகின்றது. எல்லாவர்க்கமும் அவர்களின் பின்னுள்ளது என்பது எவ்வளவுக்கு சரியானது என்ற கேள்விக்கப்பால் சீனக்கம்யூனிஸ்ட் கட்சி ஜப்பானுக்கு எதிராக போராடிய போது, எல்லாவர்க்கத்தையும் பிரதி செய்ததாக கூறிய தூண்டில், புலிகள் எல்லாவர்க்கத்தினதும் தேசியக்கோரிக்கையின் பின் அணிதிரட்டியுள்ளதாக கூறி அதை முதலாளித்துவ தேசியவாதம் என எதை அடிப்படையாக வத்து கூறுகின்றார்கள். முதலாளித்துவ தேசியவாதம் என அடித்து சொல்ல தூண்டில் என்ன அடிப்படையை முன்னெடுத்ததோ, அதே போன்று புலிகள் முதலாளித்துவ தேசியவாதத்தில் தரகுமுதலாளித்துவத்தை பிரதி செய்வதாக அடித்துச்சொல்ல அவர்களின் நண்பர்களில் இருந்தே முடிவுக்கு வரமுடியும்.

''புலிகள் சொந்த நலன் குழுநலன் என்பவற்றிற்குப்பின்னால் உள்ள கோரிக்கைகள் தமிழ் மக்களின் தேசிய நலங்களுடன் இணைந்த கோரிக்கைகளாக உள்ளன. ஆனால் அவற்றை நிறைவேற்றுவதில் புலிகள் ஊசலாடுகின்றனர் என்பது மட்டுமே ஒருவர் இவற்றிலிருந்து வரக்கூடிய முடிவுகள் ஆகும்''. எனரவாதத்தில் சொந்த நலன் குழுநலன் என்பது ஏகாதிபத்தியத்துக்கு துணைபோகும் தரகுமுதலாளித்துவத்தின் நலங்களே. புலிகள் தமிழ் மக்களின் தேசிய நலனுடன் இணைந்த கோரிக்கைகளுடன் போராடுவதை தூண்டில் ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும். புலிகாள் போன்ற சக்திகளை தூண்டில் கூறுவது போல் ''குறிப்பிட்ட கட்சி எந்த வர்க்கத்தின் பிரதிநிதி என்பது பற்றிய கேள்விக்கு இது அல்லது அது என திட்டவட்டமாக அதுவும் இதுபோன்ற ஒரு போராட்ட சூழலில் அறுதியிட்டு சொல்வது சாத்தியமில்லை''. ஆனால் தூண்டில் முதலாளித்துவ தேசியவாதத்தை பிரதி செய்கின்றார்கள் என அறுதியிட்டு சொல்லுகின்றர்ர்கள். இதை எப்படி சொல்லமுடிகின்றதோ அதே போல் தர்கு முதலாளித்துவத்தை பிரதி செய்கின்றார்கள் என்பதை, அவர்களின் நலங்களை பிரதிசெய்யும் குழுநல்ன், சொந்தநலன் மற்றும் அவர்களின் கூட்டாளிகளும் உறுதி செய்கின்றனர்.

''சமரின் கூற்றுப்படியே புலிகள் தமது நலங்களுக்காகவே தமிழ் மக்களின் நலனை விற்கத்துணிந்தார்கள். இது முதலாளித்துவ தேசியவாதத்தின் தன்மையே அன்றி வேறுவொன்றுமில்லை''. இவ்விவாதத்தில் தமிழ் மக்களின் நலங்களை விற்கத்துணிந்தவர்கள் தேசிய முதலாளித்துவம் அல்ல. இதன் தன்மை தர்குமுதலாளித்துவத்தின் குணாம்சமே. நாட்டை ஏகாதிபத்தியத்துக்கு விற்கமுனைவது என்பது தேசிய முதலாளிகள் செய்வதல்ல. இது தரகுமுதலாளிகளின் செயற்பாடாகும். ''ஏகாதிபத்தியம், இந்தியா, இலங்கையரசுடன் புலிகளின் உறவு தனித்துவத்தை அங்கீகரிக்கவே'' என்ற தூண்டிலின் வாதத்தில் தனித்துவம் என்ற உறவு என்ன? அங்கீகரிக்க முயலும் இச்சக்திகள், புலிகள் தரகாக மாறும் பட்சத்தில் மட்டுமே அங்கீகரிப்பு சாத்தியமாகும். தனித்துவத்தை அங்கீகரிப்பது என்ற கோரிக்கை தனித்துவமான தரகு தொடர்பான அடிப்படையை கொண்டதே.

www.tamilarangam.net

இஸ்ரேல் பயிற்சி கொடுக்கவும், மேற்கு நாடுகள் ஆயுதம் கொடுக்கவும் தரகு முதலாளிகளாக அங்கீகரித்ததன் பின்பேயொழிய தேசிமுதலாளிகள் என்ற அடிப்படையில் அல்ல. ''புலிகளின் அரசியல் கோரிக்கைகள் தமிழர் விடுதலைக்கூட்டணியுடையதைவிட முன்னெறியவை. தமிழீழத்தை பெற இந்தியாவைத்தலையிடுமாறு தமிழர் விடுதலைக்கூட்டணி கேட்டது. புலிகள் இந்தியத்தலையீடு தமது தனித்துவத்தை அங்கீகரிக்காததே'' என்ற தூண்டிலின் இவ்விவாதம் அரசிய்ல் கோரிக்கைகளில் இருந்து முடிவுக்கு வரமுடியாது. அவர்களின் நடைமுறை செயற்பாட்டைக்கொண்டே முடிவுக்கு வர்வேண்டும். இது தொடர்பாக மேல் விவாதித்துள்ளோம். தமிழர் விடுதலைக்கூட்டணியின் தரகுத்தன்மை இந்தியாவுக்கு இசைவாக தரகுக்கு ஒப்புக்கொண்டு இந்தியத்தலையீட்டை நடத்தக்கோரிய போது, புலிகள் தனக்கு முழுமையாக தரகுத்தன்மையை அங்கீகரிக்கவே இந்தியாவைக்கோரியது. இதில் தமிழர் விடுதலைக்கூட்டணி, மற்றவர்களுக்கும் பங்கு கொடுப்பதை புலிகள் எதிர்த்தனர். இதில் தனித்துவத்தை என்ற பதத்தை வர்க்கமற்ற தன்மை என்ற கோட்பட்டுக்குள் (மனிதம் கூறுவது போல்) பார்க்கவில்லையென எடுக்கின்றோம். இது போலவே குழுநலன், சொந்தநலன், தனித்துவம்.... என்ற பதத்துக்கும் வர்க்கமூலம் உண்டு என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். புலியின் தனித்துவக்கோரிக்கை தரகுமுதலாளித்துவத்தின் நலங்களில் இருந்து எழுந்ததே.

''தமிழர்விடுதலைக்கூட்டணியிடமிருந்த தரகுமுதலாளித்துவ சிந்தனை மக்களிடம் ஏற்படுத்திய தாக்கம் புலிகளின் முதலாளித்துவ தேசியவாதக்கருத்து மக்களை சென்றடையவில்லை'' என்ற தூண்டிலின் வாதம், தூண்டில் முதலாளித்துவ தேசியவாதத்துக்குள் தேசிய முதலாளித்துவத்தையே சுட்டிக்காட்டுவதாகவுள்ளது. இன்னும் இது அல்லது அது என முடிவு எடுக்கவில்லையென இதழ் 41,48இல் சொல்லும் தூண்டில், தண்க்களை அறியாமலேயே புலிகள் தேசியமுதலாளிகளே என்பதை கட்டுரை முழுக்க வாதிடுகின்றனர். இது மேற்குறிப்பிட்டவாதத்தில் தெளிவாக வெளிவந்துள்ளது. மக்களிடம் தரகுமுதலாளித்துவ சிந்தனையுள்ளது எனின், தமிழ் மக்களின் தேசியவிடுதலைப்போராட்டம் தரகுமுதலாளித்துவ போராட்டமாகவா உள்ளது? அப்படியெனின் தமிழ் மக்களின் தேசிய விடுதலைப்போராட்டம் தேயவிடுதலைப்போராட்டமே இல்லையா? புலிகள் முதலாளித்துவ தேசவிடுதலையை (தேசியமுதலாளித்துவ விடுதலையை) முன்னெடுக்கின்றார்கள் எனின், மக்களே எதிராகவுள்ளனர். மக்கள் ஏகாதிபத்தியத்தை சார்ந்தும் புலிகள் ஏகாதிபத்தியத்துக்கு எதிராகவும் உள்ளனர். தூண்டிலின் ஆய்வு முறையிலுள்ள தவறு, முங்கூட்டியே ஒரு முடிவும் இவ்விவாதத்தை நடத்தக்காரணமாக உள்ளது.

''இராஜதந்திரம் எனக்கூறி பலதடவை படுகுழியில் விழுந்த போதும், தமிழ் பகுதியின் அதிகாரத்தை பிறர்கையில் கொடுத்துவிட தயாராகைருக்கவில்லை'' என்ற தூண்டிலின் விவாதத்தில் அதிகாரம் என்பது சுரண்டலை நடத்துவதே இச்சுரண்டலின் பங்கு தொடர்பாக இராஜதந்திரம் (இது மக்களை ஏமாற்ற பயன்படுத்தும் ஒரு செயற்பாடு) என்று நடத்திய பேரங்கள்ஃ தோல்வியையும், படுகுழியில் விழுந்ததாகவும் பார்க்க வேண்டும். இதை விடுத்து ''அவர்களின் அரசியலுக்கு முடியாதுள்ளது'' என்பது அடிப்படியயில் தவறானது.

www.tamilarangam.net

சுரண்டலின் பங்கு தொடர்பாக எழுகின்ர போரங்களில் தோல்வியே ஒழிய தேசியமுதலாளித்துவம் தொடர்பான அரசியல் அல்ல. தேசிய முதலாளித்துவம் எப்பொழுதும் ஏகாதிபத்தியத்துடன் உடன்பட்டு தீர்வு பெறமுடியாது. இந்தியாவிடம் மாதம் 50கோடி பெறவும், இஸ்ரேலிடம் பெற்ற பயிற்சி என்பன மிகச்சிறப்பாக, அவர்களின் போரங்களை தெளிவாகவும், ஏகாதிபத்தியத்துக்கு துணைபோவதையும் காட்டுகின்றது.

''புலிகளின் பின்னால் உள்ள சக்திகள் உற்பத்தி முறைகாரணமாக தேசிய முதலாளித்துவ வர்க்கத்தினர் என குறிப்பிடப்படா விட்டாலும், உள்ளும் வெளியும் உள்ள அதன் திரண்ட ஆதரவு சக்திகளிடம் இருப்பது ஒருவகைப்பண்டைய பிரபுத்துவ சாயல் கலந்த முதலாளித்துவ தேசியவாதமே. இனவெறியுடன் கலந்து இது உள்நாட்டிலும் வெளிநாட்டிலுமிருந்து புலிகளுக்கு வேண்டிய ஆதரவு செலுத்துகின்றது''. இவ்விவாயதத்தில் புலிகளின் பின்னால் உள்ள உற்பத்தி முறை தேசிய முதலாளிவர்க்கம் இல்லையென ஏற்றுக்கொள்ளுகின்றது. அப்படியான் முதலாளித்துவ தேசியவாதத்தில் புலிகளின் பின்னால் உள்ளது, தேசியமுதலாளித்துவம் இல்லையெனின் தரகுமுதலாளித்துவமே. இதை தூண்டில் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். ''உள்ளும் வெளியிலும் திரண்ட சக்திகள்'' எப்பொழுதும் உற்பத்துவி முறையை மீறி தம்போக்கில் எதையும் செய்யமுடியாது. உ+மாக நிலப்பிரபுத்துவத்திலிருந்து முதலாளித்துவ புரட்சிநடைபெற்ற நாடுகளில், புரட்சியை முன்னெடுத்தோர் முதலாளித்துவ உற்பத்திமுறையை கொண்டிருந்த போதும் அதற்கு உள்ளும் வெளியிலும் பாட்டாளிவர்க்கம் செயலாற்றியது. இதிலிருந்து எது உற்பத்தி முறையை தலைமை தாங்குகின்றதோ அதுவே அதன் இலக்கு ஆகும். ''பண்டைய பிரபுத்துவ சாயம்கலந்த முதலாளித்துவ தேசியவாதமே''. இதில் பிரபுத்துவம் என்பது ஒரு தேசவிடுதலைப்போராட்டத்தின் எதிரியே. அதனுடன் கூட்டுச்சேர்ந்திருக்கக்கூடிய ஒரேவர்க்கம் தரகுமுதலாளித்துவமே. அதாவது இது மூன்றாம் உலகநாடுகளில் எல்லாவரசுக்களிலும் காணப்படும் இயல்பே.

''இந்திராவைக்கொன்ற சீக்கியரை மதவெறிப்படுகொலையாளர் எனவர்ணித்த புலிகள் தான் இராஜீவையும் கொன்றார்கள் இது புலிகளின் அரசியலுக்கும், அதன் நலங்களுக்கும் உகந்தவிதத்தில்'' என்ற இவ்விவாதத்தில் புலிகள் இந்தியாவை பயன்படுத்தும் நோக்கில் 1984இல் வெயிட்ட கருத்தே. அதாவது புலிகள் ஏகாதிபத்தியத்திடம் முழுமையாக சரணடையாத நிலையில், இந்தியாவின் கால்களில் விழும் நிலையிலிருந்த காலகட்டத்தில் நடந்தவை. இராஜீவின் கொலையென்பது வெறும் புலியின் பலிவாங்கல் என்ற நிலைக்கு அப்பால், மேற்கத்தைய ஏகாதிபத்தியத்தின் தேவையைப்பூர்த்தி செய்யும் வகையிலும் நிகழ்த்தப்பட்டது.

மார்கஷின் மேற்கோளை முன்வைத்து ''அதன் அடிப்படியயில் தனது அரசியல் கோரிக்கையை முன்வைப்பார்'' என்ற இவ்விவாதம் தொடர்பாக முன்பு விவாதித்துள்ளோம். இங்கு மார்கஷின் கருத்து முதலாளித்துவ நாட்டில் உள்ள குட்டிபூர்சுவா வர்க்கமும், அதன் நிலையையொட்டி வைக்கப்பட்டதே. அங்கு குட்டிபூஷ்வா வர்க்கம் தனது அரசியல் கோரிக்கைகளை (அன்று அக்கோரிக்கைகள் முற்போக்காக இருந்தது) நேரடியாக முன்வைத்தனர். மூன்றாம்

www.tamilarangam.net

உலகநாடுகளில், அதுவும் எமது போராட்டம் போன்ற தேசியவிடுதலைப்போராட்டத்தில், தூண்டில் கூறியது போல் அது அல்லது இதுவென திட்டவட்டமாக கூறமுடியாத ஒரு நிலையில், அரசியல் கோரிக்கைகளை கொண்டு அதன்வர்க்கமூலத்தை இனம் காணமுடியாது. அரசியல் கோரிக்கைகளுக்கு அப்பால் அவர்களின் செயற்பாடுகளையும் நண்பர்களையும், உற்பத்தியுறவுகளுடன் உள்ள தொடர்புகளையும் கொண்டே அவர்களின் வர்க்கமூலத்தை ஆராயவேண்டும். இன்று கம்யூனிஸ்ட்டுக்கள் எனச்சொல்லும் முதலாளித்துவவாதிகளின் அரசியல் கோரிக்கைகள், அமெரிக்கா ஜனாதிபதியின் ஜனநாயக கோரிக்கைகள், இவைகளையெல்லாம் அரசியல் கோரிக்கைகளாக கொண்டு வர்க்கமூலத்தை ஆராய்ந்தால் அவர்கள் ஒவ்வொர்வரும் செய்யும் செயலுக்கு மாருபட்டவகையில் அடங்குவர். எனவே அரசியல் கோரிக்கைகளை ஆய்வுக்கு எடுப்பின், குறித்த சக்தி குரித்த போராட்டத்தில் முற்போக்கான நிலையில் இருந்தால் மட்டுமே அரசியல் கோரிக்கையிலிருந்து முடிவுக்கு வந்தடைய முடியும்.

''புலிகள் தரகுமுதலாளித்துவத்தை பிரதிநிதித்துவப்படுத்துவது என்றால் ஒடுக்கப்பட்ட தேசம் ஒன்றின் தரகுமுதலாளித்துவம் போகக்கூடிய உச்சவெல்லைக்கு அது போய்யிருக்க வேண்டும். இந்தியாவரசை முற்றாக நம்பி ஆயுதங்களை ஒப்படைத்திருக்க வேண்டும் அல்லது இலங்கையரசின் ஒற்றையாட்சி அதிகாரத்துக்கு உடன்பட்டிருக்க வேண்டும்''. தூண்டிலின் இவ்விவாதத்தையொ எடுப்பின் புலிகள் சமரசத்துக்கு போகமாட்டார்கள் என்பதை (எதிர்காலத்தில்) தூண்டில் மறுக்க மாட்டார்கள். அப்படிப்போனவுடன் அவர்களை தரகுமுதலாளிகள் என வரையறுக்க தூண்டில் உடன்படுகின்றது. இப்பிரச்சனையில் இப்ப புலிகள் என்னவென்பதே நாளை போவார்கள் எனின், இன்று அவர்கள் தரகு முதலாளிகளே. இந்திய விடுதலைப்போராட்டத்தில் காந்தியின் செயற்பாடு தேசியமுதலாளித்துவமா? தரகுமுதலாளித்துவமா? காந்தி தரகுமுதலாளியாகவே செயற்பட்டவர். இதை காந்தி எழுதிய பல கடிதத்தில் ஒன்றை முன்வைக்கின்றோம். 1930இல் வைசிராஜவுக்கு எழுதிய கடிதத்தில் தமது இயக்கம் பிரிட்ஷ் ஏகதிபத்தியத்தை எதிர்த்து துவங்கப்பட்டதல்லவென்றும், இந்தியப்புரட்சி இயக்காத்தை எதிர்த்தே அது துவங்கப்பட்டது என எழுதியுள்ளார். இன்னுமொரு இடத்தில் காந்தி வர்க்கயுத்தத்தை தடுப்பதற்கு எனது சொல்வாக்கின் முழுப்பலத்தையும் பயன்படுத்துவென் என்பதைப்பற்றி நீங்கள் உறுதியாக இருக்கலாம். உங்களிடமிருந்து (நிலப்பிரபுகள், தரகுமுதலாளிகள்) சொத்துக்களைப்பறிக்க அநீதியான ஒரு முயற்சி நடந்தால் அப்போது உங்கள் பக்கம் சேர்ந்து கொண்டு இந்த காந்தி போராட்டம் நடத்துவதை நீங்கள் காணவாம் என காந்தி கூறினார். காந்தியின் போராட்டத்துக்கும் புலிகளின் போராட்டத்துக்கும் என்ன வேறுபாடு. ஆக அகிம்சை, ஆயுதப்போராட்டம் மட்டுமே. இதற்கு அப்பால் ஏகாதிபத்தியத்தின் சிறந்த பிரதிநிதிகளாக இருவரும் இருந்தனர். மேற்குறிப்பிட்ட காந்தி தொடர்பான விடயம் புதிய ஜனநாயக வெளியீடான காந்திகாங்கிரஸ் துரோகவரலாறு என்னும் புத்தகத்தில் எடுக்கப்பட்டது. ஏகாதிபத்தியத்தை சார்ந்து எப்படியொரு விடுதலை அமைப்பு செயற்படும் என்பதற்கு பல விடயங்களை இப்புத்தகத்தில் பார்க்கலாம். இது ஒரு புறமிருக்க

www.tamilarangam.net

இந்தியாவிடம் முற்றாக அடிபணிய மறுத்ததற்கும், புலிகள் மேற்கத்தைய ஏகாதிபத்தியத்தின் செல்லப்பிள்ளையாக இருந்ததும் இந்தியாவிடம் முற்றாக சரணடைய முடியாததற்கு முக்கிய காரணமாகும். தாரகை மாற்றுவது தொடர்பாக இந்தியா தொடர்பாகவிருந்த அச்சம் கூட புலிகள் ஊசலாடியது. இலங்கையரசுடன் ஆன உறவென்பது, மேற்கத்தைய நாடுகளின் தேவையொடு அமைவதே. இன்று எழுந்துவரும் தேசிய விடுதலைப்போராட்டத்தை பயன்படுத்தி, தென்னாசியாவின் சமநிலையை உடைக்கவும், மேற்கத்தைய ஏகாதிபத்தியத்துக்கு மோதலை நடத்துவது தேவையாகவுள்ளது. ஒரு ஏகாதிபத்தியம் தனது தேவையுடன் முரண்பட்ட சக்திகளைப்பயன்படுத்தும் இதை தூண்டில் மறுக்காது என நினைக்கின்றோம். அந்தவகையில் தான் இன்று புலிகளின் மோதலைப்பார்க்க வேண்டும். ஆனால் நாளை தென்னாசியாவின் பலம் பலவீனத்துடன் சமரசம் ஏற்படும். மற்றும் புலிகள் சார்ந்த தமிழ்தரகுமுதலாளிகளுக்கும் சுரண்டலின் பங்கு தொடர்பாக இந்தியா சார்ந்த தமிழ் தரகுமுதலாளிகளுக்கும் ஏற்பட்ட முரண்பாடு சமரசம் அடைய முடியவில்லை. தமிழர் விடுதலைக்கூட்டணி (தமிழ்தரகுமுதலாளித்துவ வேறு ஏகாதிபத்திய பிரதிநிதிகள்) சிங்கள தரகு முதலாளித்துவத்துடன் நீண்டகாலமாக மோதியதும் இதன் தொடர்ச்சியாக இனப்போராட்டத்தை நோக்கி விரிவுபட்டு இன்று இனமுரண்பாடாக மாறுபட்டு விட்டது.

''இந்தியப்படையை எதிர்ப்பது என்பது தாகுமுதலாளித்துவத்தின் எல்லைமீறிய அரசியல் நடவடிக்கைகள்'' அப்படியெனின்; சதாம்ஹுசைன், கடாபி, பனாமா அதிபர்... இவர்கள் தேசிய முதலாளிகளா? இங்கு ஒரு ஏகாதிபத்தியம் தனது தேவைக்காக புலிகள் போன்ற சக்திகளை பயன்படுத்தும். அந்தவகையில் புலிகளை இந்தியா என்ற பிராந்திய ஏகாதிபத்தியத்துக்கு எதிராக ஏகாதிபத்தியம் பயன்படுத்தியது. இதே போன்று பிரேமதாசாவையும் பயன்படுத்தியது. பிரேமதாசாவின் இந்தியப்படையே வெளியேறு என்ற கோசம், தேசிய முதலாளித்துவத்தின் கோசம் அல்ல. இது தாகு முதலாளித்துவத்தின் கோசமே. எனவே தாகு முதலாளிகளுக்குமிடையே மோதல்கள் நிகழும். ஏகாதிபத்தியத்துக்குமிடையேயும் மோதல் நிகழும். இதைக்காண தூண்டில் தவறிவிடுகின்றது. இறுதிமுடிவில் தூண்டில் முதலாளித்துவதேசியவாதம் என்பதை அது அல்லது இது, அதாவது தாகுமுதலாளித்துவமா? தேசியமுதலாளித்துவமா? என வரையறுக்காமல் விட்டுவிடுகின்றனர். இடைக்கிடை தாகுமுதலாளித்துவம் இல்லையென அடித்துவாதிட முற்படுகின்றனர். தூண்டிலின் இவ்விவாதம் புலியின் போக்கை தாகுமுதலாளித்துவம் என ஒருபக்கத்தில் ஏற்கத்தான் செய்கின்றனர். ஆனால் அதை மறுத்துவிடவும் செய்கின்றனர். ஆனால் மொத்தத்தில் கட்டுரை முழுமையாக தாகுமுதலாளித்துவத்தின் பக்கத்தை தெளிவாக சுட்டிக்காட்டுகின்றது.

www.tamilarangam.net

## உயிர்ப்பில் வெளிவந்த 'தேசியசக்திகள் பற்றிய' என்ற கட்டுரை மீதான எமது விவாதம்

இக்கட்டுரை தேசிய முதலாளித்துவத்தை பிரதிபலிக்கவில்லை என்பதை சொல்லிவிடுவதால் அது பற்றிவிவாதிக்க முற்படவில்லை. இங்கு தமிழ் தாகுமுதலாளித்துவம், உதிரி முதலாளித்துவம் என்ற கருத்து தொடர்பாகவே இவ்விமர்சனம் அமைகின்றது.

பக்கம் 22இல் ''தமிழ் தேசியமானது சிங்களப்பேரினவாதத்துக்கு எதிரான போராட்டத்திலேயே உண்மையில் தோற்றம் பெற்றது. சுதந்திரத்துக்குப்பின் அதிகாரத்துக்குவந்த சிங்கள தாகுமுதலாளித்துவ வர்க்கம் இனவாதக்கண்ணோட்டத்தில் முன்னெடுத்த இனவொடுக்குமுறை''

இக்கருத்து சரியானதே. ஆனால் தாகுமுதலாளித்துவ வர்க்கம் சுதந்திரத்துக்குப்பின் திடீரென தோன்றவில்லை. காலனியாதிக்கம் இருந்தகாலத்திலேயே குறித்தவர்க்கம் சமூகத்தில் ஆதிக்கத்தில் இருந்திருக்கின்றது. அது காலனிவாதிகளுடன் போளவில் (சிலவேளை) எதிர்ப்பை தெரிவித்தாலும் அவர்களுடன் இணைந்தே சுரண்டியவர்கள் காலனியாதிக்கம் இருந்தகாலத்தில் முதலாளித்துவ சக்திகள் மட்டும் இருந்ததாக மட்டும் சுட்டிக்காட்டும் உயிர்ப்பு; பக்கம் 21இல் ''காலனிநாடுகளில் பொருளாதாரத்தை தனது நாட்டின் முதலாளித்துவ உற்பத்திமுறையுடன் பலவந்தமாக பிணைத்துவிடுகின்றனர். இப்படியாக ஆதிக்கநாடுகளின் நலங்களுக்கு கீழ்ப்பட்ட விதத்திலேயே உள்ளூர் முதலாளித்துவம் தோன்றவும் வளரவும், ஆதிக்க நாடுகள் அனுமதியளிக்கின்றன'' என்ற வாதம் முன்பு குறிப்பிட்ட ''சுதந்திரத்தின்பின் தாகுமுதலாளிகள் இருந்தது'' என்ற கருத்துக்கு முரணானது. வளரவும் தோன்றவும் முதலாளித்துவத்தையல்ல தாகுமுதலாளித்துவத்தைதான் அனுமதித்தது. பக்கம் 21இல் மீண்டும் ''சாராயகுத்தகைகளிலும், காரீயசுரங்கங்களிலும் மூலதனமிட்டவர்கள் பிரித்தானியருடன் மோதவில்லை, மாறாக தமிழ், முஸ்லீம் வர்த்தகருடனேயே மோதினார்கள்'' என்ற வாதத்தில் குறிப்பிட்ட முதலிட்டாளர்கள் தேசியமுதலாளிகள் என்பதைவிட பிரித்தானியா ஆட்சியாளர்களின் கையாட்களாகவே (தாகுமுதலாளிகள்) செயற்பட்டவர்கள், இதன் தொடர்ச்சியாகவே நீங்கள் கூறுவது போல் சுதந்திரம் பெற்றபின் ஆட்சிக்குவந்த தாகுமுதலாளிகள் இனவாதத்தை தொடர்ந்து பேணமுடிந்தது.

பக்கம் 24இல் ''எந்தவொரு தேசிய இனப்பிரச்சனைக்கும் முதலாளித்துவத்தினுள் முரணற்ற ஜனநாயத்தின் மூலம் தீர்வுகாணவாம்'' என்ற விவாதம் முதலாளித்துவத்துக்குள் தேசிய இனப்பிரச்சனைக்கு தீர்வுகாணமுடியும் எனச்சொல்லப்படுகின்றது. இங்கு பிரச்சனையாகவுள்ளது முரணான ஜனநாயகமும், முரணற்ற ஜனநாயகமுமே என உயிர்ப்பு சுட்டிக்காட்டுகின்றனர். முதலாளித்துவத்தில் ஜனநாயகம் எல்லாவர்க்கத்துக்குமானதல்ல, அது முதலாளிகளுக்கு மட்டுமே உரித்தான ஜனநாயகம். முதலாளித்துவத்துக்கு மட்டுமே உரித்தான ஜனநாயகம் தேசிய இனப்பிரச்சனைக்கு ஒருக்காலும் தீர்வுக்கு இட்டுச்செல்லாதது மட்டுமின்றி சுரணடலை இனப்பிரச்சனையுடன் இணைத்தே மேலும் கூடுதலாக சுரண்டும்.

www.tamilarangam.net

பக்கம் 24இல் ''ஏகாதிபத்தியத்தின் நலங்களுடனும் இந்திய மேலாதிக்க நலங்களுடனும் இது ஏற்கனவே முரண்பட்டுள்ளமை இதன் முற்போக்குபாத்திரத்தின் வெளிப்பாடாகும்''. இவ்விவாதத்தில் புலிகளின் பாத்திரத்தை இப்படி சொல்லுகின்றனர். இது சரியானது அல்ல. மோதல்கள் இரண்டுவிதமாக இருக்கமுடியும். உயிர்ப்பு குறிப்பிட்டது போல் நிகழும் அல்லது ஒரு ஏகாதிபத்தியத்துக்கு எதிராக இன்னுமொரு ஏகாதிபத்தியத்தின் வழிகாட்டலுடன் மோதல் நிகழும். இதில் புலிகளின் பாத்திரம் எந்தவகையானது எனின்; ஏகாதிபத்தியத்தின் தேவையை பூர்த்தி செய்யும் வகையிலானது.

பக்கம் 25இல் ''குறிப்பிட்ட வரலாற்று சக்தியின் உருவாக்கத்தின் பின்பே குறிப்பிட்ட கருத்துக்களும், தத்துவங்களும் உருவாகின்றன. மார்க்ஷியம் என்பது பாட்டாளிவர்க்கத்தின் தோற்றத்துக்கு முன்பே தோன்றியதல்ல என்பது தானே''. இக்கருத்தில் தூண்டிலின் கருத்து சரியானதென நாம் பார்க்கின்றோம். குறித்த சக்தி யதார்த்தத்தில் இருக்காமையிலேயே கருத்து உருவாக முடியும். உ+மாக கம்யூனிசம் உருவாகாமலேயே கம்யூனிஸ்ட் தொடர்பான கருத்துக்கள் வெளிவந்துள்ளன. பாட்டாளிவர்க்க கட்சி இல்லாமையிலேயே ஒரு நாட்டில் கட்சி குறித்து கருத்து இருக்க முடியும். முதலாளித்துவம் தோன்ற முன்பே (நிலப்பிரபுத்துவக்காலத்தில்) முதலாளித்துவக் கருத்துக்கள் இருந்தன. ஒருவன் முதலாளியாக இல்லாமலேயே அவன் முதலாளித்துவ சிந்தனையை கொண்டிருக்க முடியும். பாட்டாளியாக இல்லாமலேயே பாட்டாளிவர்க்க சிந்தனை இருக்க முடியும். குறித்த சக்தி இல்லாமலேயே கருத்து உருவாக முடியும்.

பக்கம் 28இல் ''ஜனநாயகம் இல்லாததால் தரகுமுதலாளித்துவத்தை பிரதிநிதித்துவப்படுத்துவதாக கூறுவதோ'' பக்கம் 29இல் ''சமர் நாட்டில் தேசிய முதலாளிகள் இல்லாமல் இருப்பதும், புலிகள் முதலாளித்துவ சித்தாந்தத்தை கொண்டிருப்பதால் அவர்கள் தரகு முதலாளிகளைப்பிரதிநிதித்துவப்படுத்துவதாகவும், புலிகளின் பாசிசமானது இதன் குறிப்பான குணம் குறி'' என உயிர்ப்பு குறிப்பிடுவது; தலைகீழான அகநிலைக்கண்ணோட்டமே. ஏனெனில் சமர் புலிகள் மீதான ஆய்வின் மீது பல ஆதாரங்களை நீங்கள் குறிப்பிட்ட விடயத்துக்கு அப்பால் முன்வைத்துள்ளது. புலிகளின் இன்றைய சர்வதேச உறவுகள், ஏகாதிபத்தியத்திடம் பயிற்சிகள் பெற்றதும், முதலாளித்துவத்துக்குட்பட்ட அனைத்துப்பிரிவு மக்கள் மீதும் நடத்தும் சுரண்டல், இலங்கை, இந்தியா அரசுக்களுடன் நடத்திய பேரங்கள் (இவை தமிழ் மக்களின் பிரச்சனைகள் மீதல்ல).... இப்படி பல.

பக்கம் 31இல் ''எமது போராட்டத்தில் தோன்றிய பல்வேறு அரசியல் போக்குக்களையும் இப்போது இனங்காண முயல்வோம். தமிழ் தேசத்தின் ஆரம்பமான பூர்சுவா ஜனநாயக போராட்டவடிவங்களாக இருந்தன. பாராளுமனற வாதம், அகிம்சைப்போராட்டங்கள், போம் பேசுதல், பேச்சுவார்த்தைகள், அரசுடன் இணக்கம் காணுதல், அரசு உறுதிமொழிகளை கைவிடுதல்'' எனற இவ்விவாதத்தில் போராட்டவடிவங்கள் எனக்குறிப்பிட்ட சம்பவங்கள் பூர்சுவாவுக்கு

www.tamilarangam.net

மட்டுமானதல்ல. இதிலிருந்து தவறான முடிவுக்கு வந்தடைகின்றனர். குறித்த போராட்ட வடிவங்களை தாகுமுதலாளிகள், நிலப்பிரபுக்கள் கூட முன்னெடுக்க முடியும். ஆரம்ப போராட்டங்கள் தாகு முதலாளித்துவக்கோரிக்கையாகவே இருந்தது. மேற்குறிப்பிட்ட போராட்டவடிவங்களை தமிழ் தாகுமுதலாளித்துவ வர்க்கம், சிங்கள தாகுமுதலாளித்துவ வர்க்கத்துடன் மேற்கூறியவழிகளில் போராடினார்கள். இதை நீங்கள் பக்கம் 32இல் ஏற்றுக்கொள்ளுகின்றீர்கள். ''ஆரம்பகால தேசியமானது தமிழ் தாகுமுதலாளித்துவ வர்க்கங்களின் நலங்களையே பிரதிநிதித்துவம் செய்கின்றது எனலாம். அரசுடன் சமரசம் செய்தல், சலுகை பெறுதல் போன்றவை ஏகாதிபத்திய சார்பு நிலைகளே''. பக்கம் 33இல் ''தமிழ் சமூகத்தில் பலம் பெற்றுநிற்கும் வர்க்கங்கள் இவர்களை தனது சித்தாந்த செல்வாக்கிற்குள் கொண்டுவருவது கஸ்டமானதல்ல. தனித்துவமான சித்தாந்தம் என்றவொன்று புலிகளிடம் இல்லாத போது இது சிரமமானதல்ல'' இக்கருத்து புலிகளின் வர்க்க அடிப்படையை நிராகரிப்பதாகும். பின்பு பக்கம் 34இல் புலிகளின் சித்தாந்தம் தொடர்பாக ''இவர்களின் வர்க்க மூலங்களின் ஒன்றான உதிரி முதலாளித்துவத்தின் தன்மைகளென்று இன்னுமொரு விளக்கமாகும்'' புலிகளுக்கு ஏதோவொரு சித்தாந்தம் இருக்கின்றது. அது இல்லையென வாதிட முற்படுபவர்கள் மார்க்ஷிய அடிப்படையையே நிராகரிப்பதற்கு இட்டுச்செல்வார்கள்.

பக்கம் 29இல் ''சில அமைப்புக்கள் வல்வெட்டித்துறையுடன் கொண்டுள்ள உறவுகளையும் கருத்தில் கொண்டால் கள்ளக்கடத்தலில் ஈடுபடும் உதிரிமுதலாளிகளின் பிரிவு ஒன்று சில அமைப்புக்களுடன் கொண்டுள்ள தொடர்பு''. பக்கம் 31இல் ''தமிழ் பிரதேசத்தில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் கள்ளக்கடத்தல் குறிப்பிட்ட தொழிலாகவே நடைபெற்றுவந்தது. கடந்த காலத்தில் தமிழ்பிரதேசத்தில் பொருளாதார நடவடிக்கையிலிருந்து இதன் பங்கு என்ன? இந்த உதிரிமுதலாளிகள் சமூகத்தில் வைக்கும் இடமென்ன?'' பக்கம் 34இல் ''சமூக நலங்களின் அக்கறையின்மை தாகுமுதலாளிகளுடன் கூட இணக்கம் காணமுடியாத தன்மை, போதைப்பொருட்கள் மற்றும் பலவித சமூகவிரோத நடவடிக்கைகளுடனான தொடர்பு போன்ற அம்சங்கள் இவர்களது வர்க்கமூலங்களின் ஒன்றான, உதிரிமுதலாளிவர்க்கத்தின் தன்மைக்கு இன்னொரு விளக்கமாகும்''. மேற்குறிப்பிட்ட விடயங்களிலிருந்து உயிர்ப்பு உதிரிமுதலாளித்துவம் எனற வர்க்கமூலத்தின் பிரதிநிதிகள் புலிகள் என கூறமுயலுகின்றனர். தாகுமுதலாளித்துவத்தின் பிரதிநிகள் புலிகள் இல்லையென சொல்லி முன்வைக்கும் இக்கருத்துக்கு மாறாகவே. பல தடவை புலிகள் தாகுமுதலாளிகள் என சொல்லியும் விடுகின்றார்கள். பக்கம் 34இல் ''குட்டிமுதலாளித்துவ அமைப்பாக தோன்றிய புலிகள் வளர்ந்துவிட்ட நிலையில் தமது சமூக அந்தஸ்து, அதிகாரம் காரணமாக பெருமளவு மூலதனத்தை திரட்டிக்கொண்டு, தாகுமுதலாளிவர்க்கமாக வளர்ந்துவரும் ஒரு வளர்ச்சிக்கட்டத்தில் இருக்கின்றார்கள்''. பக்கம் 32இல் ''தமிழ் சமூகத்தில் பலம்பெற்று நிற்கும் வர்க்கங்கள் இவர்களை (புலிகளை) தமது சித்தாந்த செல்வாக்கிற்குள் கொண்டுவருவது கஸ்டமானது அல்ல''. பக்கம் 33இல் ''புலிகள் ஏனைய அம்சங்கள் சுயசார்பு பொருளாதாரம், ஏகாதிபத்திய எதிர்ப்பு, பூர்சுவா ஜனநாயகம் போன்றவற்றில் தேசிய

www.tamilarangam.net

முதலாளித்துவத்தின் நலங்களுக்கும் பண்புகளுக்கும் எதிராகவே உள்ளார்கள்''. பக்கம் 33இல் ''புலிகளுக்கு ஆதாரவாக வெளிநாடுகளில் செயற்படும் சிலசக்திகள் திட்டவட்டமாக அமெரிக்கா ஏகாதிபத்திய சார்புடையவர்கள் என்பது கவனிக்கத்தக்கது. புலிகள் பலவிதத்திலும் முன்னெடுக்கும் தம்து அரசியல் மூலம் வெளிப்படுத்தும் நலங்கள் அந்தவர்க்கத்தினுடையவை''. பக்கம் 33இல் ''திட்டவட்டமான, உறுதியான ஏகாதிபத்திய எதிர்ப்பு கிடையாது. (இதில் நாம் உறுதியான ஏகாதிபத்திய சார்புண்டு எனக்கருதுகின்றோம். இதில் ஏகாதிபத்தியத்துக்கு இடையிலான முரண்பாடுகளையும், அதன் ஏஜண்டுக்கள் ஒன்றாக இருக்கமுடியாததையும் உயிர்ப்பு பார்க்க தவறுகின்றது).

தமதுகுழுநலங்களுக்கு ஏற்ப இந்திய அரசையோ, இலங்கையரசையோ இஸ்ரேல் போன்ற ஏகாதிபத்தியத்தின் எடுபிடிகளையே காலத்துக்கு காலம் சார்ந்து நின்று'' பக்கம் 32இல் ''சுயவுற்பத்தி போன்றவற்றில் எந்த அக்கறையும் காட்டாத இவர்கள் இறக்குமதியாகும் அல்லது தென்னிலங்கையிலிருந்து கொண்டுவரும் பொருட்களுக்கு வரி விதிப்பதையே'' பக்கம் 31இல் ''தமக்கேன (வறியவிவசாயிகள், வறிய மீனவர்கள்) ஒருவர்க்க ஸ்தாபனத்தையோ, தனியான அரசியல் கோரிக்கையோ முன்னெடுக்காது தாகுமுதலாளித்துவ சக்திகளையே பலப்படுத்தி வருகின்றனர்''. பக்கம் 30இல் ''பணக்கார விவசாயிகள், பணக்கார மீனவர்கள் (மீனவ முதலாளிகள், சம்மாட்டிகள்) போன்றோரும் நவீன உற்பத்தி முறைகள் காரணமாக ஏகாதிபத்திய பொருளாதார வலைப்பின்னலுடன் நெருக்கமாக பிணைந்துள்ளார்கள். இவர்கள் தரகுமுதலாளித்துவ வர்க்கத்துக்கு நெருக்கமானவர்கள்''. பக்கம் 30இல் ''சந்தையில் தமக்குரிய பங்கை சிங்கள முதலாளித்துவ வர்க்கமானது கொடுக்கமறுத்தனர். தமிழ்தரகுமுதலாளித்துவ வர்க்கமானது தேசியத்தை முன்னெடுக்க நேர்ந்துள்ளது''. பக்கம் 30இல் ''இன்னும் கூட தனது பிழைப்புக்காக (தரகுமுதலாளிகள்) பலதொடர்புகளை அரசுடன் கொண்டுள்ளது. அரசுடன் சமாசம் செய்துவைக்க முயலும் தொடர்பாளர்களாக செயற்படும் கொழும்பிலுள்ள பிரமுகர்கள் குறிப்பாக இந்தவர்க்கத்தை சேர்ந்தவர்கள். சிங்கள அரசை இவர்கள் எதிர்த்தாலும், ஏகாதிபத்தியங்களையோ, அதன் சுரண்டல்களையோ எதிர்க்க மாட்டார்கள்''. பக்கம் 28இல் ''தரகுமுதலாளித்துவ வர்க்கம் ஏகாதிபத்திய (புலிகளை ஏகாதிபத்திய சார்பாளர்களென உயிர்ப்பு ஏற்றுக்கொள்ளுகின்றது) சார்பாகவே முன்னெடுக்கின்றது''. பக்கம் 28இல் ''பல்வேறு ஏகாதிபத்தியங்கள் முட்டிமோதிக்கொள்ளும் நிலையில் காலனிநாட்டிலுள்ள ஒரு ஏகாதிபத்தியத்தை சார்ந்த; (இது காலனி இல்லாத இலங்கை போன்ற நாடுகளுக்கும்) தரகுமுதலாளித்துவ வர்க்கமானது; இன்னொரு ஏகாதிபத்தியத்தின் மேலாதிக்கத்துக்கு எதிரான போராட்டத்தில் தேசியத்தை சார்ந்து நிற்கவோ அல்லது சிலவேளைகளில் தேசிய இயக்கத்துக்கு தலைமைதாங்கவே செய்யலாம்''.

மேற்குறிப்பிட்டவாதங்கள் உயிர்ப்பு சஞ்சிகையில் இருந்தே எடுத்து எழுதப்பட்டுள்ளது. இதில் ( ) இக்குறியீட்டில் உள்ளவை நாம் உபயோகித்தவை. உதிரிமுதலாளிகள் என்ற கருத்துக்கு எதிரான தரகுமுதலாளித்துவமே என உயிர்ப்பு எழுதிய

www.tamilarangam.net

இக்கருத்துக்களையே, நாம் இனி தரகுமுதலாளித்துவ பிரதிநிதிகள் என உயிர்ப்புக்கு பதில ளிக்கும் வகையில் முன்வைக்கின்றோம். இருந்தும் தொடர்ந்தும் விவாதிக்க முயலுகின்றோம்.

உதிரிமுதலாளித்துவம் என்ற இப்பதம் சரியானதா? உதிரிப்பாட்டாளிகள் என்பது ஒரு நிறுவனமாகாத வகையில் உதிரியாக ஆங்காங்கே சிதறியருப்போரை குறிப்பதாகும். இவர்கள் லும்பன் வாழ்வைக்கொண்டிருப்பார்கள். போராட்டத்தில் பாட்டாளிகளுக்கு சார்பாகவும், எதிர்ப்புரட்சிக்காலத்தில் எதிர்ப்புரட்சியாளர்களாகவும் இருப்பார்கள். ஆனால் உதிரிமுதலாளிகள் ஒரு வர்க்கமாக இருக்கமுடியாது. தொழில் ரீதியாக பல்வேறு உற்பத்திகளைக்கொண்ட முதலாளிகள் எப்பொழுதும் உதிரியாக இருக்கும் இவர்கள், எப்பொழுதும் மையப்பட்ட அரசை சார்ந்திருக்கும் இவர்கள் முதலாளிகளே. இதில் உதிரிமுதலாளித்துவம், முதலாளித்துவத்துக்கு இடையில் இவ்வேறுபாடும் கிடையாது.

இனி நீங்கள் குறிப்பிடுவது போல் உதிரிமுதலாளிகள் என எடுப்போமாயின், கடத்தல் காரர்களை குறித்தவர்க்கத்தின் பிரதிநிதியாக காட்டமுற்பட்டுள்ளீர்கள். இக் கடத்தல்காரர்கள் எப்பொழுதும் ஏகாதிபத்தியத்தின் பொருட்களையே கடத்தியவர்கள். இவர்கள் சட்டபூர்வமாக சிங்கள தாகு முதலாளித்துவத்துடன் போட்டிபோட்டு வெற்றிபெற முடியாமையினால் அதை சட்டவிரோதமாகவே கடத்திவருகின்றனர். அந்நியப்பொருட்களின் சந்தையை உருவாக்கவும், ஊக்குவிக்கும் தன்மை தாகுமுதலாளித்துவத்தின் செயற்பாடே. இன்னொரு பக்கத்தில் உதிரிமுதலாளிகளின் வர்க்கப்பிரதிநிதிகள் புலிகளெனின், உதிரிமுதலாளிகளின் (முதலாளிகளின்) வளர்ச்சிக்கு புலிகள் தடைவிதிக்கின்றனர், கடத்தல் பொருட்களில்வரும் இலாபத்தில் அரைவாசியைக்கோருகின்றனர். எனவே புலிகள் உதிரிமுதலாளித்துவத்துக்கும் எதிரானவர்கள். நீங்கள் குறிப்பிட்டது போல் பணக்கார விவாசாயிகள், பணக்கார மீனவர்கள் (மீனவமுதலாளிகள் சம்மாட்டிகள்) போன்றோரும் நவீன உற்பத்திமுறைகள் காரணமாக ஏகாதிபத்திய பொருளாதார வலைப்பின்னலுடன் நெருக்கமாக பிணைந்துள்ளனர். இவர்கள் தாகுமுதலாளிவர்க்கத்துடனும் நெருக்கமாக பிணைந்துள்ளனர். எனவே புலிகள் தாகுமுதலாளித்துவத்தின் சிறப்பான பிரதிநிதிகளாக உள்ளனர்.

நாம் இவ்விவாதத்தில் தொடர்ச்சியாக புலிகளின் வர்க்கமூலத்தை மேல்வைத்த தொகுப்புக்களில் இருந்து தாகு முதலாளித்துவத்தை சார்ந்ததே என்பதை தெளிவுபடுத்துகின்றது. புலிகளின் கோரிக்கைகளை பார்ப்பதைவிட, அக்கோரிக்கைகளின் பின் மறைந்திருக்கும் வர்க்கநலன் என்ன என்பதை ஆராயவேண்டும். தமிழ் தாகுமுதலாளித்துவம், சிங்கள தாகுமுதலாளித்துவ சக்திகளிடமிருந்து சந்தைக்காக போட்டிபோட்டு இன்று தேசவிடுதலைப்போராட்டத்தை (எல்லாவர்க்கங்களும் போராடுவது போல) தனது தலைமையில் முன்னெடுத்துள்ளது. மற்றும் ஏகாதிபத்தியத்துக்கிடையிலான முரண்பாடுகள், ஒரு நாட்டில் இருக்கக்கூடிய தாகுமுதலாளித்துவ பிரதிநிதிகள், போராட்டத்தை தலைமைதாங்குவதுடன் முரண்பட்ட ஏகாதிபத்தியத்துடன் மோதவும் முடியும். புலிகள் இன்று வறியகூலி

www.tamilarangam.net

விவசாயிகள் முதல், கடத்தல்கார பெரும் முதலாளிகள் வரை சுரண்டலை நடத்துவதால், போராட்டத்துக்கு ஆதரவான சக்திகளைவிட போராட்டத்துக்கு எதிரான சக்திகளையே சார்ந்தே போராடமுற்பட்டுள்ளனர். புலிகளுக்கு ஏகாதிபத்திய எதிர்ப்பு கிடையாது என்பதை தூண்டில், உயிர்ப்பு ஏற்றுக்கொள்வதால் புலிகள் ஏகாதிபத்திய சார்பாளர்களாகவே உள்ளனர். இவர்கள் ஏகாதிபத்தியத்திடம் பெற்ற உதவி (ஏகாதிபத்தியங்கள் முட்டாள்கள் அல்ல) இவர்கள் ஏகாதிபத்தியம் சார்ந்தே உள்ளதை தெளிவாக்குகின்றது. இவர்களின் பகிரங்க அரசியல் கோரிக்கைகள் எப்பொழுதும் இவர்களையே பாதித்தது கிடையாது. இவர்களின் இரகசிய அரசியல் கோரிக்கைகளை (தரகுசார்ந்த நலங்களை) இரகசியமாக பெற்றுக்கொள்ளமுனைந்ததை கொண்டு, இவர்களின் வர்க்கநலன் தரகுமுதலாளித்துவம் சார்ந்ததை, புலிகள் அடிக்கடி நடத்தும் போரங்கள், அதில் ஏற்படும் தோல்வியும் இன்று இருக்கும் அரசு அமைப்புக்குள் (தரகுமுதலாளித்துவம், நிலப்பிரபுத்துவ அரசுக்குள்) சுரண்டல் தொடர்பான பங்குகளுக்காகவே. இது தரகு முதலாளித்துவத்தின் வெளிப்பாடே. புலிகளின் வெளிநாட்டுத் தொடர்பாளர்கள் நேரடியாக ஏகாதிபத்தியத்தை சார்ந்தவர்களே. இதுவும் தரகுமுதலாளித்துவத்தை பிரதிபலிக்கின்றது. இஸ்ரேல், இந்தியா... பெற்றபயிற்சிகள், ஏகாதிபத்தியங்களிடம் பெற்ற இராணுவ உதவிகள் தரகுமுதலாளித்துவத்தின் பிரதிநிதிகளுக்கானது. சர்வதேச போதைவஸ்து தொடர்பு (உதிரிமுதலாளித்துவத்தை வளர்ப்பதல்ல) இது தரகுமுதலாளித்துவமே. (இதை சில மூன்றாம் உலகநாடுகளின் அரசுக்களே செய்கின்றன அல்லது மறைமுகமாக அங்கீகரிக்கின்றன) தேசியவிடுதலையை முன்னெடுக்கின்ற முதலாளிகள் (உதிரிமுதலாளிகள்) கூட ஓரளவு ஜனநாயகத்தையும், மற்றைய சிறுதேசிய இனத்துடன் இணக்கப்போக்கை கைக்கொள்ளும். ஆனால் புலிகள் முஸ்லீம் தேசிய இனத்தை அழிக்க முற்பட்டுள்ளனர். சொந்தமக்கள்மீது கட்டவிழ்த்துவிடும் பாசிசம் தரகுமுதலாழித்துவத்தின் செயற்பாடே. தமிழ் ஈழத்தில் தளப்பிரதேசத்தைக்கொண்டிருக்கும் புலிகள் தேசிய பொருளாதாரத்தின் மீது அக்கறையோ, தேசிய உற்பத்தியை ஊக்குவிக்கவின்றி; அன்னியப்பொருட்களைச்சார்ந்து செயற்படும் இப்போக்கு தரகுமுதலாளித்துவ செயற்பாடே. புலிகள் போராட்டத்துக்கு பாவிக்கும் ஆயுதங்களில் உற்பத்திசெய்யக்கூடிய பகுதிகளைக்கூட சொந்தத்தில் செய்யாமல் வெளிநாடுகளில் இருந்து (இன்று ஏற்பட்ட நெருக்கடியினால் சிலவற்றை செய்கின்றனர்) பெற்றுக்கொள்ளும் இப்போக்கு தரகுமுதலாளித்துவ செயற்பாடே. இவைகள் புலிகள் தரகு முதலாளித்துவத்தின் சிறப்பான பிரதிநிதிகளாக செயற்படுவதைக் காட்டுகின்றது. **இவ்விமர்சனம் தொடர்பாக வாசகர்களிடமிருந்து விமர்சனத்தைக்கோருகின்றோம்.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


## புதிய சுவடுகள்

சேதி கேட்டுப்பயந்தேன்
முதுகிலே குத்துகின்ற கோடைச்சூரியனும் தாண்டி
குளிர் என்னைப்பிடித்துக்கொண்டது,
வாய்க்கால் கரையெங்கும் தாமரை தலைசாய்க்கும்
அனுராதபுரத்து நதிகள் குழந்தைகளின் இரத்தத்தில்
சிவப்பாய் பாய்ந்தன...

தென்திசைச்சோதரனே
இப்படித்தான் எனது மண்ணும்
கரும்பச்சைச்சீருடைகள் தாண்டவமாடிட
அடிக்கடி சிவந்து போகின்றது
சிந்திய கண்ணீரும் பொங்கிய குருதியும்
இருவருக்குமொன்றுதான்
உன்னையும் என்னையும்
சண்டைக்கோழிகளாய் களத்திலே இறக்கியவர்கள்
காலிமுகத்திடலிலே கைகுலுக்குகின்றார்கள்
இனியும் இது தொடருவதோ...?

எழுந்துவா
இருவருமாய் ஒரு விதி செய்வோம்.

— *சித்தார்த்தன்* —



www.tamilarangam.net

## என்.எல்.எப்.டியின் வரலாறு (தொடர்ச்சி...)

1983இல் NLFT வீடு வீடாக நிதி சேகரிப்பில் ஈடுபட்ட பொழுது, ஒரு நாள் மாத்தையாவின் தலைமையில் 9பேர் திடீரெனக்கட்டுவனில் NLFT உறுப்பினர்களை வழிமறித்தனர். கட்டுவனில் Ticket விற்பனையை முன்கூட்டியே மகேஸ்வரன் LTTEக்கு கூறியது பின் தெரியவந்தது (மகேஸ்வரன் LTTEயின் உளவாளியாக NLFTயில் இருந்தவர். மாத்தையா பல விடயங்களை கதைத்தபின், எல்லா இயக்கங்களும் அழிந்தபின், NLFTயும், LTTEயும் மிஞ்சுமென கூறியதுடன் நாம் அப்போது சந்திப்போமென கூறியும் சென்றார்.

1983க்கு முன் ஒருமுறை விசு, நாபாவுடன் இணைந்து ஆப்கானிஸ்தான் எல்லை வரை சென்றுவந்தனர். ஆயுதப்போராட்டம் தொடர்பான அவர்களின் கருத்துக்கள், ஆயுதங்களை நீண்டகாலத்தில் வாங்கும் நோக்கத்தில் சென்றிருந்தனர். 1983க்கு முன் NLFT உறுப்பினர்களுக்கு, ஆதரவாளர்க்கும் கராத்தே பயிற்சிகள் நடத்தப்பட்டது. 1983க்கு முன் மன்னார், முருங்கனில் பல தொடர்புகள் இருந்தது. அங்கிருந்து மன்னாரின் பல பாகங்களில் புதியதொடர்புகள் பெறப்பட்டது. இதைவிட வவுனியாவில் பாவற்குளத்திலும் பல தொடர்புகளை அமைப்பு கொண்டிருந்தது. இதிலிருந்தவர்கள் NLFT தொடர்பு அறுந்தபின் புலேந்திரனை சுட்டுக்கொன்றனர். அத்துடன் வவுனியாவிலிருந்த பல சொட்கன்களையும் கைப்பற்றி வைத்திருந்தனர். இதைவிட மட்டக்களப்பில் கழுகுபடையை பின்னால் அமைத்தவர்களுடன் விசு ஆரம்பத்தில் தொடர்பு கொண்டதுடன், அவர்கள் NLFTஇல் வேலை செய்யும் நிலையில் இருந்தனர்.

1982 மே மாதம் சந்ததியார் தலைமையில் அளவெட்டியில் வைத்து இறைகுமாரன், உமைகுமாரன் சுட்டுக்கொல்லப்பட்டனர். இக்கொலையை சந்ததியாரே முன்னின்று செய்தார். சந்ததியார் பற்றி மாயை உடையவர்கள்; இறைகுமாரன், உமைகுமாரன் கொலை தொடர்பாக மௌனம் சாதிப்பை இன்று பார்க்கலாம். இக்கொலையை கண்டித்து NLFT ஒரு துண்டுப்பிரசுரத்தை வெளியிட்டது. சுந்தரம் படுகொலைக்கு NLFT துண்டுப்பிரசுரம், சுவரொட்டிகளை ஒட்டி கடும் கண்டனத்தை செய்தது. அந்தளவுக்கு இக்கொலையையும் கண்டிக்க NLFT தவறியிருந்தது. தற்செயலாக நிகழ்ந்தது என்பதைவிட, ஒரு LTTE யை மோசமானவொர் இயக்கமாக PLOTயை விட பார்த்ததும், PLOT பற்றி ஒரு மயக்கமுமே. இது தொடர்பாக 1984 இல் LTTE சங்கர், இந்தியாவில் சிறியுடன் Information centerஇல் கடுமையாக வாக்குவாதப்பட்டார்.

1983 இல் ஏற்பட்ட இனக்கலவரத்தை தொடர்ந்து நிலமைகளை மதிப்பிடவும், ஒரு அரசியல் திட்டத்தை வரையவுமென ஒரு மகாநாடு கூட்டுவது என முடிவு எடுக்கப்பட்டது. இம்மகாநாடுக்கு முன்னைய ஜனநாயகமுன்னணியில் இருந்த மத்தியகுழுவுக்கு எந்த சம்பந்தமுமில்லை. பிரதேசக்கமிட்டியாலேயே கூட்டப்பட்டது. மகாநாட்டுக்கான நாட்கள் குறிபிடப்பட்டிருந்த காலத்தில் நிமால்

(பிரதேசக்கமிட்டி உறுப்பினர்) இராணுவத்தினால் கைது செய்யப்பட்டார். இதைத் தொடர்ந்து அம்மாள் விடுதலை செய்யப்பட்டார். மகாநாட்டில் பங்குபற்ற நிமால், மகேஸ்வரன் தெரிவு செய்யப்பட்டனர். ஆனால் இவர்கள் இருவரின் தெரிவுக்கு சிறீ எதிர்ப்பு தெரிவித்தார். மகேஸ்வரன் தொடர்பாகவிருந்த சந்தேகமும், நிமாலின் வாய்ச்சவால்களும், மகாநாட்டுக்கு தகுதியின்மை தொடர்பாக எழுந்த கேள்விகளும், இவர்கள் இருவரும் பங்குபற்றும் உரிமை நிறுத்தப்பட்டது. நிமாலின் நிறுத்தல் தொடர்பாக முரண்பட்ட கருத்துக்கள் அமைப்புக்குளிருந்தது. இருவர் அவர்களுடன் கதைத்து பாதுகாப்பு கருதி (அதாவது கைதுசெய்து 4,5 நாட்கள்)என்ற காரணத்தை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கூறி நிறுத்தப்பட்டனர். மொத்தமாக மகாநாட்டுக்கு 26 பேர் பங்கு கொண்டனர். மகாநாடு இருநாட்கள் தொடர்ச்சியாக நடைபெற்றது. மகாநாட்டில் பங்கு கொண்டோரில் இருவர் மட்டுமே தொடர்ச்சியாக கதைத்தனர். ராகவன், விசு ஆகியோரின் குரல்களைத்தவிர மற்றயவர்கள் மௌனமாகவிருந்தனர். இடைக்கிடை ஒரிருவர் கதைத்தனர். மகாநாட்டில் பங்குகொண்டோர் பலத்த நம்பிக்கையையும் பெற்றனர். விசு, ராகவனின் உணர்ச்சிவசப்பட்ட மார்க்சிசசொற்தொடர்கள் புதிதாக சந்தித்த எம் ஒவ்வொர்வரையும் உற்சாகமான முன்னணி செயல்வீரராக எண்ண வைத்தது. இவர்கள் ஒவ்வொருபகுதியிலும் வேலை செய்த, பல உற்சாகமானவர்களை விட, முன்னேறியவர்கள் என்ற பலத்த நம்பிக்கையை எமக்கு கொடுத்தது.

மகாநாட்டில் ஒரு மத்தியகுழு தெரிவு செய்யப்பட்டது. அதில் 7பேர் அங்கம்வகித்தனர். விசு, குமரன் ஜோச், அன்ரன், பிரபா, ரமணி, சிறீ ஆகியோரே. இதில் இராகவன் மத்தியகுழுவுக்கு தெரிவுசெய்யப்பட்ட போது தான் மத்தியகுழுவில் இருக்க விரும்பவில்லையென கூறி விலகிக்கொண்டார். விசு இது தொடர்பாக பலத்த விவாதத்தில் ஈடுபட்டார். அரசியலில் வளர்ந்தவர் என எண்ணப்பட்ட ஒருவர், மகாநாட்டில் கூடுதலாக கதைத்த ஒருவர், மத்தியகுழுவில் இருக்க மறுத்தது பலத்த ஏமாற்றத்தை கொடுத்தது. இதற்குப் பின்னால் இராகவன் தொடர்பான நடவடிக்கையிலிருந்து அவரின் மறுப்புக்கு காரணங்களை அறியமுடியும். விசு நாட்டில் நிற்கமாட்டார், எனவே தான் இயக்கத்தை பொறுப்பேற்கவரும் என்ற முக்கிய காரணமும், தலைமைதாங்க அஞ்சியும், யாரவது தலைமைதாங்க தான் ஒரு ஆலோசகராக (இவர் பலரை இப்படி நக்கல் அடித்தவர்) இருக்க எண்ணினார். அந்த நிலையில் இயக்கத்தில் அரசியல்வறுமை இருந்தது என்பதும் உண்மையே.

இம்மகாநாட்டில் இராணுவம் கட்டுவது தொடர்பாக ஒரு விவாதம் நடந்தது. அதற்கொரு இராணுவ மையக்குழு அமைக்க வேண்டுமென கூறப்பட்டது. அதற்கான இராணுவமையக்குழுவை இம்மகாநாட்டில் தெரிவு செய்ய முடியாது என நிராகரித்ததுடன், அதை மத்தியகுழுவே தெரிவு செய்யவேண்டும் எனவும் கூறப்பட்டது. மகாநாடு முடிந்தபின் கூட்டப்பட்ட மத்தியகுழு கூட்டத்தில், ஏழு பேரையும் விட இராகவனும் கலந்து கொண்டார். மத்தியகுழுவுக்கு அப்பால் ஒரு நபர் கலந்து கொண்டதோடு மட்டுமின்றி மத்தியகுழுவின் மீது ஆதிக்கமும் செலுத்தப்பட்டது. அம்மத்தியகுழுவில் விசு, இராகவனின் முடிவுகளை வைத்து முழுஅமைப்பையும் ஏற்கவைக்கப்பட்டது. அங்கு இராணுவமையக்குழு அமைக்கப் பட்டது. அதில் 5 பேர் அங்கம் வகித்தனர். இராகவன், அன்ரன், மோகன் (கட்டுரையாளர் கொடுத்த பெயர்), சுகுமார் (கட்டுரையாளர் கொடுத்த பெயர்), ரூபன் (கட்டுரையாளர் கொடுத்த பெயர்) இவர்கள் இராணுவ நடவடிக்கைகளை செய்யும் உரிமையைப்பெற்றனர். இவர்கள் மத்தியகுழுவுக்கு பதிலளிக்க தேவையில்லை. அதற்குள் இருந்த மத்தியகுழு உறுப்பினரான அன்ரன் மட்டுமே பதிலளிக்க முடியும். எமக்கு ஏதாவது தேவைப்படின்; அன்ரன் ஊடாகவே அறிய முடியும். இவ் இராணுவக்குழுவில் தெரிவு செய்யப்பட்டோர், 83க்கு முந்திய காலத்திலோ அல்லது அதற்கு பிந்தியகாலத்திலோ எந்த அரசியல் நடவடிக்கை களிலும் ஈடுபடவில்லை. இவர்கள் இராணுவத்துறையை வலியுறுத்தியவர்கள் அன்ரன், இராகன் சொல்கேட்பவர்கள் என்ற ஒருவரையறை மட்டுமே இவர்கள் இராணுவ மையக்குழுவுக்கு தெரிவு செய்யப்பட்ட அடிப்படையாகும். இவை தொடர்பாக பின்னால் விரிவாக ஆராய்வோம்.

கூட்டப்பட்ட மகாநாட்டில் அரசியல் அறிக்கை,

www.tamilarangam.net

திட்டம் என்பன உருவாக்கப்பட்டது. தமிழீழத்துக்கென போராடுவது எனவும், சோசலிச அமைப்பை உருவாக்குவது எனவும் திட்டம் வரையறுத்தது. தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணியின் முந்தியகாலம் கடுமையாக விமர்சிக்கப்பட்டது. இவ் விமர்சனம் தொடர்பாக ஒரு சிலர் சம்பந்தப்பட்ட நபர்கள் இல்லாமல் அவர்களை விமர்சிப்பது பிழையென சுட்டிக்காட்டப்பட்டதை தொடர்ந்து, பொதுப்படையாக விமர்சனம் முன்வைக்கப்பட்டது. இதைவிட LTTE, PLOT, TELO, EROS, EPRLF என்பன தொடர்பாகவும் விமர்சனம் வைக்கப்பட்டது. இதைவிட தமிழ் காங்கிரஸ், TULF, UNP, SLFP, இடதுசாரிக்கட்சிகள் தொடர்பாகவும் விமர்சனம் முன்வைக்கப்பட்டது. NLFT ஆயுதப்போராட்டத்தை முன்னெடுப்பது எனவும், இதற்கு முன்னோடியாக பணத்தேவையை தீர்க்க ஒருசிலகொள்ளைகளை செய்யவும் முடிவு எடுக்கப்பட்டது. இதில் வங்கி, கூட்டுறவுச்சங்கம், சம்பளப்பணம் என்பன கொள்ளையடிக்க முடியும் என கூறப்பட்டது. ஆயுதம் இன்மை தொடர்பாக, ஆயுதம் சேகரிக்க எல்லாமுயற்சியும் எடுக்க மகாநாடு கோரியது. அங்கத்தவர் விதி, வேலைத்திட்டம் என்பன வரையறுக்கபட்டது. அவைகளில் சிலவற்றை முன்வைக்க முயலுகின்றோம்.

(1) தொழிலாளர்கள், விவசாயிகள் தலைமைசக்திகள்.
(2) அமெரிக்காவை ஏகாதிபத்தியமாகவும், சோவியத்தை சமூகஏகாதிபத்தியமாகவும் வரையறுக்கப்பட்டது.
(3) இலங்கை அரைக்காலனி, அரைநிலபிரபுத்துவ நாடு.
(4) எமது எதிரி தரகுமுதலாளித்துவமும், நிலபிரபுத்துவமும்.
(5) எமது புரட்சி ஒரு புதியஜனநாயகப்புரட்சிக்கூடாக சோசலிச அமைப்பை உருவாக்கல்.
(6) எமது இலக்கு தமிழீழ சோசலிசக்குடியரசை நிறுவுதல்.
(7) TULF ஒரு தரகுமுதலாளித்துவ பிரதிநிதி.
(8) LTTE, EPRLF, EROS, PLOT, TELO என்பன குட்டிபூர்சுவா இயக்கங்கள்.
(9) இலங்கை கம்யூனிசக்கட்சி, சமசமாஜக்கட்சி, SLFP..... இவைகள் தொடர்பான வரையறைகளை (திட்டமின்மையால்) சுட்டிக்காட்டமுடியவில்லை.
(10) UNP ஒரு நிலப்பிரபுத்துவ, தரகுமுதலாளித்துவ பிரதிநிதி.
(11) தொழிலாளர் காங்கிரஸ் (தொண்டமான்) ஒரு தரகுமுதலாளித்துவ கட்சி.
(12) JVP ஒரு குட்டிபூர்சுவா இயக்கம்.
(13) இந்தியா இந்துசமுத்திரத்தின் பிராந்தியவல்லரசு. இந்தியா சோவியத்தின் ஏஜன்டாக இந்துசமுத்திரத்தில் செயற்படுகின்றது. இந்தியா எமது நாட்டில் தலையிட்டு, தனது கைக்குள் போராட்டத்தை இட்டுச்சென்று போராட்டத்தை அழிக்கும். இந்தியாவுக்கு எதிராக ஆரம்பம் முதலே போராடவேண்டும்.
(14) இந்தியாவில் மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் குழுக்கள் (நக்சலைட்டுக்கள்), மக்களுமே எமது தேசவிடுதலைப்போராட்டத்தின் நேசசக்திகள்.
(15) சிங்களமக்களும் எமது நேசசக்திகள்.
(16) முஸ்லீம் மக்களுக்கு தமிழீழத்திற்குள் சுயாட்சி ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இவைதவிர வேறுபல விடயங்களையும் அங்கத்துவவிதியும், திட்டமும் கொண்டுள்ளது.

மற்றும் பிரதேசரீதியாக தேவையான நபர்களை மத்தியகுழு தெரிவு செய்யுமென

www.tamilarangam.net

கூறப்பட்டது. மகாநாடு முடிந்தவுடனேயே மீண்டுமொரு மகாநாடு NLFTக்கு தெரியாமல் கூட்டப்பட்டது. இது NLFTயில் இருந்த ஒரு பகுதியால் கூட்டப்பட்டது. NLFTயில் முன்னெறியவர்களை கம்யூனிஸ்டுக்கள் என வரையறுக்கப்பட்டவர்களை கொண்ட 15பேர் கூட்டப்பட்டனர். அது NLFTக்குள்எப்படி கட்சியை கட்டுவது, NLFTக்குள் எப்படி வேலைசெய்வது எனவும் விவாதிக்கபட்டது. அங்கு மத்தியகுழுவும் தெரிவு செய்யப்பட்டது. அதில் விசு, இராகவன், இரமணி, பிரபா, அன்ரன் ஆகியோரே. இங்கு ஒரு விடயத்தைகுறிப்பிடவேண்டும், முன்பு இராணுவ உருவாக்கத்தில் மையக்குழுத்தலைமை தெரிவு செய்யும் போது கம்யூனிஸ்டுக்களின் தலைமை அவசியம் என கூறப்பட்டது. அந்தவகையில் மையக்குழு உறுப்பினர்கள் அன்ரன், இராகவன், சுகுமார் இராணுவத்தில் கம்யூனிஸ்டுக்கட்சி சார்பாக பெரும்பான்மையிருக்க தெரிவுசெய்யப்பட்டனர்.

இங்கு மத்தியகுழுவுக்கு தெரிவுசெய்யப்பட்டவர்கள் பற்றி ஆராய்வது அவசியமானது.

விசுவானந்ததேவன் (மோகன்)

சீமேந்து தொழிற்சாலையில் 1982க்கு முன் பொறியியலாளராக கடமையாற்றியவர். இவர் மார்க்சிசத்தின்பால் பூரணமான தெளிவான சிந்தனையைக்கொண்டிருக்க வில்லை. இவர் தன்கருத்துக்களை ஏற்காதவர்கள் மீது, அவர்கள் தவறுவிடும் போது பார்த்திருந்து தாக்கும் தன்மையைக்கொண்டவர்இவர் தீவிரமானவொர் இயங்கு சக்தி. எதிரி பற்றி எச்சரிக்கைகள் இன்றி செயற்படுவார் (பின்னர் இவரது மரணமும் இப்படித்தான் நடந்தது). தான் ஒன்றை செய்ய எண்ணினால் யார் தடுத்தாலும்(மத்தியகுழு உள்ளிடாக) அதையும் மீறி செய்வார். ஒரு ஸ்தாபனத்துக்கு கட்டுப்படுவதை விடுத்து, தனக்கு ஸ்தாபனம் கட்டுப்படவேண்டும் என விரும்புவார். இந்த இயல்பே பின் NLFT; PLFTயாகஉடைய முக்கிய காரணங்களில் ஒன்றாகும். இவ்வுடைவின் போது ஸ்தாபன ஒழுங்கை மீறி அமைப்பை எதிரிக்கு அம்பலப்படுத்தி இயக்கம் முற்றாக அழியக்காரணமானவர். இவர் திரிபுவாதத்தின் ஆதிக்கத்துக்குள் (நவமார்க்சிசத்தின்) சென்றிருந்தார். இக்கருத்துகளை வெளிநாடுகளிலிருந்த சிலரும் இந்தியாவிலிருந்த எஸ்.வி.இராஜதுரை.... போன்றோர் தொடர்புகள் மூலம் பெருமளவில் பெற்றுக்கொண்டதுடன் மட்டுமின்றி இது தொடர்பாக விவாதிக்க முன்வராமல், தன்னுடன் இருந்தவர்களுக்கு போதித்தும் வந்தார். போராட்டத்தின் பக்கத்தில் நேர்மையாக போராடிய போராளியாவார். இவர் கட்சியின் மத்தியகுழுவுக்கு தெரிவுசெய்யப்பட ஓரளவு மார்க்சிய அறிவும், தீவிரசெயற்படும்தன்மையும், நெருக்கடியின் போது முடிவுகளை எடுக்கக்கூடியவர் என்பதாலேயே.

இராகவன்

இவர் புத்தகத்தை ஒப்புவிக்கும் மார்க்சியவாதி, மார்க்சிய புத்தகங்களை படித்து விட்டு பக்கங்கள் சொல்லி புரட்சியை (NLFTயை) வழி நடத்தியவர். இவர் இந்தியா சென்ற காலங்களில் மார்க்சிய லெனிஸ்ட் குழுக்களுடன் (நக்சலைட்டுக்கள்) NLFTக்கு இருந்த தொடர்புகளுடாக அவர்களின் கருத்துக்கள் வேலைநடைமுறைகளை அப்படியே NLFTயில் பயன்படுத்தியவர். இவர் ஒரு புத்திஜீவி. இவர் முன்வைத்த கருத்துக்களுக்கே தான் வேலை செய்யாதவர். ஒரு முழுமையான சோம்பேறி. இயக்கவேலைகளை கண்காணிக்கவென எல்லாவமைப்பு

www.tamilarangam.net

ஊழியர்களை தன் வீட்டில் சந்திக்கும் ஒரு நிலைமையை வளர்த்து, அமைப்பின் இரகசியத்தன்மையை உடைத்து, இன்று அமைப்பு முற்றாக அழிய விசுவுக்கு சலிக்காத வகையில் செயற்பட்டவர். இவர் ஒரு சமரசவாதி. போராட்டம் தீவிர மடையும் போது, நெருக்கடி ஏற்படும் போது சமரசத்தை எப்பொழுதும் எல்லா விடயத்துக்கும் கைக்கொண்டவர். இவை கட்டுரையின் தொடர்ச்சியில் பல உதாரணங்கள் மூலம் காட்டப்படும். இவர் எப்பொழுதும் இயக்கத்தை தனது கட்டுப்பட்டுக்குள் வைத்திருக்க முயன்றார். அந்தவகையில் இராணுவத்திலும், கட்சியிலும் பின் NLFT மத்தியகுழுவுக்குள்ளும் இருந்தார். இவர் மற்றவர்களின் கடிதங்களை உடைத்துப்பார்த்தும், வேறு நபர்களின் காதல் நிகழ்வுகளை களவாக பார்த்து ரசிக்கும் உணர்வு கொண்டவர். இச்சம்பவங்களை பயன்படுத்தி தனக்கு எதிரான கருத்து வரும்பொழுது பயன்படுத்துபவர். இவர் முன்பு LTTEயின் ஆரம்ப காலவுறுப்பினராக இருந்தவர். PLOT,LTTEயிலிருந்து உடைந்தபோது வெளியேறி யவர். அவ் LTTEயின் கருத்து முரண்பாடு முற்றிய போது அதை தனக்கு சாதகமாக்கி இந்திய கழிசடை புத்தகங்களை (மன்மதலீலை, ரதிவந்தாள்...) இவைகளை LTTEயின் பணத்தைக்கொண்டு வாங்கியவர். இதை பின்னால் ரயா LTTEபிடிபட்டிருந்த போது மாத்தையா சொன்னதோடு, செக்ஸ் அறிவியல் புத்தகம் வாங்கியிருப்பின் பரவாயில்லை. மிகமோசமான கழிசடை புத்தகங்கள் வாங்கியவர் என குறிப்பிட்டார். இதை பின்னர் LTTEயிலிருந்து வெளியேறிய ஆரம்பகால உறுப்பினரும், NLFT மத்தியகுழு உறுப்பினருமான ஐயர் உறுதிசெய்தார். தனக்கு எதிரான கருத்துள்ளவர்களை திட்டமிட்டு பழிவாங்கும் தன்மை கொண்டவர். தனக்கு எதிரான கருத்து பலமாகவிருந்தால் அதை ஆதரிப்பது போல் நடித்து ஆதரித்தபின் திட்டமிட்டு அதற்கு எதிராக குழுவடிப்படையில் செயற்படுபவர். இவைகளை பின்னால் பல உதாரணங்கள் மூலம் பார்க்கலாம். இவர் ஒரு பயந்த சுபாவம் கொண்டவர். இராணுவ நடவடிக்கைகள் இவர் சம்பந்தப்பட்ட சிலவேளை திடீரென நிறுத்தி (முன் எடுக்கப்பட்ட முடிவை) அதாவது திடீரென குறிப்பிட்ட இராணுவ நடவடிக்கைக்கு வராமல் விட்டுவிடுவார். சில நடவடிக்கைகளை, கருத்துக்களை சொல்லியபின் அக்கருத்து தொடர்பாக, பின்னால் பிரச்சனைக்கு வரும் போது வேறு யாரிலும் மாற்றிவிடுவார். (தீப்பொறியுடன் நடந்ததை பின் விளக்குகின்றோம்) சில கருத்துக்களை, செயற்பாடுகளை பிழையென தெரிந்தும் செய்யநினைப்பின்; வேறு நபர்களூடாக செய்வார். மொத்தத்தில் இவர் ஒரு புரட்சிக்கு தலைமை தாங்கும் இயல்புகளற்ற ஒரு புத்திஜீவியாக செயல்பட்டார். தலைவர்கள் நிரந்தரமானவர்கள் என லெனின் சொன்னதை சொல்லி தன்னைத்தானேதலைவராக அடிக்கடி சொல்லிக் கொள்வார். நெருக்கடியின் போது ஒரு முடிவை எடுக்காது அதிலிருந்து விலகி சென்றுவிடுவார். இவர் கம்யூனிஸ்ட்கட்சி மத்தியகுழுவுக்கு தெரிவு செய்யப்பட்டார். மார்க்சியத்தை மனப்பாடம் செய்து வைத்திருந்தும், புத்தகத்தை அப்படியே கக்கும் வாய்வீச்சு கொண்டவராக இருந்ததுமே கம்யூனிஸ்ட் கட்சிக்கு தெரிவுசெய்யப்பட காரணமாகும்.

*பிரபா*

---

இவர் முன்பு புரட்சிகம்யூனிஸ்ட் கட்சி (ரொட்ஸ்கி) மத்தியகுழுவிலிருந்தவர். KKS சீமெந்து தொழிற்சாலையில் போமனாக கடமையாற்றியவர். 1983இன் ஆரம்பத்தில் NLFTக்கு அறிமுகமான இவர், ஆரம்பத்தில் அரசியல் வகுப்புக்களையெடுத்தார். இவர் மக்களுக்கு விளங்கும் வகையில் எழுதும் திறமைபடைத்தவர். கவிதைகளை

எழுதுமாற்றலுடையவர். இவர் 1983க்குப்பின் அமைப்பில் தீவிரமாக செயற்பட்டவர். 1988இல் அமைப்பை விட்டு விலகும்வரை அமைப்பின் எல்லாமட்டத்திலும் மதிப்புக் குரியவராக இருந்தவர். இதை விட PLFT, மற்றைய இயக்கத்தில் இருந்து விலகியவர்களும் இவரை நேசித்தனர். இவர் மார்க்சியத்தில் முழுமையாக இல்லாவிட்டாலும் ஒரு அமைப்பை தலைமை தாங்குமளவுக்கு மார்க்சியத்தை அறிந்திருந்தார். பிழையான கருத்துக்கள் மீது தீவிரவிமர்சகராக இருந்த இவர், நெருக்கடிகளுக்கு முகம்கொடுக்க தானே முன்செல்லும் தன்மையும், மற்றைய ஊழியர்களுக்கு முன்மாதிரியாகவும் இருந்தார். 1988 வரை அமைப்பு, அமைப்பு வடிவத்தை தொடர்ந்து பேண இவர் ஒரு முக்கிய சக்தியாகவிருந்தவர். இவரும் சண்முகம், சிறியும் இல்லையெனில் அமைப்பு எப்போதே சிதறியிருக்கும். இவர் அமைப்பு நெருக்கடிகளை சந்திக்கும் சிலவேளை கவனிக்காமல் விட்டு விடும் இயல்பு கொண்டவர். இவரின் மறதிக்குணம் இவரின் உயிருக்கு பலதடவை ஆபத்தை ஏற்படுத்தியிருக்கும். ஆனால் அதிர்ஸ்டவசமாக தப்பியவர். ஒன்றைச் செய்தால் அதில் மட்டும் முழுமையாக மூழ்கி விடுவதால் அதற்கப்பால் எழும் பிரச்சனைகளைப்பற்றி அலட்டிக்கொள்ளாமல் விடும்தன்மை இவரின் முக்கிய குறைபாடு. நெருக்கடியின் போது தானே ஒரு முடிவையெடுத்து போராட்டத்தை வழிநடத்துவார். அடுத்த மத்தியகுழு கூட்டம் வரை ஒத்திப்போடமாட்டார். இவர் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியகுழுவுக்கு தெரிவு செய்யப்பட காரணமாக விருந்தவை மார்க்சியம் பற்றிய அறிவும் தீவிர செயற்பாடும், மற்றவர்களுக்கு முன்மாதிரியாக தானே செயற்படும் தன்மையும்,நெருக்கடியின் போது சுயமாக முடிவு எடுக்கும் தன்மையுமே.



இரமணி

இவர் ஒரு புத்திஜீவித்தன்மையைக்கொண்டவர். புத்தகங்களைப்படித்து விட்டு அப்படியே செயற்படுத்த, இராகவனிலிருந்து வேறுபட்டதன்மையுடன் தானே அதற்காக செயற்படுவார். இவரும் தீவிரஇயங்கு சக்தியாக செயற்பட்டவர். இவர் யாழ் மருத்துவக்கல்லூரியில் தன் படிப்பை 1983இல் இயக்கத்துக்காக கைவிட்டு முழுமையாக செயற்பட்டவர். இவர் எப்பொழுதும் இராகவனின் கருத்துக்கு எதிராக ஒருநாளும் போராடியதில்லை. இராகன் சொல்வதை திரும்ப அப்படியே சொல்வார். இவர், இராகவனின் கருத்துக்கள் மீது மாற்றுக்கருத்து இராகன் இல்லாவிடத்து வைக்கும் போது குழம்பிச்சென்று, மீண்டும் இராகவனைச்சந்தித்து உறுதியாக வருவார். ஏதாவது கருத்தினை இவருக்கு மாறாகமுன் வைத்தால் லெனின்,மாவோ.. நூல்திரட்டுப்பக்கத்தை பொருத்தமில்லாத வகையில் சொல்லி தன்னைதைக்கவைக்கும் இயல்பு கொண்டவர். இவர் மக்களிடம் இலகுவானவழியில் விளங்கப்படுத்தும் தன்மையற்றவர். புத்தகத்தில் உள்ளதையே அடிமட்டமக்களுக்கும் கூறும்மொரு புத்திஜீவி. நெருக்கடியின் போது அதற்கு ஒரு தீர்வைத்தானாக முன்வைக்க மாட்டார். அப்படியே அடுத்தமத்தியகுழு கூடும்வரை அல்லது இராகவனைச்சந்திக்கும் வரை அப்படியே விட்டுவிடுவார். இவர் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியகுழுவுக்கு தெரிவுசெய்யப்பட நன்கு மார்க்சியத்தை மனப்பாடம் செய்திருந்ததாலும், அதை அப்படியே தீவிரமாக செயற்படுத்தும் தன்மை கொண்டவர் என்பதாலும்.

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அன்டன்

இவர் வட்டுக்கோட்டை தொழில்நுட்பக்கல்லூரியில் விரிவுரையாளராக இருந்தவர். இவர் மார்க்சியத்தின்பால் பற்றுள்ளவராக இருந்தார். இவர் முன்னைய பிரதேச கமிட்டியிலும் மத்தியகுழுவிலும் பின் PLFTயிலிருந்த போதும், இவர் அரசியல் ரீதியில் அமைப்பின் தேவையோடு வளர்ந்து வருபராகவேயிருந்தார். இவர் ஒரு நிர்வாகஅதிகாரியாகவும் இருந்தார். 1984 நடுப்பகுதிவரை நிதி, ஆயுதங்களுக்கும் பொறுப்பாகவிருந்தார். இவர் மக்களிடம் செல்வதில்லை. இவர் இராணுவ வட்டங்களுடனேயே இருந்தார். இவர் இராகவன், விசுவின் கருத்துக்களுக்கு காலத்திற்குகாலம் மாறிசெயற்பட்ட இவர், பின் PLFTயுடன் இணைந்தார். இவர் கம்யூனிஸ்ட் கட்சிக்கு தெரிவுசெய்யப்பட இராகவன் விசுவுக்கு தலையாட்டும் தன்மையும் முக்கியகாரணம். இவர் மார்க்சிய அறிவோ, செயற்படும் தன்மையோ, நெருக்கடியின் போது முடிவுகளை எடுக்கும் தன்மையோ கொண்டிருக்கவில்லை. வெறும் இராணுவநடவடிக்கைகளை (அதுகூட முழுமையாக திறமையாக செய்தாரா என்பதும் கேள்விக்குட்படுத்தப்பட வேண்டியதே) மட்டுமே அவரின் செயற்பாடு. இராகவன் அன்டனுக்குமுள்ள முக்கியவேறுபாடு; இராகவன் மார்க்சியத்தை பாடமாக்கி அப்படியே துப்பும் திறமை கொண்டிருந்தார். இவர் தன்மீது அதீத நம்பிக்கையும் எதிரிகளை இனம் காணவும், எதிரியும் சதிகளை முறியடிக்கும் தகுதியை கொண்டிருக்கவில்லை.

சிறி

இவர் 1983இல் மத்தியகுழுவுக்கு ஆரம்பத்தில் தெரிவுசெய்யப்படவில்லை. இராகவன் மத்தியகுழுவிலிருக்க மறுத்ததினால் இவர் தெரிவு செய்யப்பட்டார். 1983க்கு முன் தீவிரமாக செயற்பட்டவர். 1983இல் மார்க்சியஅறிவை பெரிதாக கொண்டிருக்கவில்லை. ஆனால் போராட்டத்தின் நடைமுறையனுபவத்தில் அரசியலை பெற்றுக்கொண்டார். இவர் மார்க்சியத்தில் ஓரளவுக்கும், தீவிரசெயற்படும் தன்மையும் நெருக்கடியின் போது முடிவுகளை எடுக்கும் தன்மையும் கொண்டிருந்தார். இவர் 1984இல் அன்டனுக்குப்பின் ஆயுதம், நிதிக்குப்பொறுப்பாக இருந்தார். அத்துடன் இராணுவத்துக்குள்ளும் ஆதிக்கம் செலுத்தினார். 1985இல் PLFTயின் உடைவின் பின் இராணுவக்குழுவின் ஒரு உறுப்பினரானார். எப்பகுதியில் பிரச்சனையெனிலும் அங்கு தலையிட்டார். தன்கருத்துக்கு உறுதியாகவிருந்தார். ஆனால் இவரின் மார்க்சியஅறிவு பற்றக்குறை அமைப்புக்குள் விமர்சனத்தை வைக்கத்தவறினார். PLFT, NLFTஉடைவில் பிரபா, சிறி, சண்முகம் இணைந்து ஒரு சரியானவழியை வைத்திருப்பின், PLFT உடைவு ஏற்படாது சரியான அமைப்பு உருவாகியிருக்கும். இதற்கான பொறுப்பு இம்மூவரையும் சாரும். இது சம்பந்தமாக PLFT உடைவை ஆராயும் போது ஆராய்வோம். இவரின் குறைபாடுகள் மாறுபட்ட கருத்தினை கூறியதுடன் கைவிட்டுவிடுவது (தொடர்ந்து போராடாது), சில செயற்பாட்டில் நிருவாகத்தன்மையும் பிரதிபலித்தது. இவர் 1988இல் அமைப்பைவிட்டு விலகும் போது அமைப்பின் எல்லாமட்டத்திலும், அமைப்புக்கு வெளியே வேறு இயக்கத்திலிருந்தவர்களாலும் நேசிக்கப்பட்டார். இவருக்கு அப்பால் பிரபா, முகத்தார் மட்டுமே எல்லோராலும் நேசிக்கப்பட்டார். 1988இல் இவர் இயக்கத்தை விட்டு விலகியபின் நிதிமோசடிக்குற்றச்சாட்டு இராகவன், இரமணி, தாஸ்(இவர் EPRLF பிரதேசக்கமிட்டியில் இருந்தவர் பின் NLFTயில் வேலை செய்தவர்) முன் வைத்தனர். இக்குற்றச்சாட்டு திட்டமிட்டு வைக்கப்பட்டது. இது இராகவனின் பழிவாங்கும் நடவடிக்கையே. இதற்கான விளக்கம் ஆதாரங்களை தொடர்ந்து கட்டுரையில் விரிவாக முன்வைக்கின்றோம்.

மிகுதி அடுத்த இதழில்...



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**1983க்கு முன் N.L.F.T யின் வரலாறு**

# தமிழீழ தேசிய விடுதலை முன்னணியின் வரலாறு

கடந்த சில வருடங்களாக தமிழ் மக்களின் விடுதலைக்காகச் செயற்பட்டு வந்தநாம், காலத்தின் தேவை கருதி 1983 செப்டம்பரில் எம்மைப் புனரமைத்து தமிழீழ தேசிய விடுதலை முன்னணி (NLFT) எனும் பெயரில் செயற்பட ஆரம்பித்தோம். அன்றைய சூழ்நிலையில் சில நடைமுறைத் தேவையையொட்டி எமது கடந்த காலம்பற்றியோ, எமது தோற்றுவாய் பற்றியோ திட்டவட்டமாக மக்கள்முன் வைக்க முடியவில்லை. எமது வரலாறு, கடந்தகால அனுபவங்கள் என்பவை பற்றி மக்கள் முன் வைக்க வேண்டிய அவசியம் எமக்கு தற்போது ஏற்பட்டுள்ளது. மக்களின் எதிர்பார்ப்பை நாம் அலட்சியம் செய்துவிட முடியாது. எம்மைப் பற்றிய சந்தேகங்களைத்தெளிவு படுத்தவும் சில இயக்கங்களின் தவறான பிரச்சாரத்தை முறியடிக்கவும் வேண்டி மக்கள் முன் எம்மைப் பற்றி தெளிவுபடுத்த விழைகிறோம்.

தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறை அதிகரிக்கும்போது தரப்படுத்தல் முறை கொண்டுவரப்பட்டது. இதன்பின் இளைஞர்களால் தமிழீழம் என்னும் கோரிக்கை முன் வைக்கப்பட்டு அது பிரபல்யமானது. இக்கோரிக்கை பிரபல்யமடைவதைக் கண்ணுற்ற தமிழ்ப் பாராளுமன்ற அரசியற் கட்சிகளான தமிழரசுக் கட்சி, தமிழ்க் காங்கிரஸ் என்பவை இணைந்த கட்சியான தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழீழக் கோரிக்கையை முன் வைத்தது. இதனால் தமிழீழம் எனும் கருத்து மக்களிடையே மென்மேலும் வளரப் பெற்றது. இத்துடன் கூடவே தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறையும் மேலும் அதிகரித்தது. தேசிய இனப் பிரச்சினை கூர்மையடைந்ததைத் தொடர்ந்து இடதுசாரி இயக்கங்களிலிருந்த, முன்பு சிந்திக்காத பலரும் இவ்வேளையில் தேசிய இனப் பிரச்சினை பற்றி சிந்திக்கத் தலைப்பட்டனர். பலரது கவனமும் தேசிய இனப் பிரச்சினையின்பால் ஈர்க்கப்பட்டது. இக்கட்டத்தில் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி (மா. லெ.)யில் இருந்த பல தோழர்களிடையும் தேசிய இனப் பிரச்சினையின்பால் கவனம் திரும்பியது. தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வு என்ன என்பது பற்றிய சர்ச்சைகள் உருவாகின. நாட்டின் யதார்த்த நிலையில் தமிழ் மக்களுக்கான ஒரு தனியான அமைப்பு உருவாகுவதும், அதன் வழிகாட்டலில் தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டம் முன்னெடுக்கப்படுவதும், காலத்தின் தவிர்க்க முடியாத தேவையெனும் கருத்து, மறைந்த தோழர் கார்த்திகேசனால் முன்வைக்கப்பட்டது. கடந்த காலங்களில் இடதுசாரி இயக்கங்கள் தமிழ் மக்களின் பிரச்சினைக்கான சரியானதொரு தீர்வை முன் வைக்கவில்லை. அதுமட்டுமல்ல, அவர்களும் கூட பாராளுமன்ற அரசியற் சேற்றில் மூழ்கி இனவாத நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இதனால் தமிழ் மக்கள் இடதுசாரிகளை நம்பும் நிலையில் இல்லையெனும் கருத்தும், இரு இனங்களுக்குமிடையில் குரோதம், தமிழ், சிங்கள முதலாளித்துவக் கட்சிகளினால்வளர்க்கப்பட்டு பரஸ்பர நம்பிக்கையின்மை ஏற்பட்டுள்ளது எனும் கருத்தும், மற்றும் நாட்டில் பலமான புரட்சிகர இயக்கமின்மையும் தமிழ் மக்களுக்கான தனியானதொரு இயக்கம் தோன்றுவதற்கான காரணங்களாக முன் வைக்கப்பட்டன. தமிழ் மக்களுக்கான தனியானதொரு இயக்கம் தேவையெனும் கருத்து முன்வைக்கப்பட்டாலும், அவ்வியக்கத்தின் இலக்கு, போராட்ட வழி முறை, இயக்கப் பண்பு, ஸ்தாபன வடிவம் என்பவை பற்றி எதுவிதமான திட்டவட்டமான கருத்தும் முன் வைக்கப்படவில்லை.

தமிழ் மக்களுக்கான தனியானதொரு இயக்கம் தேவையெனும் கருத்து 1975ம் ஆண்டு கடைசிப் பகுதியிலேயே முன்வைக்கப்பட்டது. 1975 செப்டம்பரில் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி (மா. லெ) யிலிருந்த தோழர்கள் யாழ்ப்பாணத்தில் கூடி தேசிய இனப் பிரச்சினை பற்றி ஆராய்ந்தனர். தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறைக்கெதிராகப்

போராட வேண்டுமெனவும், பிரிவினையை எதிர்ப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது. 'தனி நாட்டுக் கோரிக்கை அந்நிய நாடுகள் தலையிட வாய்ப்பளிக்கும்.' எனவே இக் கோரிக்கை பிற்போக்கானது எனும் கருத்து பிரிவினையை எதிர்ப்பதற்குக் காரணமாக முன் வைக்கப்பட்டது பிரிவினையா? இல்லையா? என்பதை விட்டு தேசிய ஒடுக்குமுறைக் கெதிராகப் போராடல் எனும் கோஷத்தை முன் வைத்தால் போதுமானது எனும் கருத்து ஒரு சிலரால் முன் வைக்கப்பட்டாலும், பெரும்பான்மையோரின் முடிவான தேசிய ஒடுக்குமுறைக்கும், பிரிவினைக்கும் எதிராகப் போராடல் எனும் கருத்து முடிவாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. இவ்விதம் கூடி முடிவுகள் எடுக்கப்பட்டாலும் குறிப்பிடத்தக்க செயற்பாடுகள் எதுவுமிருக்கவில்லை. பெயருக்கு ஒரு சில கருத்தரங்குகள் மட்டும் நடத்தப்பட்டன. 1977 தேர்தலுக்கு அண்மித்த காலத்தில் சில தோழர்கள் தீர்மானித்து தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணி எனும் பெயரில் சில உதிரியான நடவடிக்கைகளைமேற்கொண்டனர். ஆங்காங்கே சிலகருத்தரங்குகள் நடத்தப்பட்டன; சில சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன; இத்துடன் அதன் முதற்கட்ட வேலை முடிவுற்றது. இக்கட்டத்தில் செய்யப்பட்ட வேலைகள் திட்டவட்டமானதொரு வேலைத் திட்டமின்றி ஏதோ செய்ய வேண்டுமென்பதற்காக மனம்போன போன போக்கில் செய்யப்பட்டன. இதனைச் சிலர் இடது சாரிக் கட்சிகள் தொழிற் சங்கம் அமைக்கும் பாணியில் பார்த்தனர். இன்னும் சிலர் கட்சி நேரடியாக தமிழ் மக்களிடம் சென்றால் ஆட்களைப் பிடிக்க முடியாது. இம்முறையில் சென்றால் ஆட்களைப் பிடிப்பது இலகுவாக இருக்கும் எனச் சிந்தித்தனர் ஒரு சிலர் மட்டுமே இது காலத்தின் தேவை, அதாவது வரலாற்று ஓட்டத்தில் தமிழ் மக்கள் தனித்துப் போராட வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர் என்றுணர்ந்தனர். அப்படி உணர்ந்தபோதிலும் சரியானதொரு அரசியல் மார்க்கத்தை இவர்கள் முன் வைக்கவில்லை இதனால் இவர்களாலும் எதுவிதமான ஆக்கபூர்வமான பங்களிப்பையும் நல்க முடியவில்லை. 1977ம் ஆண்டு ஆகஸ்ட் இனக் கலவரத்தின் பின் தோழர் கார்த்திகேசன் மறைந்ததுடன் தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணியின் செயற்பாடுகள் யாவும் ஒய்விற்கு வந்தன.

இப்படிச் சில கால ஒய்விற்குப் பின்னர் ஏதோ ஒரு உந்துதல் மீண்டும் செயற்பட வேண்டுமென்று தள்ளியதால், 'தமிழ் மக்கள் ஜனநாயகமுன்னணி' அமைப்பைக்கட்டி வேலைகளை முன்னெடுக்க வேண்டுமென 1979 முதல் பகுதியில் ஓர் அமைப்புக் கமிட்டி உருவாக்கப்பட்டது. அக்கமிட்டியும் முன்னையதைப் போன்று அமைப்புக்கான வேலையிலீடுபடாது பெயரை மட்டுமேகொண்ட, செயற்பாடற்ற கமிட்டியாக இருந்தது இக்கால கட்டத்தில் ஒருசிலகருத்தரங்குகள், கலந்துரையாடல்கள் நடத்தப்பட்ட போதிலும் இவை தொடர்ச்சியாகவோ, சீராகவோ திட்டமிடப்பட்டோ செய்யப்படவில்லை. இவ்வேலைகளிலெல்லாம் அமைப்புப் பாங்கற்ற உதிரித்தன்மையே பெரும்பாலும் வெளிப்பட்டது. இதனைத் தொடர்ந்து 1979ல் வட பகுதியில் அவசர காலநிலைபிரகடனப்படுத்தப்பட்டுஇளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து தமிழ் மக்கள்ஜனநாயகமுன்னணியை அமைப்பதற்கான அமைப்புக்கமிட்டி செயலிழந்தது. இந்நிலையில் சில தோழர்கள் தொடர்ந்தும் வேலை செய்யமுடியும் என்ற நம்பிக்கையில் முயற்சி செய்து 1979 செப்டம்பரில், ஏற்கனவே தொடர்புள்ள, செயற்பட விரும்பிய தோழர்கள் அனைவரையும்கல்முனையில் ஒன்று கூட்டி சில தீர்மானங்களை எடுத்தனர். தேசிய ஒடுக்குமுறைக்கு எதிராகப்போராடும் தனித்துவமும், சுதந்திரமும் கொண்ட ஓர் அமைப்பாக தமிழ்மக்கள் ஜனநாயக முன்னணி என்னும் பெயரில்தொடர்ந்து செயற்படவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. முன்பே தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணியெனும் பெயர் பாவிக்கப்பட்டாலும் 1979 செப்டம்பரில் தான் தமிழ்மக்கள் ஜனநாயக முன்னணி அமைப்பாகப் பிரகடனப் படுத்தப்பட்டது மேலும் ஒரு மாநாடு கூட்டப்பட்டு தீர்மானிக்கப்படும் அரசியல் மார்க்கத்தின் அடிப்படை

(தொடரும்)


நன்றி இலக்கு

www.tamilarangam.net

**கனடாவில்...**

## பாசிசப்புலிகளின் துப்பாக்கிப்பிரயோகம்

கனடாவில் 'சங்கமம்' என்னும் வானொலியை நடத்திவந்த இளையபாரதியை, புலிகள் அவர் இல்லத்தில் வைத்து அதிகாலை துப்பாக்கியால் சுட்டுக்கொல்ல முயன்றனர். வானொலியில் என்ன நிகழ்ச்சியை நடத்திவருகின்றார்கள் என எமக்குத்தெரியாவிட்டாலும், மாற்றுக்கருத்துக்களை மதிக்க மறுக்கும் புலிகளின் இந்நிகழ்வு துரோகத் தனமானது. ஈழத்தில் தாம் மட்டும் போராடுவதாக திமிர்தனமாக மார்தட்டும் பாசிசப்புலிகள், மாற்றுக்கருத்தை அங்கீகரிக்க மறுத்து படுகொலைகளை நடத்தும் புலிகளின் செயற்பாடும் ஈழப்போராட்டத்தில் துரோகத்தின் பக்கத்திலானது. மற்றவர்களை துரோகிகளேன கூறும் புலிகளும் உண்மையில் துரோகிகளே. அவர்கள் நான்கு வீரமான தாக்குதல்களை நடாத்தி கவர்ச்சியாக பிரச்சாரம் செய்து தம்மைப்பாதுகாக்க படாதபாடுபட்டுவரும் புலிகள் ஒருக்காலும் மக்களுக்கு விடுதலையைப் பெற்றுத்தரப் போவதில்லை. அவர்கள் மக்களுக்கு பெற்றுக் கொடுக்கப் போவது: இன அழிவையும், சமூதாயச் சீரழிவையும், அடக்குமுறையையும்தான். வெளிநாடுகளில் போதைவஸ்து கடத்தல், மிரட்டல், அடிதடி, துப்பாக்கிப்பிரயோகம் என காட்டுமிராண்டித்தனமாக செயற்படும் இவர்களின் செயற்பாட்டுக்கு எதிராக அனைவரையும் குரல்கொடுக்க கோருகின்றோம்.



************

www.tamilarangam.net



தொடர்பு முகவரி :-

SAMAR
BOITE - 188
BAT E
150, RUE LEOPOLD RECHOSSIERE
93300 AUBERVILLIERS
FRANCE

சந்தா அனுப்பவேண்டிய தபாற்கணக்கு :-

2.674.73 M
CENTRE DE CHEQUEES POSTAUX
75900 PARIS CHEQUES
FRANCE

சந்தா விபரங்கள் :-

| | | | |
|---|---|---|---|
| பிரான்ஸ் | 6 | பிரதிகள் | 60 F |
| | 12 | பிரதிகள் | 120 F |
| ஐரோப்பியநாடுகள் | 6 | பிரதிகள் | 100 F |
| | 12 | பிரதிகள் | 200 F |
| ஏனைய நாடுகள் | 12 | பிரதிகள் | 225 F |

அன்பளிப்பு

**வாசகர்களே ! உங்களிடமிருந்து ஆக்கங்களையும், ஆரோக்கியமான விமர்சனங்களையும் எதிர்பார்க்கின்றோம்.**

www.tamilarangam.net



யார் இந்த விமலேஸ்வரன் ? ஏகாதிபத்திய கைக்கூலிகளான பாசிச விடுதலைப்புலிகளால் நான்கு வருடங்களுக்கு முன் கடுவீதியில் வைத்து படுகொலை செய்யப்பட்ட ஒரு தேசபக்தன். 1986இல் தீவிரமடைந்த ஜனநாயகவிரோத போக்குக்கு எதிராக, யாழ் பல்கலைக்கழக மாணவர் தலைவனாக இருந்து: கருத்து, எழுத்து, பேச்சு சுதந்திரத்துக்காக போராடியவன். அதற்காக சாகும்வரை உண்ணாவிரதம் இருந்தவன் விமல் இந்திய, இலங்கை ஆக்கிரமிப்பு இராணுவத்துக்கு எதிராக ஆரம்பம் முதல் போராடியதுடன் துரோகிகள் புலிகளுக்கு எதிராகவும் மற்றும் 5ம் படையான புளொட், ஈ.என்.டி.எல்.எவ், ஈ.பி.ஆர்.எல்.எவ், ஈரோஸ் ஆகியவற்றிற்கு எதிராகவும் போராடியவன். புலிகளின் தீவிர தேடுதலைத்தொடர்ந்து 1986முதல் படுகொலை செய்யப்படும் வரை, ஒடுக்கப்பட்ட மக்கள் மத்தியில் தலைமறைவாக வாழ்ந்து, அவர்களை அணிதிரட்ட முனைந்தவன். தலைமைக்குரிய சிறந்த பண்புகளைக்கொண்ட அவனின் இழப்பு தேசவிடுதலைப் போராட்டத்துக்கு பாரிய இழப்பாகும்.

***************

**வெளியீடு – தமிழ் அகதிகள் இலக்கிய வட்டம்**

**(பதிவு செய்யப்பட்டது – 3/16956)**